Registered as a News Paper in Sri Lanka | දිනමුරසු වාරමලර් | பக்கம் 24 ரூபா 30.00
ஒக்ரோபர் 17 - 23, 2013

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1036

# தேசிய கூடாரத்துக்குள்



# திருட்டு ராஜாக்களா?

## ஆரையம்பதி மயானக்காணி அபகரிப்பு ஒரு பார்வை

## அமைச்சர் மேர்வினின் செயலாளர் கடத்தல் மர்மம் என்ன?

## அமெரிக்க நெருக்கடியும் உலகப் பொருளாதாரமும்

## பித்ருக்களின் கடமை

சூரியனும் சந்திரனும் சேரும் தினமான அமாவாசை தினம் தான் பித்ருக்களுக்கு மிகவும் உகந்த நாள். அமாவாசை தோறும் பித்ருக்களை மறக்காமல் வழிபட்டால் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். பித்ருக்கள் வாழும் இடம் பித்ருலோகம் என்றழைக்கப்படுகிறது.

அந்த உலகம் சூரியனுக்கும் அப்பால் பல லட்சம் யோ-சனை மைல் தொலைவில் இருப்பதாக புராணங்களில் கூறப்பட்டுள்ளது. பித்ரு லோகத்தில் இருப்பவர்களுக்கு பசி, தூக்கம் என்று எதுவும் கிடையாது. தட்பவெட்ப சூழ்நிலைக்கு ஏற்ப பசி ஏற்படலாம் என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு என்று கடமைகள் உள்ளன. அந்த கடமை-களை அவர்களுக்கு வரையறுத்துக் கொடுப்பது ஒளி நிலையில் இருக்கும் மகாவிஷ்ணு ஆவார். பொதுவாகவே ஆண்டவன் அனைத்து பித்ருக்களுக்கும் ஒரு கடமையை கொடுத்துள்ளார்கள்.

அந்த கடமையை நிறைவேற்ற பித்ருக்கள் அனைவரும் பாடுபடுகிறார்கள். பித்ருக்கள் தங்கள் குடும்பத்தில் உள்ள வாழும் இளைய தலைமுறைகளையும் வருங்கால தலைமுறையினரையும் தெய்வீக நெறியில் மேன்மைப்படுத்த வேண்டும் என்ற கடமை உணர்வுடன் இயங்குகின்றனர்.

## ஆன்மீகம் — திசைமாறா பயணம்

இயேசுவின் எருசலேம் நோக்கிய பயணத்தில் நடந்த ஒரு உரையாடலில் அவரைப் பின்தொடர்வதுபற்றிய சில கருத்துக்கள் இங்கே பரிமாறப்படுவதைப் பார்க்கிறோம். நிலை வாழ்வுபெற, எல்லோருமே எருசலேம் பயணத்தில் பங்கு கொள்ளவேண்டும். "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" லூக் 9'23. ஆகவே, தப்பமுடியாது, தவிர்க்க முடியாது, மாற்றுவழி கிடையாது.

நீயும் நானும் விரும்புவதுபோல அப்பயணம் அமைவதில்லை. சில சமயங்களில் நாம் விரும்பாதவைகள் வசதிகுறைவுகள் குறுக்கிடலாம். நம் வாழ்க்கைப் பயணத்தில் இவைகளை நாம் ஏற்று வாழத் தொடங்கும்போது இயேசுவோடு நாம் எருசலேம் பயணம் மேற்கொள்ளுகிறோம்.

இந்த எருசலேம் பயணத்தில் சில நேரங்களில் சில முடிவுகள் நம்மேல் சுமத்தப்படலாம். "இறந்தோரைப் பற்றிக் கவலைவேண்டாம். அவர்கள் அடக்கம் செய்யப்படுவார்கள். நீர் போய் இறையாட்சியைப் பற்றி அறிவியும்" (லூக் 9'60) மொத்தத்தில் எருசலேம் பயணம் ஒரு கலப்பையில் கை வைத்து உழுகின்ற சிறப்பான தொழில். பின்னால் திரும்பிப் பார்த்தால் தொழிலில் சுத்தம் இருக்காது. கவனம் சிதறும். பாதை மாறும். பல சிக்கல்கள் வந்துவிடும். திரும்பிப்பார்த்த லோத்தின் மனைவி உப்புத் தூணாய் மாறிய கதைதான். (தொடக் 19'26)

## இஸ்லாமியப் பொருளியல் 'ஸக்காத்'

இஸ்லாமியப் பொருளியலில் "ஸக்காத்" முக்கிய இடத்தை வகிக்கின்றன. அல்குர் ஆனில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ள எட்டுக் கூட்டத்தினர் மாத்திரமே ஸக்காத் பெற உரித்துடையவராவார். இவ் எட்டுக்கூட்டம் தவிர்ந்த எவருக்கும் ஸக்காத் உரித்துடையதாகாது.

ஸக்காத் உரிய முறைப்படி உரியவர்களுக்கு சேராமையினாலேயே ஏழைகள் இன்று அவதியுறுகின்றனர். ஏழைகளுக்கு எவ்வளவு தேவை இருக்கின்றதோ அந்த அளவு ஸக்காத்தையே அல்லாஹ் தனவந்தர்களுக்கு விதித்திருக்கின்றான். இது அவர்களால் சரியான முறையில் கொடுக்கப்படும்போது ஏழையும், பணக்காரனும் சந்தோஷமாக இப்பூமியில் வாழலாம்.

ஊர் மக்கள் ஒன்றுபட்டு உரியவர்களிடம் சென்று ஸக்காத்தை வசூலித்து உரியமுறையில் எட்டுக் கூட்டத்தாருக்கும் இதனை பகிர்ந்தளிக்கும்போது இதனால் எட்டுக் கூட்டத்தாரும் அதிகளவு பயன்பெறுவார்கள். இது தேவை உள்ளோரையும் சென்றடைந்துவிடும். ஆகவே நாம் அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ள ஸக்காத்தை வறியவர்களுக்கு வழங்கி வளம்சேர்ப்போம்.

எம்.சீ.கலீல், கல்முனை-05

## கவிதைப்போட்டி இல 1033



### உறவு

பாராட்டுக்குரியது

உன் சொத்து
தீயில் போனதால்
உன் உறவுகள்
தானாக போயின
உன் காலும்
போனாலும்
கவலைப்படாதே!
என் மேல் உனக்கு
உண்டு பாசம்
உன் மேல்
எனக்கு உண்டு
விசுவாசம்
இதுவே
நமக்கிடையிலான
உறவு இது
போதும் நாம் வாழ.

ஜெ.ஜெயலக்ஷன்,
கோண்டாவில்.

## கவிதைப் போட்டி இல 1036



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 21. 10. 2013

கவிதைப் போட்டி இல. 1036 தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### எங்கே?

அன்ன நடையும்
அள்ளி வீசக் காசும்
என் வசமிருந்தபோது – என்னை
மொய்த்துக்கொண்டிருந்தோர்
இன்று எங்கே?
காசோடு காலும்போய்
ஊனமுற்ற எனக்கு
இன்று உதவுவது – இந்த
நன்றியுள்ள நாய் மட்டுமே.

அ.சந்தியாகோ,
கண்டி.

### நன்றி மறவாதே!

நன்றி மறந்து நட்டாற்றில்
விட்டுவிடும்
இரண்டு கால் மனிதனைவிட
நன்றிமறவாத நாலு
கால் நாயார்
தன் எசமானியை
சக்கர நாற்காலியில்
வைத்துத் தள்ளி செல்வது
நன்றியே தன் குலத்தாரின்
குணம் என்பதே.

ஆ.க.சூரியம், களுவாஞ்சிக்குடி

### நன்றியுள்ள நாய் வாழ்க!

நன்றி கெட்ட ஆறறிவு மனித
ஜென்மத்தைவிடவும்
நன்றியுள்ள
ஐயறிவு சடை நாய்
எவ்வளவோ
மேலானதென்பது
தள்ளுவண்டியில்
தள்ளும் போதே
தத்துவம் சகலர்க்கும் உணர்த்தி
நிற்கிறது
பலே... பலே...

K.M.A.அஸீஸ்,
சாய்ந்தமருது.

### ஊனம்

நாய்களுக்குப் புரிந்த
நல்லுணர்வு
நம்மில் சிலருக்கு
புரிவதில்லை!

எஸ்.பி.பாலமுருகன், பதுளை

### யுத்தம் தந்த பரிசு

அதிகமானவர்களுக்கு மரணம்!
அநேகமானவர்களுக்கு
அனாதை என்ற பட்டம்
பலருக்கு ஊனம்!
மிக அதிகமானவர்களுக்கு
வாழ்க்கை இழப்பு!

த.வர்ஷினி, மட்டக்களப்பு.

## உங்கள் பக்கம்

### வீதி திருத்தக் கோரிக்கை

வவுனியா நகரை அண்டியுள்ள சன நடமாட்டம் அதிகமுள்ள பிரதேசங்களில் மகா ரம்பைக்குளமும் ஒன்றாகும். மகா இறம்பைக்குளம் பிரதான வீதியை தினமும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் நூற்றுக்கணக்கான வாகனங்களும் பயன்படுத்தி வருகின்றன.

ஆனால், குறித்த வீதி கடந்த மூன்று வருடங்களாக புனரமைக்கப்படாமல் தேடுவாரற்ற நிலையில் காணப்படுகின்றது. மிகவும் மோசமாகப் பாதிப்படைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகின்ற இவ்வீதியினால் தேக ஆரோக்கியம்மிக்க பொதுமக்கள் பயணம் செய்வதே சவாலான விடயமாக இருக்கின்ற நிலையில் நோயாளர்கள், பிரசவத் தாய்மார்கள், அவசர சிகிச்சைக்காகச் செல்வோர் என்போரை இவ்வீதி வழியாகவே கொண்டு செல்லப்படுகின்றது. அதுவும் மழை காலம் என்றால் சொல்லவே தேவையில்லை.

இவ்வீதி முழுவதையும் மழை வெள்ளம் இஷ்ரத்துக்கு ஆக்கிரமிப்புச் செய்து வைத்திருக்கும். இக்காலத்தில் வெள்ளைச் சீருடை அணிந்து பாடசாலை செல்கின்ற மாணவ மாணவிகள் சேறுகளால் அலங்கரிக்கப்பட்ட சீருடையுடன் வீடு திரும்புவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இதுதொடர்பில் பல்வேறு தரப்பினருக்கும் அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் ஆரோக்கியமான முறையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே தினமுரசின் உங்கள் பக்கம் ஊடாக அனைவரினதும் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

எஸ்.கே.அலெக்ஸ்சாண்டர்,
வவுனியா.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com




## வாசகர் சாலை

### வாழ்த்துக்கள்

தினமுரசு வாரமலரில் இடம்பெறும் ஒவ்வொரு அம்சங்களுமே சிந்தையை தொடுகின்றது. உன்னில் இடம்பெறும் ஒவ்வொன்றையும் எவ்வாறு பாராட்டுவதென்றே தெரியாது. மேலும் உன் பணிதொடர வாழ்த்துக்கள்.

மேலும் வாசகநெஞ்சங்களுக்கு இனிய ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்களைத் தினமுரசு வாரமலர் 'வாசகர்சாலை' மூலம் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். ஆசிரியர்பீடம், ஊழியர்களுக்கும் பெருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

ஏ.சீ.எம். முஸம்மில்,
கெலிஓயா.

### வியப்பு!

மக்கள் மனங்களைக் கொள்ளை கொள்ளும் முரசுக்கு வணக்கம். தினமுரசில் இடம்பெறும் பல்சுவையான அம்சங்களால் பயன்பெறக் கூடியதாக இருக்கின்றது.

வாரத்துக்கு வாரம் முரசின் வளர்ச்சியைப் பார்க்கும்போது வியக்கத்தக்கதாக உள்ளது. விளை யாட்டுச் செய்திகள், 24ஆம் பக்கம், சினிமா என்பவை அற்புதம். முரசு இன்னும் அருமையான படைப்புக்களை வாசகர்களாகிய எமக்கு வழங்கவேண்டும்.

எம்.ஜெகன், மாத்தளை.

### வாழ்க பல்லாண்டு முரசே!

முரசே நீ வாழ்க! உன் அருமையான கவிதைகள் வாழ்க!! சொற்சுவை, செய்தி, கதை, கட்டுரை, முல்லானின் புண்ணிய கதை, சிந்தியாவின் சிரிப்பு, உலகை வியக்க வைத்த வர்கள், எனப் பலவிதமான உன்னத படைப்புக்களை சுமந்து நிற்கிறாய்.

நீ ஆயிரம் ஆண்டுகள் பிறந்து வளர்ந்து என்றும் இன்னும் மெருகேறி வளர என் இதழில் இருந்துவரும் பாராட்டுக்கள் முரசே. உன் பணி தொடர்க!

ஆர்.நளாயினி, நல்லூர்.

### திருத்தம் வேண்டும்

தினமுரசை பாராட்டவேண்டிய தேவையும் இருக்கிறது. அதேவேளை அதை விமர்சிக்கவேண்டிய கட்டாயமும் வாசகர்களாகிய எமக்கு உண்டு. முரசில் பல வகையான கட்டுரைகள் வருகின்றது. மக்களை வழிநடத்த வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கும் உண்டு. முரசு அதை தீவிரகவனத்துடன் செய்துவருவது பாராட்டத்தக்கது. ஆனால் முரசில் கட்டுரைகளைக் குறைக்கலாமே. பக்கம் பக்கமாக கட்டுரைகளாகவேதானே இருக்கின்றது.

ஆர்.கலைச்செல்வன், கைவேலி.

# அமைச்சர் டக்ளஸின் வழித்தடத்தில் பயணிக்கிறார் முதல்வர் விக்கி



நடைபெற்று முடிந்த வட மாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொதுவேட்பாளரான முன்னாள் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் வடமாகாண சபையின் முதலமைச்சராக பதவியேற்றுள்ள நிலையில் அவருடைய செயற்பாடுகள் கூட்டமைப்பின் முன்னைய செயற்பாடுகளுக்கு, மாறுபட்டு இருப்பதாகவும், மத்திய அரசாங்கத்துடன் இணக்கப்பாட்டுடன் செயற்படுவதன்மூலமே சிறப்பாக செயற்பட முடியுமென்பதில் நம்பிக்கை வைத்து செயற்படுவராக தெரிவதாகவும், இது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் சித்தாந்தத்தை ஒத்திருப்பதாகவும் புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

தேர்தலுக்கு முன்னர் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுவந்த முதல்வர் சி.வி.விக்கினேஸ்வரன் தேர்தலில் வெற்றிபெற்றதையடுத்து, மத்திய அரசாங்கத்துடன் பேசி ஓர் இணக்கப்பாட்டுடன் மாகாண சபையை வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியுமென்று தெரிவித்திருந்தார்.

அதன்பின்னர் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், 13ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்கு பூரணமான தீர்வை வழங்காத போதும் வடக்கு மக்களுக்கு அரசியல்ரீதியான ஓர் நிர்வாக அலகு இல்லாதபடியால் வடமாகாண சபை மூலம் அதனை ஏற்படுத்திக்கொண்டு மேலதிகமாக முயற்சிகளை இணக்கமான முறையில் மேற்கொள்ள முடியுமென்று தெரிவித்திருந்தார்.

இதனையே கடந்த 20 வருடங்களுக்கு மேலாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, "அரசியல் தீர்வு என்பது ஏதோவொரு இடத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவேண்டும். அதனை மாகாண ச்பையில் இருந்து ஆரம்பிப்பது சாத்தியமானது" என்று கூறிவருகிறார்.

அதேபோன்று வடமாகாண சபை அதிகாரங்களை சிறப்பாக செயற்படுத்துவதற்கு ஆளுநரின் ஒத்துழைப்பு, இன்றியமையாதது என்பதை புரிந்துகொண்டு அமைச்சர் டக்ளஸ் கடந்த காலங்களில் செயற்பட்டு வந்திருந்தார்.

அந்த யதார்த்தத்தை தற்போதைய முதல்வர் விக்கினேஸ்வரனும் புரிந்துகொண்டு செயற்படுவதை அவரின் செயற்பாடுகளிலிருந்து காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு காலமாற்றத்தை உணர்ந்துகொண்டு கடந்த 20 வருடங்களுக்கு மேலாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கையாண்டுவந்த நடைமுறைச் சாத்திய வழிமுறைகளின் வழியில் தற்போதைய முதல்வர் பயணிப்பதாக புத்திஜீவிகளால் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.



அதேவேளை அமைச்சரவை அந்தஸ்துள்ள, அமைச்சர் ஒருவருக்கு இருக் கின்ற சமஅந்தஸ்து முதலமைசருக்கும் இருப்பதால் வட மாகாண எதிர்கால அபி விருத்தி தொடர்பில் முதலமைச்சர் விக் கேஸ்வரனும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இணைந்து செயற்படமுடியுமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

# என்னதான் நடக்குது இங்கே!



**இலங்கை** வடக்கு மாகாண அரசில் அனைவரும் இன்னமும் பதவிப் பிரமாணம் செய்து முடியவில்லை. தொடர் ரிலே ஓட்டம்போல, ஒவ்வொருவராக பதவியேற்கும் நிகழ்வுகள் ஆங்காங்கே நடந்து கொண்டிருக்கின்றன.

முதல்வர் விக்கினேஸ்வரன் கொழும்பில், ஜனாதிபதி ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். அதை எதிர்த்து, அந்த பதவிப் பிரமாண வைபவத்துக்கு அவருடைய கூட்டமைப்பு சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் யாரும் போகாமல் பகிஷ்கரித்தார்கள். கூட்டமைப்பில் அங்கமான புளொட் தலைவர் சித்தார்த்தன் மட்டும் சென்றிருந்தார்.

அதையடுத்து யாழ்ப்பாணத்தில், முதல்வர் விக்கினேஸ்வரன் முன்னிலையில் அமைச்சர்கள், மற்றும் உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்வார்கள் எனச் சொல்லப்பட்டது.

அதற்கிடையே காட்சி மாறியது.

விடுதலைப் புலிகள் வெளிநாட்டு பிரிவுகளில் ஒன்றான நெடியவன் படையணியின் இணையத்தளம், "ஜனாதிபதியால் பதவிப்பிரமாணம் செய்துவைக்கப்பட்ட விக்கினேஸ்வரன் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்யமுடியாது என விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதி எழிலனின் மனைவி அனந்தி சொன்னார்.

அத்துடன் சிங்கக்கொடி சம்பந்தரையும், சிங்கள சம்பந்தி விக்கினேஸ்வரனையும் பாதுகையால் (நெடியவன் படையணி அளவுக்கு நாமும் வார்த்தைப் பிரயோகம் செய்வது சாத்தியமில்லை) அடிப்பேன் என்று பொங்கினார்" எனச் செய்தி வெளியிட்டது.

இந்தச் செய்தி மீடியாக்களில் பரபரப்பாக அடிபடத் தொடங்கவே, "வெற்றிவேல்.. வீரவேல்" என்ற முழக்கம் திக்கெட்டும் எழுந்தது. ஆனால் அனந்தியோ, "ஐயோ அப்படியெல்லாம் நான் சொல்லவே இல்லையே..." என்று அறிவிப்பு செய்தார்.

இதையடுத்து, முதல்வர் விக்கினேஸ்வரன் முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ள விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதியின் மனைவி ஆஜர்.

அவர் ஏன் முதல்வர் விக்கினேஸ்வரனை பகிஷ்கரிக்க வில்லை என்ற குழப்பத்தில் உள்ளது வெளிநாட்டு விடுதலைப் புலிகள் நெடியவன் படையணி. "எங்கே சறுக்கியது ஒப்பரேஷன்?"

அனந்தியுடன், தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களில், விக்கினேஸ்வரனுக்கு அடுத்த இடத்தில் அதிகப்படியான விருப்பு வாக்குகளை மக்களிடமிருந்து பெற்றவர். அவர் விக்கினேஸ்வரனை பகிஷ்கரிக்கும் முதலாவது ஆளாக இருப்பார் என்றே ஆளாளுக்கு சொல்லிக்கொண்டார்கள்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதியின் மனைவி கைவிட்டாலும், வேறு 9 பேர் உறுப்பினர்கள் கைவிடவில்லை. முதல்வர் விக்கினேஸ்வரனின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்யவிரும்பாமல், அந்த பதவியேற்பு வைபவத்துக்கு வராமல் 9 பேர் பகிஷ்கரித்தனர், தேர்தலில் 3ஆவது அதிகப்படியான வாக்குகளை பெற்ற சித்தார்த்தன் உட்பட!

மீதிப்பேர், பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 30. அதில் 9 பேர், பகிஷ்கரித்தனர். அதாவது சுமார் 30 சதவீத தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் முதல்வர் விக்கினேஸ்வரனை நிராகரித்தனர்.

முதல்வர் விக்கினேஸ்வரன், ஜஸ்ட் பதவிப் பிரமாணம்செய்து வைக்கும் அளவுக்குகூட தகுதியற்றவர் என ஒதுக்கித் தள்ளினர்.

பகிஷ்கரித்த 9 பேரும், விடுதலைப் புலிகள் இலங்கை இராணுவத்துடன் இறுதி யுத்தம் புரிந்த முள்ளிவாய்க்காலில் போய் நின்று பதவிப் பிரமாணம் செய்துகொள்வார்கள் என, மற்றொரு விடுதலை இயக்கமான ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

மற்றொரு விடுதலை இயக்கமான ரெலோவின் தலைவர் செல்வம் இதை ஆதரிக்கவில்லை. காரணம், அவர் ஏற்கனவே விக்கினேஸ்வரன் தலைமையில் யாழ்ப்பாணத்தில், நடைபெற்ற பதவியேற்பு வைபவத்துக்கு சென்று திரும்பியிருந்தார்.

அந்த இயக்கத்தின் தலைவர் கலந்துகொண்டாலும், அக்கட்சியின் சிறப்பு உறுப்பினர் சிவாஜிலிங்கம், கலந்துகொள்ளவில்லை. ரெலோ உறுப்பினரான அவர், முள்ளிவாய்க்காலில் பதவிப்பிரமாணம் செய்யப் போவதாக, ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷுடன் சேர்ந்துகொண்டார்.

அதற்கிடையே புளொட் தலைவர் சித்தார்த்தன், வட்டுக்கோட்டையில் ஜே.பி. முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். (ஐயோ.. உங்களுக்கு புண்ணியமாக போகும் "கே.பி. முன்னிலையில்" என்று படித்துவிடாதீர்கள்... ஜே.பி. (Justice of the Peace முன்னிலையில்!)

இவரது புளொட் இயக்கத்தில் இருந்து மூவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். அதில் இருவர் விக்கினேஸ்வரனை நிராகரிக்க, ஒருவர், விக்கினேஸ்வரன் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொள்ள ஏற்கனவே ஆஜராகியிருந்தார்.

அந்த ஒருவர், சம்பந்தனின் கட்சியான தமிழரசு கட்சியை சேர்ந்தவர். ஆனால் புளொட் இயக்கத்தின் ஒதுக்கீட்டில் சீட் பெற்று போட்டியிட்டு விட்டு, ஜெயித்தபின் இவர்களுக்கு டாடா சொல்லிவிட்டு, தாய்க்கட்சிக்கு போய்விட்டார். தாய்க்கட்சியும், "தொலைந்துபோன ஆடு திரும்பி வந்தது" என அவரை வாரி அணைத்துக் கொண்டது.

அதனால், விக்கினேஸ்வரன் பகிஷ்கரிப்பு உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஒன்று குறைந்தது.

ஓ.கே.. இதுவரை கணக்குச் சரியாக வைத்திருக்கிறீர்களா பார்க்கலாம்.. எங்கே சொல்லுங்கள்.. இந்தக் கட்டத்தில் எத்தனை பேர் முள்ளிவாய்க்கால் செல்லப் போகி றார்கள்? ரைட்.. கரெக்ட் ஆன்சர்... மொத்தம் 7 பேர்!

இந்த இடத்தில் மற்றொரு குழப்பம் ஏற்பட்டது.

அது என்னவென்றால், "ஆமா.. ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்துக்கும், 'முள்ளிவாய்க்காலுக்கும் என்னங்க கனெக்ஷன்?' என்ற கேள்வி அக்கட்சியின் சில உறுப்பினர்களிடையே எழுந்தது.

கடந்த 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் விடுதலைப் புலிகள் இயக்கமே இலங்கை இராணுவத்துடன் யுத்தம் புரிந்தது. ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவராக உள்ள சுரேஷ், சிறப்புத் தளபதியாக இருந்த 'மண்டையன் சிறப்பு படையணி' அந்த யுத்தத்தில் பங்கேற்க வில்லை. மண்டையன் சிறப்பு படையணி, முள்ளிவாய்க் கால் காலத்துக்கு முன்னரே, தமது இன்னிங்ஸை முடித்துக் கொண்டு, ஓய்வு பெற்றிருந்தது.

அந்த இன்னிங்ஸில் மண்டையன் சிறப்பு படையணியால் வீழ்த்தப்பட்ட அநேக விக்கெட்டுகள், விடுதலைப புலிகளின் விக்கெட்டுகள்!

முள்ளிவாய்க்காலில் இருந்து தப்பித்துவந்த அனந்தியே விக்கினேஸ்வரன் முன்னிலையில் பதவப்பிரமாணம் செய்து கொள்ள, ஈ.பி.ஆர்.எல்.எப். முள்ளிவாய்க்கால் போய் இறங்கினால், விசித்திர காட்சியாக இருக்குமே என்பதே குழப்பத்துக்கு காரணம்.

இந்தக் குழப்பத்தால் சுரேஷ் பிரேமச்சந்திரன், "முள்ளிவாய்க்கால் போகவேண்டாம் என மத குரு ஒருவர் சொன்னார். அதனால் நாம் முள்ளிவாய்க்கால் திட்டத்தை கைவிடுகிறோம்" என அறிவித்துவிட்டார். இந்த அறிவிப்புடன் 6 பேர், முள்ளிவாய்க்கால் ட்ரிப்பை கேன்சல் செய்துவிட்டனர்.

கடைசியில் முள்ளிவாய்க்கால் போய் இறங்கினார், சிவாஜிலிங்கம்... தன்னந்தனியே!

"என்னது.. சிவாஜி(லிங்கம்) முள்ளிவாய்க்கால் போயிட்டாரா?" என்று மற்றைய கட்சிகள் கேட்கின்றன, "நடுவுல கொஞ்சம் பக்கத்த காணம்" பட ஸ்டைலில்.

சரி, சிவாஜி மட்டும் ஏன் போனாராம்?

புலிகளின் மீது அவ்வளவு ஈடுபாடா?

அதெல்லாம் ஏதும் இல்லையாம். முள்ளிவாய்க்கால் திட்டம் ரத்துச் செய்யப்பட்டது என்ற விடயத்தை மற்றையவர்கள் இவருக்குச் சொல்லவில்லையாம்.

பாவம், முள்ளிவாய்க்கால் வரை தனியே விசிட் அடித்துவிட்டு வந்திருக்கிறார். இதற்கிடையே எஞ்சியவர்களில் இருவர் பின்கதவால் முதல்வரின் வீட்டுக்குச் சென்று பதவிப்பிரமாணம் செய்துவிட்டு வந்துவிட்டார்கள்.

அடடா என்னதான் நடக்குது இங்கே...!

வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## அபலைகளின் அவலம்!!

வட மாகாணத்தில் பொருளாதார காரணங்களை முன்னிட்டு அதிகமான பெண்கள் பாலியல் தொழில் ஈடுபடுகின்றார்கள் என்று வெளியாகும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

மூன்று தசாப்தங்களாக தொடர்ந்த ஆயுதப் போராட்டங்களில் தந்தையை. கணவனை. சகோதரனை இழந்து தனித்து நிற்கும் பெண்கள் குடும்பச் சுமையை தாங்கிப்பிடிக்க வேண்டியவர்களாகவும். தம்மை சதையும் தோலுமாகப் பார்க்கும் சமூகத்தின் சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

வட மாகாணம் குறிப்பாக யாழ்ப்பாணம் தமிழர்களின் பண்பாட்டையும். கலாசாரத்தையும் பாதுகாத்துவரும் பூமியாகவும், பெண்கள்மீதான அழுத்தங்களை சமூகக் கட்டமைப்பின் பெயரால் நியாயப்படுத்தி வருகின்ற பூமியாகவும் பார்க்கப்பட்டுவந்துள்ளது.

யுத்தத்துக்கு முன்னரும். யுத்த காலத்திலும் பாலியல் கலாசாரம் இருந்திருக்கும். ஆனால் அவை சமூகத்தின் முன்னால் பேசப்படவில்லை. அப்படி பேசுவதை சமூகச் சீரழிவாக கருதியே வந்துள்ளனர்.

தற்போது பண்பாட்டு மற்றும் கலாசார கட்டமைப்புகள் பெரும்பாலும் தகர்ந்து போயுள்ளது. எதையும் தடுத்து மூடிவிடக் கூடிய சூழல் இல்லை.

விருப்பத்தின் பெயரால் அல்லாமல். அழுத்தம். நெருக்கடி. இலஞ்சத்தின் பெயரால் பாலியலில் ஈடுபடுகின்ற கட்டாயத்துக்கு முகங்கொடுக்கின்ற சூழலில் பெண்கள் வாழ்கின்றனர் என்று அண்மைய சமூக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பாலியல் இலஞ்சம் வழங்கவேண்டிய புதிய கலாசாரம் இலங்கையில் பரவலாக இடம்பெற்றுவருகின்றது. இது பொருளாதாரத் தேவைக்காக தொழில் தேடும் பெண்களையும். கல்விக்காக வாய்ப்புத் தேடும் பெண்களையும் துரத்துகின்ற ஆபத்து அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது. பாலியல் இலஞ்சம் தொடர்பான முறைப்பாடுகள் வடக்கிலும். கிழக்கிலுமே அதிகரித்துள்ளதாக அண்மைய முறைப்பாடுகள் உணர்த்துகின்றன.

ஆண்கள் தலைமை ஏற்றுள்ள குடும்பங்களே நிகழ்கால பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்க முடியாமல் தடுமாறுகின்றது. இந்தச் சூழலில் பெண்களை தலைமையாகக் கொண்டுள்ள குடும்பங்களின் நிலையை விவரிப்பது கடினமாகும்.

வருத்தம் தருகின்ற இச்சூழல் உருவாக்கத்திற்கு. பெண்களின் தனிமை மட்டுமல்ல. யுத்தத்தின் பாதிப்புக்களை தெளிவாக மதிப்பீடு செய்து இழப்புக்களை சீர்செய்யாமை. மிகத் தாமதமான இயல்புச் சூழல் உருவாக்க முயற்சியின் மந்தப்போக்கு. பாதுகாப்பும். நம்பிக்கையுமான எதிர்காலத்தை நிச்சயிக்கமுடியாத அரசியல் போக்கும். உயிர்கள். வளம். வாழ்விடம் தவிர்ந்த இழப்புக்களை ஈடுசெய்வதற்கான அர்த்தமுள்ள மாற்று ஏற்பாடுகள் திட்டமிட்டு செயற்படுத்தாமை என்பவையே பிரதான காரணங்களாகும்.

இவற்றை வெளிப்படையாகப் பேசாமல் கலாசாரம். பண்பாடு. கட்டமைப்பு என்று வியாக்கியானம் செய்வதோ. தீர்வுக்காக முயற்சிக்காமல் தெருவில் நடமாடும் பெண்களை பாலியல் எண்ணத்தோடு பார்ப்பதினாலோ இச்சூழலை மாற்றமுடியுமா?

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# ஆரையம்பதி மயானக்காணி அபகரிப்பு

## ஒரு பார்வை



பிரகஸ்பதி

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகப்பெரியளவாக எல்லோராலும் பேசப்படும் ஒரு முக்கிய விடயம் ஆரையம்பதி பொது மயானக் காணி பற்றியதாகும். இதுவே எம்முடைய இவ்வாரத்துக்கான ஆராய்வு விடயமாகவும் ஆகிறது.

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடைபெறவிருந்த நிலையில் மாவட்ட செயலக நுழைவாயில் பூட்டப்பட்டு பெரியளவான ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண் முனைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஆரையம்பதி பிரதேசத்தில் தமது அரச காணிகள் மற்றும் பொதுமயானம் என்பவை திட்டமிட்டவகையில் அபகரிக்கப்படுவதாகவும் அதனை உடனடியாக தடுத்த வலியுறுத்தியே ஆரையம்பதி பிரதேச மக்களினால் மட்டக்களப்பு மாவட்ட செயலக வாயில் கதவு அடைக்கப்பட்டு இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இன்று திங்கட்கிழமை மாவட்ட செயலகத்தில் மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் நடைபெறவிருந்த நிலையில் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக பெருமளவான பொது மக்கள் வாயில்கதவினை மூடி யாரும் வெளியில் செல்லவோ, உள்ளே நுழையவோ முடியாதவாறு அமர்ந்து இந்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளை காலை கடமைக்கு வந்த மாவட்ட செயலாளர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் அதிர்ச்சியானார்.

அரசாங்க அதிபரிடம், சுமார் 20ஆயிரம் பொதுமக்கள் பயன்படுத்தும் காணிகள் சட்டவிரோதமான முறையில் உறுதிகள் முடிக்கப்பட்டு அபகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். காத்தான்குடி நகரசபையின் முதல்வர் அஸ்பர் தனது உறவினர்களின் பெயரில் அதிகளவான காணிகளை இப்பகுதியில் திட்டமிட்டவகையில் சுவீகரித்துள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் தெரிவித்தனர்.

தமக்குள்ள அரசியல் செல்வாக்கினை பயன்படுத்தி ஆரையம்பதி பிரதேசத்தில் உள்ள பொதுமயானம் மற்றும் அரச காணிகளை அபகரித்துள்ளன. தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமான இப்பகுதியானது திட்டமிட்டவகையில் அபகரிக்கப்படும் செயலானது மீண்டும் ஒரு இன வன்முறையை தூண்டும் செயலாகும் எனத் தெரிவித்தனர்.

அதேநேரம், இந்த ஆர்ப்பட்டத்தில் கலந்துகொண்டோர் காணி அபகரிப்புக்கு எதிரான பதாகைகளையும் காத்தான்குடி நகர சபை முதல்வருக்கு எதிரான பதாகைகளையும் தாங்கியிருந்தனர். இதேவேளை ஸ்தலத்துக்கு விரைந்த மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா மற்றும் முன்னாள் முதலமைச்சரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான சி.சந்திரகாந்தன், மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதன்போது குறித்த காணி அபகரிப்பு தொடர்பில் உடனடியாக விசாரணைசெய்யுமாறு பிரதியமைச்சர் மாவட்ட அரசாங்க அதிபருக்கு பணித்ததுடன் அரசியல் வேறுபாடின்றி பக்கச்சார்பற்ற முறையில் நடத்துமாறும் பணித்தார். இதன்போது உடனடியாக குழுவொன்றினை அமைத்து அப்பகுதிக்கு அனுப்பி காணிகள் தொடர்பில் விசாரணை நடத்துவதாகவும் அது அரச காணியாக இருக்குமிடத்து அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்ததை தொடர்ந்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு வருகை தந்தோர் நீண்டநேரம் வெளியில் காத்திருந்தனர். காலை 8.30 மணிக்கு ஆரம்பமான ஆர்ப்பாட்டம் 9.30 மணியளவில் நிறைவுபெற்றது.

இதேநேரம், இந்த ஆர்ப்பாட்டத்தில் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில், திட்டமிட்ட வகையில் இனமுறுகலை ஏற்படுத்தத் துடிக்கும் காத்தான்குடியில் சில முஸ்லிம்களினாலும் நகர சபை தலைவர் ஜனாப் அஸ்வர் உட்பட ஆரையம்பதி மக்களின், 15000க்கும் மேற்பட்டவர்கள் பயன்படுத்தும் பொதுமயான காணியினை அத்துமீறி அடைத்துள்ளனர். அதன்காரணமாக ஆரையம்பதிக்கு பொதுமயானம் இல்லாமல் போய்விட்டது. நாங்கள் எங்கு பிணங்களை அடக்கம் செய்வது.

ஆரையம்பதி நரசிம்மர் ஆலயத்தினை சுற்றி 15 ஏக்கர் காணிகளுக்கு மேல் போலி ஆவணங்களுடன் வேலியிட்டு திட்டமிட்ட குடியேற்றத்துக்காக அடைக்கப்பட்டுள்ளது. அதற்கு கிராமசேவகர், பிரதேச செயலாளர் அனுமதியின்றி மின்சாரசபையின் சட்டதிட்டங்களை மீறி மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இது கரையோர சட்டதிட்டங்களை மீறும் செயலாகும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்செயலாக நடைபெற்றதொரு விடயமாக இந்த காணிகள் சுற்றி அடைக்கப்பட்டமை தெரியவில்லை. இது ஒரு திட்டமிட்ட செயலாகும் என்பது பொதுமக்களது கருத்தாக இருந்தாலும், வறியவர்களோ, காணி அற்றவர்களோ இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டால் பரவாயில்லை என்பது பரவலாக எல்லோருடைய கருத்தாக இருந்தாலும், அடாவடித்தனமாக மேற்கொள்ளப்படும் இதுபோன்ற நடவடிக்கைகளால் வீண் மோதல்கள் ஏற்பட்டுவிடும் எனப் பலர் அச்சமும் தெரிவிக்கின்றனர்.

அரசியல் என்பதும், அரசியல் சார் பலம் என்பதும் பொது மக்களின் நலன்களுக்கானது தானா என்பது இந்த இடத்தில் கேள்வியாக இருக்கிறது. தமிழ், முஸ்லிம் என்ற பாகுபாடு ஏற்படக் கூடிய வகையிலான செயற்பாடுகளைச் சில திட்டமிட்ட நடவடிக்கைகளால் இரு இன மக்களிடையேயும் ஏற்படுத்திவிடும் செயற்பாடுகள் தேவையற்ற சிக்கல்களையே கொண்டுவரும் என்பது எல்லோருக்கும் தெரியவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நகர்சாராத ஏனைய பிரதேசங்களில் அதாவது காடுகளும், காடுசார்ந்த பிரதேசங்களில் நடாத்தப்படுகின்ற திட்டமிட்ட குடியேற்றத்தை கிழக்கு மாகாண காணி ஆணையாளர், அரசாங்க அதிகாரிகள் தடுத்துநிறுத்த வேண்டும் என்பது தமிழ்மக்களது கோரிக்கையாக இருந்துவருகிறது.

2004ஆம் ஆண்டுக்குப் பிறகு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எல்லைக் கிராமங்களில் அத்துமீறிய திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் மட்டக்களப்பின் வரலாற்றுரீதியாக காணி எல்லைகளை மாற்றக்கூடிய புதிய வீதிகள் அமைப்பும், அரச வளங்களை முறைகேடாக பயன்படுத்துதல், பிக்குமாரும், ஒரு சில பாதுகாப்பு தரப்பினரும் தவறான திட்டமிட்ட குடியேற்றத்தை மேற்கொள்ளுதல், தமிழர்களின் மீள்குடியேற்றத்திற்கு தடையாக இருத்தல் போன்ற செயற்பாடுகள் குறிப்பிட்ட காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்துவருகின்றன.

இவை இனமுரண்பாடுகளை தோற்றுவிப்பதோடு, பிரதேச ரீதியான இனப்பரம்பலையும் அதிகரிக்கச்செய்யும். இந்த வகையில் இம்மாவட்டத்தில் நடக்கின்ற திட்டமிட்ட குடியேற்றங்களை தடுத்து நிறுத்தவேண்டும் என்ற மாற்றுத்தீர்வையே தேடுகின்றனர். இந்தநிலையில் நகர் சார்ந்த மக்களின் பொதுத் தேவைக்காக காணிகளை எதிர்பார்க்கின்ற, தேடுகின்ற நிலையில் ஒரு பிரதேச செயலாளர் பிரிவுக்குள், வேறு ஒரு பிரதேச செயலாளர் பிரிவு செயற்பட முனைகிறது. இதுவே ஆரையம்பதியில் நடைபெற்றிருக்கிறது.

இந்த நிலையில் இப்பிரதேசத்திற்கு விஜயம்செய்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் அருண் தம்பிமுத்து மட்டக்களப்பு - ஆரையம்பதி பிரதேசத்தில் அத்துமீறி இந்துமயான மற்றும் அரச காணிகளை பிடித்த முஸ்லிம்களை ஜனாதிபதியுடன் பேசி வெளியேற்றுவேன். ஆரையம்பதி பிரதேசத்தினுள், ஆரையம்பதி இந்துமயான காணி மற்றும் அரச காணிகளை காத்தான்குடியைச் சேர்ந்த முஸ்லிம் சகோதரர்கள் அத்துமீறி பிடித்துள்ளதுடன் சுற்று வேலி அமைத்துள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்தார். அவருடன் பட்டிருப்புத் தொகுதி அமைப்பாளர் சாணக்கியன், வவுணதீவுப் பிரதேச அமைப்பாளர் பிரதிப் மாஸ்ரர் ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

அதேநேரம், இங்கு தனியார் காணி இருந்தமைக்கான எந்த அறிகுறியும் இல்லை. மயானக் காணியினையும் அரச காணியினையுமே பிடித்துள்ளமை தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது. இப்பிரச்சினையினை ஜனாதிபதியின் நேரடிக் கவனத்துக்குக் கொண்டு சென்று அத்துமீறியவர்களை வெளியேற்றி மயானக் காணியினை மீட்டுத்தருவதுடன் அரச காணிகளை பொதுத் தேவைகளுக்கும் பயன்படுத்த ஏற்பாடு செய்வேன் என ஜனாதிபதியின் இணைப்பாளரும் மட்டக்களப்பு தொகுதி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளருமாகிய அருண் தம்பிமுத்து ஆரையம்பதி மக்களிடம் உறுதியளித்துள்ளார்.

இந்தநிலையில் குறித்த காணிகளை அத்துமீறி கையகப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் அதனை நிரந்தரப்படுத்திக் கொள்வதற்கான வேலைகளில் ஈடுபட்டுவருகின்றனர் என்பது இன்னுமொரு தகவலாகும்.

இங்குதான் நில அளவை வரைபடம், அரச காணிகள், மயானக் காணிகள், தனியாருக்குரிய காணிகள் எனப் பல வகையான பிரச்சினைகள் இருப்பது தெரியவருகின்றன. பொதுவாக மயானங்கள் நகரப் பிரதேசத்தினைத் தவிர ஏனைய பிரதேசங்களில் சுற்று மதில்கள் அமைக்கப்பட்டோ, அல்லது வேலிகள் அமைக்கப்பட்டோ இருப்பதில்லை.

இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள அத்துமீறிய செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. அத்துடன் மயானங்களுக்காக ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள் வர்த்தமானிப் பிரகடனப்படுத்தப் படாதிருக்கின்றமையே காரணமாகும்.

ஆரையம்பதியில், தனியார் காணி இருந்ததற்கான எந்த அறிகுறியும் இல்லை. மயானத்துக்குரிய காணியும் அரச காணியுமே அத்துமீறிப் பிடிக்கப்பட்டுள்ளது என்பது பலரது நிலைப்பாடாக இருக்கிறது. பிரேதங்கள் அடக்கம் செய்யப்பட்ட மயானத்தைக்கூட வேலியிட்டு அடைத்துள்ளனர். எத்தனையோ பிரேதங்கள் அடக்கம்செய்யப்பட்ட மண் குவியல்கள் இருக்கின்றது என்பது நேரடியாகச் சென்று பார்வையிட்டவர்களது கருத்து. அதனை யாரும் நேராகச் சென்று பார்க்கலாம்.

அதுமாத்திரமன்றி இங்குள்ள இந்து ஆலயத்தை மாத்திரம் ஒரு பக்கத்தால்விட்டு ஏனைய அனைத்துப் பகுதியினையும் வேலியிட்டு அடைத்துள்ளனர். இப்பகுதி தங்களுக்குரியதாயின் இந்து ஆலயம் அமைப்பதற்கு காணி எங்கிருந்தது. இந்த ஆலயத்தை அமைக்கும் வரைக்கும் இக்காணிக்கு உரியவர்கள் பார்த்துக்கொண்டு எங்கிருந்தார்கள் என்பது கேள்வியாகிறது.

அதேநேரம், ஒரு குடியேற்றத் திட்டத்திற்கு காணி பேச் கணக்கில் பிரிப்பது போன்று பிரித்துப்பிரித்து அடைக்கப்பட்டுள்ளதனையும் நாம் காண முடிகிறது. ஆரையம்பதிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குள் காத்தான்குடி நிர்வாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதை அவதானிக்கலாம். ஆரையம்பதியினைச் சேர்ந்த மக்கள் ஒரு ஆர்ப்பாட்டத்தினை நடத்தும்போது எல்லோருமே மிகச் சாதாரணமாக ஒரு காணிதான் அமைக்கப்பட்டிருக்கிறது, மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது என்ற பிம்பமே எல்லோருக்குமே ஓடியது. ஆனால் பெருந்தொகையான காணிகள் அமைக்கப்பட்டுள்ளமை நேரடியாகச் சென்று பார்க்கும்போதே தெரிகிறது என்பது எல்லோரதும் கருத்தாகும்.

(21 பக்கம் தொடர்ச்சி...)

# நீங்கேனம்மா — இயக்கமானீங்க



புகழோடு வாழத்தொடங்கி 1ஆவது குழந்தை பிறந்திருந்த நேரம் குழந்தையைப் பார்க்க அவன் போயிருந்தான். அவனே எதிர்பார்க்காத ஆச்சரியம் அவனுக்காக புகழும் அவளும் செய்திருந்தார்கள். முதற்குழந்தை ஆண் குழந்தையாகியதால் அவனது பெயரையே பிள்ளைக்கும் சூட்டியிருந்தனர்.

எனக்கு கலியாணம் பேசுகினம்...! சொன்னான். பிடிச்சா சொல்லுங்கோ கட்டிறன்... என அவனுக்காக கேட்டுவந்த பெண்போராளியின் படத்தை அவளிடம் நீட்டினான். மறுநாள் வரை அவகாசம் கொடுத்துவிட்டுப் போனான். அவள் முடிவுக்காக.

மறுநாள் பின்னேரம் போனான். என்ன பிடிச்சுதோ? நீங்க சொன்னா கட்டிறன்.... அந்தப்பிள்ளைக்கு உங்களை விரும்பமோ? கேட்டாள். வாழ்ந்தா நானெண்டு பிள்ளை நிக்குது... எனச் சிரித்தான். எனக்கும் பிடிச்சிருக்கு கட்டுங்கோ.....

அவனது திருமணத்திற்கு இவளும் புகழும் குழந்தையும் போயிருந்தார்கள். தனது மனைவிக்கு அவளைப்பற்றி எல்லாமே சொல்லியிருந்தான். அவளே அவளைத் தெரிவுசெய்ததாகவும் சொல்லியிருந்தான்.

காதல் பிரிவு; இன்னொருவருக்காக விட்டுக்கொடுத்தமையென அவையெல்லாம் பெரிய பிரச்சனையாக இல்லாமல் இரு குடும்பத்திற்குள்ளும் நல்ல நட்பும் வளர்ந்திருந்தது.

நாட்டு நிலமையின் மாற்றம் களமாகிய போது இரண்டு வீட்டு ஆண்களும் களத்தில் நின்றார்கள். 2008இல் அவள் காதலித்தவன் வீரச்சாவென வானொலியில் செய்தியும் ஈழநாதத்தில் அஞ்சலியும் வந்திருந்தது. இவர்கள் இருந்த இடத்திலிருந்து அஞ்சலி நிகழ்ந்த இடத்திற்குப் போக முடியாத தூரமும் அவள் 3ஆவது குழந்தையைக் கருவில் சுமந்துகொண்டிருந்தாள்.

2009 மாசிமாதம் ஒருநாள் நிகழ்ந்த எறி-கணைத் தாக்குதல் அவர்கள் வாழ்ந்த தறப்பாளின் அருகருகாயும் விழுந்து வெடித்துக் கொண்டிருந்தது. பதுங்குகுழிக்குள் இறங்கும் அவசரத்தில் 7ஆவது மாதக்கர்ப்பிணியாய் இருந்த அவளை யாரோ அவசரத்தில் தள்ளிவிட பதுங்குகுழியில் விழுந்துவிட்டாள். என்ன நடந்ததோ அன்றே அவள் குழந்தையைப் பெற்றுக்கொண்டாள்.

ஒருவகையாக அவளது குழந்தை உயிர் காக்கப்பட்டு முள்ளிவாய்க்கால் போய்ச் சேர்ந்தார்கள். புகழ் களத்தில் அவள் 3 குழந்தைகளோடும் பதுங்குகுழியும் பட்டினியுமாக எல்லோரோடும் போய்க்கொண்டிருந்தாள். கடைசிக்குழந்தையின் உயிர்போய் விடும்போன்ற நிலமையிலும் நம்பிக்கையோடு குழந்தையை காப்பாற்றிக் கொண்டு போனாள்.

மே மாதம் 12ஆம் திகதி புகழ் அவள் இருந்த இடத்தைக் கண்டுபிடித்து வந்திருந்தான். அவனைக் கண்டநேரம் அழுகையாலே அவனை வரவேற்றாள். வந்தவன் சரணடையும் முடிவைச் சொன்னான். கடைசியாய் களத்திலிருந்து குப்பியையும் எறிந்துவிட்டதாகச் சொன்னான். அவரவர் தங்களது முடிவுகளைத் தேடிக்கொள்ள புகழும் அவளும் 3பிள்ளைகளோடும் மே 16ஆம் திகதி எதிரியிடம் சரணடைந்தார்கள். அவள் போராளியென்றது மறைக்கப்பட்டு அவன் மட்டுமே போராளியென அடையாளம் காட்டப்பட்டான்.

அவளும் பிள்ளைகளும் முகாமுக்குப் போக அவன் தனியாகக் கொண்டு செல்லப்பட்டான். பிள்ளைகளோடு முகாமில் அவள்பட்ட வலிகள் சொல்ல வார்த்தைகளில்லை. ஒருநாள் உணவுக்கு வரிசையில் நின்றபோது எதிர்பாராத வகையில் அவள் காதலித்தவனின் மனைவியைக் கண்டாள். இவளைக் கண்டதும் அவள் அழுதாள். கையில் ஒரு பெண் குழந்தையோடு வரிசையில் நின்றாள். இவளும் அழுதாள். பின்னர் இருவரும் சுகநலம் விசாரித்தார்கள் எல்லோருக்கும் பொதுவான கண்ணீரும் துயரமும் இருவரிடமும் சொல்லமுடியாத துயங்கள் நிறைந்திருந்தது.

மீள்குடியேற்றம் என்றபோது வன்னிக்குள் போயிருக்க அவளுக்கு யாருமில்லாது போனதால் தனது ஊருக்குப் போக பதிவுசெய்தாள். சட்டம் பதிவு விசாரணையென எல்லாக் கதவுகளையும் தாண்டி ஊருக்குப் போய் உடன் தாயிடம்தான் போனாள்.

எல்லாவற்றையும் இழந்துபோய் வருகிற மகளை அம்மாவும் சகோதரர்களும் ஓடிவந்து அணைப்பார்கள் என்று நம்பியவளுக்கு எல்லாம் தலைகீழாக நிகழ்ந்தது. அவள் சொத்தாக கொண்டு வந்த சில உடுப்புகளையும் அள்ளியெறிந்தாள் அம்மா.

எங்க வாறா இப்ப....? எங்களை விட்டிட்டு பதிமூணு வயசில போகேக்க அம்மா, அப்பா தெரியேல்ல இப்ப வாறாவாம்... தாயின் வாயில் வந்த பேச்சும் அண்ணன்களின் அண்ணிமாரின் ஆற்றமுடியாத திட்டும் அவளைத் தெருவில் நிறுத்தியது.

தன்னோடு கூடவிருந்த ஒரு போராளியின் வீட்டில்போய் தனது ஏமாற்றம், இயலாமை, அழுகை எல்லாவற்றையும் கொட்டியழுதாள். சிலநாட்கள் அந்தப் போராளியே இவளுக்கான தங்குமிடம் உணவு யாவற்றையும் கொடுத்து அடைக்கலமாதாவானாள்.

(தொடரும்...)




இருந்தும் கௌரிகாந்தன் புளொட்டிலும் அதிக காலம் நீடிக்கவில்லை.

பின்னர் கீழைக் காற்று இயக்கத்தில் தன்னுடன் முன்பு ஒன்றாக வேலைசெய்த மூர்த்தி (தமிழ்ச்செல்வனின் அண்ணன்) என்பவர் புலிகளின் அரசியல் பொறுப்பாளராக இருந்ததைப் பயன்படுத்தி. புலிகளுடன் இணைந்து வேலைசெய்யத் தொடங்கினார். ஆனால் அங்கு அவர் முன் வைத்த வேலைத்திட்டங்களைப் புலிகள் ஏற்காததுடன். அவர்மீது சந்தேகமும் கொள்ளத் தொடங்கினர். அவர் புலிகளால் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டதுடன். அவரது நடமாட்டத்தையும் அவர்கள் கட்டுப்படுத்தி. அவரை 'வீட்டுக்கைதி' போல வைத்தனர். அதிலிருந்து ஒருவாறு மீண்ட கௌரிகாந்தன். குடும்பத்துடன் இந்தியாவுக்கு 'ஓடித்' தப்பினார். இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி அங்கு அவர் ஈ.என்.டி. எல்.எப் இயக்கத்துடன் இணைந்து வேலைசெய்வதாகத் தெரிய வந்தது. ஆனால் அண்மையில் கிடைத்த புதிய தகவல் ஒன்றின் படி அந்த இயக்கத்திலும் அவர் இல்லை எனத் தெரிகிறது.

இந்த கௌரிகாந்தன் புலிகளுடன் இணைந்திருந்த காலத்தில். அவர்கள் மாணவர்களுக்கென ஆரம்பித்து நடாத்திய 'சாளரம்' என்ற மாத சஞ்சிகையின் ஆசிரியக் குழுவில் சிறிது காலம் பணியாற்றினார். அப்பொழுதுதான் எனது விடுதலை சம்பந்தமாக மனைவி அவரிடமும் சென்றார். ஆனால் அவரால் எனது விடுதலை சம்பந்தமாக ஒரு சிறு துரும்பைத் தன்னும் தூக்கிப்போட முடியாது என்பது எனது மனைவிக்குத் தெரிந்திருக்கவில்லை என்றாலும் எனக்குத் தெரியும்.

எனது மனைவி அணுகிய இன்னொருவர் சுன்னாகம் கந்தரோடையைச் சேர்ந்த மு.பாஸ்கரகுமார் ஆகும். 'சின்னண்ணை' என நான் எப்பொழுதும் அழைக்கும் அவரிடம் எனது மனைவி சென்றதிற்குக் காரணம். நான் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கற்ற மூன்று வருடகாலமும் அவரது வீட்டில் தங்கியிருந்தே கல்வி கற்றேன். பின்னர் அவர் புலிகள் இயக்கத்தில் ஒரு முக்கிய பிரமுகராக இருந்ததுடன். புலிகள் நீர்வேலிப் பகுதியில் அமைத்திருந்த மிகப்பெரிய நிலக்கீழ் பதுங்கு குழி சம்பந்தமான சில பொறுப்புகளையும் வகித்துவந்தார்.

அவர்களது வீடு கந்தரோடையில் முன்னாள் உடுவில் - மானிப்பாய் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வி.தர்மலிங்கம் (என்னுடன் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் ஒரே வகுப்பில் பயின்ற புளொட் தலைவர் சித்தார்த்தனின் தந்தையார்) அவர்களின் வீட்டுக்கு நேர் எதிரில் அமைந்துள்ளது. தர்மலிங்கம் அவர்களின் குடும்பமும் பாஸ்கரனின் குடும்பமும் மிகநெருங்கிய உறவினர்கள். அதனால் பாஸ்கரனின் குடும்பத்தினர் தீவிர தமிழரசுக் கட்சி விசுவாசிகளாக இருந்த போதிலும். என்மீது அவர்கள் எல்லோரும் தமது குடும்ப அங்கத்தினர்களில் ஒருவன் போலப் பற்றும் பாசமும் வைத்திருந்தனர். பாஸ்கரன் எனது மனைவியிடம் சில வாக்குறுதிகளை வழங்கினாராயினும் அவராலும் பெரிதாக எதையும் செய்துவிட முடியவில்லை.

அதுமாத்திரமல்ல. நான் விடுதலையாகி வந்தபின்னர் அவரைச் சந்திப்பதற்காக கந்தரோடையிலிருந்த அவரது வீட்டுக்குச் சென்றபோது. அவரைப் புலிகள் கைதுசெய்து தடுத்து வைத்திருக்கிறார்கள் என்ற அதிர்ச்சித் தகவலை அவரது மனைவி எனக்குச் சொன்னார். அப்பொழுது புலிகள் இயக்கத்தில் அதன் தலைவர் பிரபாகரனுக்கும் பிரதித் தலைவர் மாத்தையாவுக்கும் இடையிலான முரண்பாடு உச்சக் கட்டத்தை அடைந்து. மாத்தையாவையும் அவரது சகாக்களையும் பிரபாகரன் கைதுசெய்து வைத்திருந்த காலம். அவ்வாறான சிலர் எம்முடனும் சிறை வைக்கப் பட்டிருந்தனர். மாத்தையாவின் நெருங்கிய ஆதரவாளர்கள் மட்டுமின்றி. அவருடன் பழகியவர்கள் சிலரும் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அப்படியானவர்களில் இந்த பாஸ்கரனும் ஒருவர். சில மாதங்களின் பின்னர் அவர் விடுவிக்கப் பட்டுவிட்டார்.

எனது விடுதலைக்கு தானாகவே முயற்சி எடுத்ததாகப் பின்னர் என்னிடம் தெரிவித்தவர்களில் ஒருவர் நா.யோகேந்திரநாதன். முன்பு எமது கட்சியில் என்னுடன் கிளிநொச்சிப் பிரதேசத்தில் ஒன்றாக வேலைசெய்த அவர். 1971 ஜே.வி.பி கிளர்ச்சியின் பின்னர் எமது கட்சியிலிருந்து விலகி. அந்தக் காலகட்டத்தில் கிளிநொச்சித் தொகுதிக்கான சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த அமைச்சர் செல்லையா குமாரசூரியருடன் இணைந்து வேலை செய்தார்.

பின்னர் தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் உதயமானதும் புலிகள் இயக்கத்துடன் இணைந்து செயற்படத் தொடங்கினார். அவர் கிளிநொச்சியிலிருந்து புலிகள் சில காலம் வெளியிட்ட 'ஈழநாதம்' பத்திரிகைக்கு ஆசிரியராக மாத்தையாவால் நியமிக்கப்பட்டதுடன். அவர்களது கலை பண்பாட்டுக் கழகத்திலும் இணைந்து செயற்பட்டார். மாத்தையா வன்னியிலிருந்து செயற்பட்ட காலத்தில் அவருடன் மிக நெருங்கிய தொடர்புகளைப் பேணிவந்தார். அந்தத் தொடர்பை வைத்துக்கொண்டு எனது விடுதலை சம்பந்தமாக மாத்தையுடன் தான் கதைத்ததாகவும். எனது உயிருக்கு எந்தவித ஆபத்தும் இல்லையெனவும். ஒரு குறிப்பிட்ட தண்டனைக் காலத்தின் பின்னர் நான் விடுதலை செய்யப்படுவேன் என மாத்தையா தன்னிடம் தெரிவித்ததாகவும். நான் விடுதலையாகி வந்தபின்னர் யோகேந்திரநாதன் என்னிடம் தெரிவித்தார்.

உண்மையில் இவர்களில் சிலரோ அல்லது எல்லோருமாகவோ எனது விடுதலைக்காக ஒரு சிறு முயற்சியைத் தன்னும் எடுத்திருந்தால். நான் அவர்களுக்காக இன்றும்கூட நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனெனில் புலிகள் இயக்கத்தினால் குறி வைக்கப்படுபவர்கள் குறித்து வெளியில் உள்ளவர்கள் மட்டுமின்றி. அவர்கள் இயக்கத்தில் செல்வாக்கான நிலையில் இருப்பவர்கள் கூட பேசுவது என்பது தற்கொலைகொப்பானதாகும். அத்துடன் எமது கட்சியிலிருந்து புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டவர்களைப் புலிகளின் தலைமை எவ்வாறு வைத்திருந்தது என்பதும் எனக்குத் தெரியும். அதற்கு ஓர் உதாரணம் தான் 1995ல் புலிகள் வன்னிக்கு இராணுவத்தால் துரத்தப்பட்ட போது. அவர்களது கலை பண்பாட்டுத்துறைப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அங்கு வீடு எடுக்க முடியாது திண்டாடிய அவலம்.

புலிகளைப் பொறுத்தவரை. அவர்களது அதிகார அடுக்கில் சர்வ வல்லமை பொருந்திய நபர் 'தேசியத் தலைவர்' பிரபாகரன்தான்.

(தொடரும்...)



# நிலமெல்லாம் ரத்தம் 72

பா.ராகவன்

01. யூதர்கள் தமக்கென ஒரு தேசத்தை அமைத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். எப்பாடுபட்டாவது இதனை நாம் செய்தே ஆகவேண்டும்.

02. இயேசுவைக் கொன்றவர்கள் என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து கூறப்பட்டுவருவதை நிறுத்தவேண்டும். இதனை சாமர்த்தியமாகச் செய்வதன்றி வேறு வழிகளில் சாதிக்க முடியாது.

03. கிருத்தவர்கள் நமது பகைவர்கள். ஆனாலும் ஐரோப்பாவில் அவர்களே மிகுதி என்பதால் அவர்களுடன் நட்புணர்வுகொண்டு நடந்துகொள்ள வேண்டும். அவர்கள் தாமாகப்பகையை மறக்குமளவுக்கு நாம் நடந்துகொள்ள வேண்டியது முக்கியம்.

04. நமக்காக யாரும் ஒரு தேசத்தை எழுதித்தரமாட்டார்கள். நாம் வாழவிரும்பும் இடத்தை நாம் விலைகொடுத்து வாங்கவேண்டும். இது ஒரு நீண்டகாலத்திட்டம்.

05.நமது தேசத்தைக் கட்டுவதற்காக நாம் வாங்கப்போகிற நிலங்களுக்கான பணத்தைச் சேமிக்க, நமக்கென ஒரு வங்கி வேண்டும். அந்த வங்கியில் சேரும் பணத்துக்கு 'யூத தேசிய நிதி' என்று பெயர்.

06. நமக்கொரு கொடிவேண்டும். கொடி என்பது ஓர் அடையாளம். எழுச்சியின் சின்னம். வெண்மையும் நீலமும் கலந்த கொடியொன்றை நான் சிபாரிசு செய்கின்றேன். (யூதர்கள், தேவாலயங்களுக்குச் செல்லும்போது இப்படி வெண்மையும் நீலமும் கலந்த துணியொன்றைத் தோளில் அணிந்து செல்வது வழக்கம்)

இவற்றுடன் 'Hatikvah' (என்றால் நம்பிக்கை என்று பொருள்) என்கிற ஒரு தேசியகீதத்தையும் இணைத்துத் தமது அறிக்கையைச் சமர்ப்பித்தார் ஹெஸில்.

ஹெஸிலின் திட்டம் மிகத் தெளிவானது. தொலைநோக்குப் பார்வைகொண்டது. யூதர்களுக்கான தேசம் என்பதை நினைத்த மாத்திரத்தில் கிடைத்துவிடாது என்பதை அவர் அறிந்தே இருந்தார். ஆனால் தங்கள் முயற்சியின் பாதை இப்படித்தான் இருக்கவேண்டும் என்கிற தெளிவு அவரிடம் இருந்தது. ஹெஸில் தமது முதல் அறிக்கையை வெளியிட்டதிலிருந்து சரியாக ஐம்பது ஆண்டுகளில் இஸ்ரேல் உருவாகி விட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவரது திட்டத்தை யூதர்கள் தங்களுடைய இன்னொரு வேதமாகவே கருதி உழைத்ததுதான் காரணம்.

அந்த ஸ்விட்சர்லாந்து மாநாடு நடந்து சரியாக ஒரே வருடத்தில் ஒட்டுமொத்த யூதகுலத்துக்கும் ஹெஸிலின் திட்டம் குறித்து முழு விவரங்களும், யூதர்கள் ஓர் அமைப்பின் மூலம் ஒன்றுசேர வேண்டிய அவசியமும் தெரிந்துவிட்டது. யூத குலத்தின் நன்மைக்காக ஏதாவது செய்யவேண்டும் என்பது ஒவ்வொரு யூதரும் தனித்தனியே எப்போதும் யோசிக்கிற விஷயம். இப்படி ஓர் அமைப்பின்மூலம் யோசிப்பதும் செயற்படுவதும்தான் அவர்களுக்குப் புதிது. ஆனாலும் உற்சாகமாக ஈடுபடத் தொடங்கினார்கள்.

முதலில் நில வங்கி (Land Bank) என்கிற வங்கியொன்று ஏற்படுத்தப் பட்டது. இது யூதர்களின் வங்கி. அவர்கள் நிலம் வாங்குவதற்காகப் பணம் சேர்க்கவென்றே தொடங்கப் பட்டது. இந்த வங்கி தொடங்கப்பட்ட மிகச் சில மாதங்களுக்குள்ளாகவே பல இலட்சக்கணக்கான தொகை வந்து குவிந்ததைச் சொல்ல வேண்டும். பெரும்பாலான யூதர்கள் வட்டிக்குப் பணம் தருகிறவர்களாக, பெருவர்த்தகர்களாக, கடல் வாணிபத்தில் தேர்ந்தவர்களாக இருந்தது இதற்கு மிக முக்கிய காரணம். மொத்தமாக நன்கொடை போல் ஒரு பெரும் தொகையைத் தங்கள் நிலவங்கிக்கு அளித்தவர்களும் உண்டு. மாதாமாதம் தாங்கள் சம்பாதிக்கும் பணத்தில் ஒரு பகுதியை இந்த வங்கிக்கு அளித்தவர்களும் உண்டு. ஆனால் எந்த ஒரு யூதரும் ஒரு பைசாவாவது இதில் முதலீடு செய்யாமல் இல்லை. உலகம் முழுவதிலும் எங்கெல்லாம் யூதர்கள் பரவியிருந்தார்களோ, அங்கிருந்தெல்லாம் பணம் வந்து குவியத் தொடங்கியது.

ஹெஸில், இந்த வங்கிகள் என்ன செய்யவேண்டும் என்று ஒரு திட்டம் வரைந்திருந்தார். அதன்படி யூத நில வங்கி – அதன் அனைத்துக் கிளைகளும் – நிலம் வாங்குவதற்குப் பணம் கடனாகத் தரவேண்டும். அதாவது, யார் நிலம் வாங்க வங்கிக்கடன் தேடி அலைந்தாலும் கூப்பிட்டுக் கொடுக்க வேண்டும். குறிப்பாக ஐரோப்பியர்களுக்கும் அராபியர்களுக்கும். எத்தனை இலட்சம் கேட்டாலும் கடன் தரலாம். அப்படிக் கடன் பெற்று நிலம் வாங்குவோரின் நிலப்பத்திரங்கள், வங்கியில் அடமானமாக இருக்கும். உரிய காலத்தில் கடன் தொகை திருப்பிச் செலுத்தப் படாவிட்டால், நிலத்தை வங்கி எடுத்துக் கொண்டுவிடும். அப்படி வங்கி கையகப் படுத்தும் நிலங்களில் உடனடியாக யூதக் குடியிருப்புக்கள் ஏற்படுத்தப் பட்டுவிட வேண்டும். குடியேறும் யூதர்களின் பாதுகாப்புக்கு வங்கியே உத்தரவாதம் அளிக்கும்.

அடுத்தபடியாக, நேரடி நிலக் கொள்முதல். இதன்படி, யூத நில வங்கி, தானே நேரடியாகவும் நிலங்களை வாங்கும். இந்த இடத்தில் ஒரு யூதக்குடியிருப்பு அமைக்கலாம் என்று வங்கி தீர்மானிக்குமானால், அங்கே உள்ள நிலத்தை வங்கி எத்தனை பணம் கொடுத்துவேண்டுமானாலும் வாங்கலாம். அப்படி வாங்கும் நிலத்திலும் உடனடியாகக் குடியிருப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

யூத நில வங்கிமூலம் அமைக்கப் படும் குடியிருப்புகளில் கண்டிப்பாக யூதர்கள் மட்டுமே வசிக்கவேண்டும்.

அதுசரி, நிலங்களை எங்கே வாங்குவது? எந்தப் பகுதி மக்களுக்குக் கடன் கொடுப்பது? இங்கேதான் இருக்கிறது விஷயம். தியோடர் ஹெஸிலின் உலக யூதர் காங்கிரஸ் அமைப்பு உருவானது தொடங்கி, நில வங்கிகள் முளைத்த தினம் வரை அவர்களிடம் 'எந்த இடம் நம் இடம்?' என்கிற வினாவுக்கான தெளிவான பதில் இல்லை. பலஸ்தீன்தான் யூதர்களின் விருப்பம். ஹெஸிலுக்கும் அதுதான் எண்ணம். ஆனாலும் ஒரு தேசத்தை நமக்காக உருவாக்கவேண்டும் என்று பேச ஆரம்பித்தபோது பாலஸ்தீன் தவிரவும் சில பகுதிகளை அவர்கள் யோசித்துப் பார்த்திருக்கிறார்கள்.

குறிப்பாக கென்யா, ஆர்ஜென்ரீனா, சிலி போன்ற தேசங்களில் நிலம் வாங்கலாமா என்று பலபேர் சிந்தித்திருக்கிறார்கள். ஐரோப்பா வேண்டாம் என்பதில் யாருக்கும் இரண்டாவது அபிப்பிராயமே இல்லை. ஆனால் சிலருக்கு அமெரிக்காவில் செய்யலாமா என்கிற யோசனை இருந்திருக்கிறது. நெப்ராஸ்கா பகுதியில் (ஓர் அமெரிக்க மாகாணம்.) நிலங்களை வாங்கிப்போட்டு யூதக் குடியிருப்புகளை நிறுவலாம் என்று பலபேர் பேசியிருக்கிறார்கள்.

என்னதான் கிருத்தவர்களுடன் சமாதானமாகப் போகவேண்டும் என்று ஹெஸில் தொடர்ந்து வலியுறுத்தினாலும், தங்களுக்கென்று ஒரு தேசம் உருவானால் அது கிருத்தவ ஐரோப்பாவில் அமையுமானால், வாழ்நாளெல்லாம் பிரச்சினைக்கு உள்ளாக நேரிடும் என்று ஒட்டுமொத்த யூதகுலமும் ஐயப்பட்டது.



(தொடரும்...)

# இறப்புக்குப்பின் உயிரின் நிலை என்ன?



சுடலைகளில் இரவில் பேய் உலாவும் என்பதும் இதன் அடிப்படையில் உருவானதுதான். பிறந்த உயிர் மீண்டும் தன் உடலை நோக்கிவரும்.

உடல் எரிக்கப்பட்டிருந்தால் பிரிந்த இடத்திற்கு மேலே ஆவியாக நின்று கதறி அழும். உடல் புதைக்கப்பட்டால் அதன்மேல் ஆவி திரியும். இவை வெறுமனே மதங்கள் கூறும் கருத்துக்கள் என்று எண்ணவிடாதீர்கள். அறிவியல்பூர்வமாக நிருபணமாகியுள்ளது.

தீய ஆவிகள் அவா உள்ளவர்களாகத் திரிவதனால், மாயாவிகள் இவ் ஆவிகளுக்கு வேண்டிய மதுமாமிசங்களை உணவாகக் காட்டி விரும்பி அழைத்தால் அதற்கு இசைந்து ஆவிகள் வராமலிருக்குமா? அழைத்தது போதுமென்று ஓடிவந்து அம்மாயாவி விரும்பியபடி தீய காரியங்களைச் செய்வர். தீங்கு செய்யும்படியான எவ்வளவு வலிவு அவற்றுக்கு எங்ஙனம் வந்ததெனில்; செல்லுமிடத்தைப் பொறுத்துத்தான் அவற்றுக்கு வலிவு அதிகரிக்கும். தீயநினைவும், தீயசெயலும் உடையவர்களாய் இருப்பவர்கள் தூய்மையில்லாதவர்களிடம் சென்று துன்பம் செய்யும். தூய உணவுருந்தி தூய நினைவு, தூய செய்கையுடன் வாழ்வோரிடத்தில் அவை வருவதற்கு சிறிதும் துணியமாட்டாது. ஒரு சமயம் ஏவிவிடும் மாயாவியின் மந்திரபலத்தால் நல்லவரிடத்தில் வந்தாலும் அவற்றின் செயல் அங்கு சிறிதும் பலியாமையினால் திரும்பிப் போய் ஏவிவிட்ட மாயாவியையே துன்புறுத்தும். ஆகையால் நல்லவர்களுக்கு ஆவிகளால் எப்போதும் துன்பம் உண்டாவதில்லை என்பதை அறிக.

இவ்வுலகை விட்டு அகன்றவர்கள் திரும்பவும் வருவதற்கு காரணம், இங்குள்ள பொருள்களின் மேல் அவர்கட்குள்ள பெரும் பற்றேயாகும். பணத்தின் மேல் அளவற்ற விருப்பம் வைத்து இறந்தவர்கள், பணம் வைக்கப்பட்டால் வந்து வந்து சுற்றுவர். ஆங்கிலப் பெரும் புலவரான ஸ்டெயின்டன்மோஸஸ் என்பவர் ஆவிகளை வரவழைத்துப் பேசும் ஆற்றல்மிக்கவர். அவர் வரவழைத்துப் பேசிய ஆவி ஒன்றின் விபரத்தை தமது நூலில் எழுதியுள்ளார். 1903ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18 ஆம் நாள் ஸ்டெயின்ட்ஸ்க்கு எதிரே வயது முதிர்ந்த ஒரு கிழவியின் வடிவம் தோன்றியது. அவ்வடிவம் அவருடன் பேசியது. "நான் நிலவுலகத்திலிருந்தபோது நல்லெண்ணமும் தூயசிந்தையும், நல்லொழுக்கமும், இரக்கமும், அன்பும் உடையவளாயிருந்தேன். எனக்கு முன் இறந்துபோன என் கணவனோ பொருளை மிகுதியாகத் தேடிக்குவிப்பதில் மிக்க அவாவுடையவராக இருந்தமையால், இறந்த பிறகும் இவ்வுலகத்திலேயே பற்றுள்ளவராக இங்கு வந்து அலைந்துகொண்டிருந்தார். இறைவனின் திருவருளை நாடி மேலுள்ள இன்ப உலகங்களிற்கு செல்ல அறிவில்லாதவராய் இங்கேயே சிறைப்பட்டு கிடந்தார். நானோ இவர் இவ்வுலகப்பற்றை விட்டு எல்லாம்வல்ல இறைவனின் திருவடிக்கு எப்போது ஆளாகுவார் என்று இடைவிடாது இறைவனை வேண்டி வருந்திவந்தேன். எனக்கும் காலம்வரையானும் இவ்வுலகத்தை விட்டு நீங்கி என் கணவனுடன் வந்துசேர்ந்து என் வற்புறுத்தலாலும், வேண்டுகோளாலும் அவர் இவ்வுலகப்பற்றையும் பொருள் அவாவையும் அகற்றும்படி செய்து அவருடன் இறைவன் திருவடியை நோக்கி மேல் உலகிற்கு செல்கிறேன் என்று கூறியது.

இந்த ஆவியுடன் பல தடவைகள் உரையாடியமை பற்றி விரிவாக எழுதியுள்ளார். அவ்வாவி தோன்றிய போதெல்லாம் அதன் துன்பத்தைப் பார்த்து நமக்கு உண்டான துன்பமும் அதனைப் பற்றித் தெரிந்ததனால் விளைந்த வருத்தமும் இவ்வளவு என்று சொல்லினால் சொல்லிக் காட்ட முடியாதென்று எழுதுகிறார்.

இந்தக் கிழவியின் கணவனின் ஆவி உருவானது ஸ்டெயின்டன் மோஸஸுக்கு பதினொரு தடவை தோன்றியதாக எழுதுகிறார். அவ்வுருவம் சிலசமயம் மனஎரிவோடு ஒலி செய்துகொண்டும், சிலசமயம் உஸ் என்று ஆவிபோக்கிக் கொண்டும், மற்றும் சிலசமயம் பலகை மேல் உராஞ்சுவது போல் ஒலி செய்துகொண்டும் மன அமைதியின்றியும் தோன்றும். அவ்வுருவம் வெளிப்பட்டுத் தோன்றியபோது எல்லாம் தான் தன் துன்பத்தின்றும் விடுபடும் பொருட்டு இறைவனை நோக்கி வேண்டும்படி கேட்டிருக்கிறது. நிலவுலகிலிருந்த போது பொன்னே அதற்குத் தெய்வமாயிருந்தமையால், அதன் பொருள் வைக்கப்பட்டிருந்த இடத்தில் பொற்சங்கிலியால் கட்டப்பட்டுக்கிடந்தது.

பணத்தின் மேலும் மற்றும் உலகத்துப் பொருட்கள் மேலும் அளவிறந்த பற்று வைத்திருந்து இறப்பவர்கள் மறுமையுலகத்திற்குப் போனாலும், அங்கேயிருக்க மனமின்றி மறுபடியும் இவ்பொல்லாத உலகத்திற்கு வந்து சொல்லமுடியாத பெருந்துன்பம் உற்று உழலுவார்கள் என்பதை யாரும் மறக்கவேண்டாம். புவியில் பெறவேண்டிய பயன்களைப் பெற்றுப் பிறர்க்கும் அதனைப் பலவகையால் கொடுத்த உள்ளங்கனிந்த உதவிசெய்து, மறுமையுலகத்தில் பேரின்பத்தை நுகர்வதற்கு வழியைத் தேடுதல் அறிவுடைமைக்கு அழகாகும்.

களவு, கொள்ளை, கொலை, பிறர் மனைநாடல், தற்கொலை செய்பவர்கள் ஆவியாக அலைவார்கள். களவு, கொள்ளை, கொலையில் ஈடுபட்டு பணம்சேர்த்து வருகையில், அப்பணத்தில் வீட்டில் உள்ளவர்கள் சொகுசாக வாழநினைத்தால் பின்னர் ஆவியாக அலைவார்கள். எனவே தவறுகளுக்கு துணைபோகாமல் இனிய வாழ்வு வாழ முயற்சிசெய்யுங்கள். மறுமையிலும் இன்பம்பெறுவீர்கள்.

(முற்றும்)

சொல்லின் செல்வர்
இரா.செல்வவழவேல்

# தேசிய கூடாரத்துக்குள் திருட்டு ராஜாக்களா?



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கூட்டுக்குள்ளிருந்து அல்லது கூடாரத்துக்குள் இருந்து தேர்தல்களை சந்திக்காவிட்டால் தமிழ் மக்கள் தம்மை துரோகிகளாகக் கருதிவிடுவார்கள்.

அரசியல் ரீதியாக தம்மால் தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட பலா பலன்கள் எது? அல்லது கடந்த கால வரலாற்றில் தமிழ் மக்களின் அரசியல் தளத்தை பாதுபாப்பதற்கு தாம் மேற்கொண்ட பங்களிப்பு என்ன? என்பதையெல்லாம் கேள்விக்கு உட்படுத்தாமல், தமிழ் மக்களிடம் வாக்கு கேட்டு போகக்கூடிய ஒரே தகுதி கூட்டமைப்பின் வேட்பாளராக களம் இறங்குவதுதான்.

"தமிழ் மக்கள் சிங்கள கட்சிக்கு வாக்களிக்கப் போகின்றீர்களா? தமிழ் கட்சிக்கு வாக்களிக்கப் போகின்றீர்களா?, தன்மானமுள்ள தமிழர்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களிக்க வேண்டும், சலுகைக்காகவா? உரிமைக்காகவா? தமிழ் மக்கள் வாக்களிக்கப் போகின்றார்கள்?" என்றெல்லாம் மேடைகளில் பேசினால் போதும்.

இறந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர்காலத்தைப் பற்றியெல்லாம் தன்மானமுள்ள தேசிய உணர்ச்சி மிகுந்த தமிழ் மக்கள் ஆராய மாட்டார்கள். வாக்களிப்பார்கள். கடந்த காலத் தேர்தல் களில் அப்படித்தான் தமிழ் மக்கள் வாக்களித்துள்ளார்கள். தொடர்ந்த தேர்தல்களில் தமிழ் மக்கள் இதைத்தான் செய்கின்றார்கள் என்பதால் அதுதான் சரியான அரசியல் நிலைப்பாடு என்று நம்புகின்றார்கள்.

தமிழ் மக்களின் தேர்தல் நிலைப்பாட்டை தொடர்ந்து அவதானித்து வருகின்றவர்கள் சில முடிவுகளுக்கு வருகின்றார்கள். அதாவது தமிழ் மக்கள் சிங்கள அரசை விரும்பவில்லை, அரசுகளுடன் புரிந்துணர்வு அல்லது இணக்க உறவை கொண்டிருப்பதை விரும்பவில்லை, தமிழ் மக்கள் உரிமைக்கு முன்பதாக அபிவிருத்தியை விரும்பவில்லை, தமிழ் மக்களுக்காக எதையும் செய்யாவிட்டாலும் உரிமை என்று பேசினாலே போதும்! புல்லரித்துப் போவார்கள், தமிழ் மக்களுக்கு பூரிப்பை ஏற்படுத்தும் விதமாக "உரிமையை தரா விட்டால் மீண்டும் ஆயுதம் தூக்கவும் தயாராக உள்ளோம், இராணுவத் தையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த ஏனையவர்களை வடக்கை விட்டே வெளியேற்றுவோம்" என்றெல்லாம் பேசினால் போதும்! பேசுகின்றவர் "யார்?" அவரின் தராதரம் என்ன? என்பதையோ சீர்தூக்கிப் பார்க்கப் போவதில்லை.

அவர்கள் கூறுவது நடைமுறைச்சாத்தியமானதா? ஏன்பதையிட்டும் தன்மானமுள்ள தமிழ் மக்கள் யோசிக்கமாட்டார்கள்.

தேர்தல் வரை கூட்டமைப்பு, ஒற்றுமை, தமிழ் மக்களின் விடுதலை என்றெல்லாம் பேசுகின்றவர்கள். தேர்தலுக்குப் பின்னர் முட்டி மோதுகின்றபோது, அதையும் தமிழ் மக்களும், தமிழ் ஊடகங்களும் எரிச்சலோடு விமர்சிப் பார்கள். எவ்வளவு பிரச்சினைபட்டாலும் கூட்டமைப்பை விட்டு வெளியேற மாட்டார்கள். மானம் கெட்டாலும், மரியாதை கெட்டாலும் கூட்டமைபபுக்குள் இருந்து வெளியேறப் போவதில்லை, தேசியத்தின் ஒற்றுமையை சீரகுலைய விடமாட்டோம் என்றும் கூறுவார்கள்.

பூனையை எங்கே விட்டுவிட்டு வந்தாலும் நாம் வீடு வருவதற்கு முன்னர் பூனை வீட்டுக்கு வந்து விடுவதுபோல் இவர்களும் என்னதான் முரண்பட்டாலும், ஊடக அறிக்கை விட்டாலும், பகிஸ்கரிப்புச் செய்தாலும் கூட்டமைப்பை விட்டுப் போவதில்லை. என்பதை நன்கு தெரிந்து வைத்திருக்கும் தமிழரசுக் கட்சி தனது வேலைத்திட்டத்தை சிறப்பாக திட்டமிட்டுச் செய்து கொண்டிருக்கின்றது.

தமிழரசுக்கட்சிக்கு வாய்ப்பாக அமைந்தது என்னவென்றால் கூட்டமைப்பின் தலைமையானது தமிழரசுக்கட்சியின் தலைமையாக இருப்பது தான். சம்மந்தனை தலைமையாக காட்டிக் கொள்ளும் அவர்கள் கூட்டமைப்பின் முடிவுகளை தீர்மானிக்கும் அணியாக கூட்டமைப்பக்குள் திகழ்கின்றனர்.

இப்பொழுது கூட்டமைப்புக்குள் பொது வேட்பாளராக கொண்டுவரப்பட்ட விக்கினேஸ்வரனையும், தமிழரசுக்கட்சியின் ஆதரவாளராக அல்லது தமது கைப்பொம்மையாக மாற்றிக் கொண்டுள்ளனர் என்று கூட்டமைப்பிலுள்ள ஏனைய கட்சிகளே விமர்சிக்கும் அளவுக்கு தமிழரசுக்கட்சியினரின் சாணக்கியம் உள்ளது.

முதலமைச்சர் என்றவகையில் விக்கினேஸ்வரனே முடிவுகளை எடுப்பார் என்று வெளியில் கூறினாலும், அவரது முடிவுகளில் செல்வாக்குச் செலுத்துகின்றவர்களாகவும், அதனாலான இலாபங்களை தாமே அறுவடை செய்கின்றவர்களாகவும் தமிழரசுக் கட்சியினரே இருக்கின்றனர்.

அது முதலமைச்சரின் பதவிப் பிரமானம், மாகாண சபைகளுக்கான அமைச்சர்களை தெரிவு செய்வது என மாகாண சபை விடயத்தில் தமிழரசுக்கட்சியின் எழுச்சி விஸ்வரூபம் எடுத்துள்ளது.

மன்னாருக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட வேண்டுமென ரெலோவின் தலைவர் தமது தலைமைப் பொறுப்பையே இராஜினாமா செய்து கொள்ளப்போவதாக மிரட்டுகின்ற அளவிலும், ஈ.பி.ஆர்.எல்எப்பின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தனது சகோதரருக்கு ஒரு அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட வேண்டுமென தேர்தலுக்கு முன்னரும், பின்னரும் தனது வல்லமை அத்தனையையும் பிரயோகிக்க வேண்டியிருந்தது. புளொட்டின் தலைவர் சித்தார்த்தன் யாழ்ப்பாணத்தில் மூன்றாவதாக பெரும்பான்மையான விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்ட அடிப்படையிலும், கூட்டமைப்பிலுள்ள ஒரு கட்சித் தலைமை என்றவகையிலும் அமைச்சுப் பொறுப்பு ஒன்று வழங்கப்பட வேண்டுமென்றும் கடும் பிரயத்தனங்களைச் செய்தும் அது ஒன்றும் நடக்கவில்லை.

தகுதி தராதரம் கவனத்தில் கொள்ளப்பட்டதாக கூறப்பட்டு சுரேஸ்பிரேமச்சந்திரனின் தம்பியின் கலாநிதித் தகுதியையே தூக்கி எறிந்துவிட்டார்கள். சித்தார்த்தனுக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்க முடியாது என்றும் தவிசாளர் பொறுப்பு வழங்கப்படும் என்று கூறியவர்கள் இறுதியில் அதுவும் தரமுடியாது என்று அதையும் தமிழரசுக் கட்சியின் உறுப்பினரான சிவஞானத்துக்கு வழங்கியுள்ளார்கள். தனது தம்பியாருக்கு அமைச்சு வழங்காவிட்டாலும் தன்னால் சிபாரிசு செய்யப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். அதற்குக் காரணம் ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பில் வேட்பாளராக நிறுத்தப்பட்ட ஐங்கரநேசன், ஈ.பி.ஆர்.எல்.எப்ல் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு தமிழரசுக் கட்சியோடு இணைந்து கொண்டதால் அவருக்கு ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் பெயரால் அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படக் கூடாது என்பதே சுரேஸ் பிரேமந்திரனுக்கு முல்லைத்தீவு மீது அக்கறை வருவதற்கக் காரணம் என்றும் கூறப்படுகின்றது.

செல்வம் யாருக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட வேண்டுமென சிபாரிசு வழங்கினாரோ, அதை மறுத்து தேர்தல் பிரசாரங்களில் தேவாலயங்களில் முக்கிய பிரசாரங்களை கச்சிதமாக செய்து உதவியவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் விதமாக டெனிஸ்வரனுக்கு அமைச்சுப் பொறுப்பை வழங்கியிருக்கின்றார்கள். அது செல்வத்தைத் திருப்தி அளிக்கவில்லை என்று கூறப்பட்டாலும் ஆயரை பகைத்துக்கொள்ள அவர் விரும்ப மாட்டார்.

இதனால் வடக்கு மாகாண சபைக்கான அமைச்சர் பொறுப்புக்கள் விடயத்தில் முதலமைச்சரும், தமிழரசுக்கட்சியினரும் ஒரு அணியினராகவும், சுரேஸ்பிரேமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் ஆகியோர் ஒரு அணியினராகவும் பிரிந்து நிற்கின்றனர்.

இதன் வெளிப்பாடு இம்மாதம் பதினோராம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான பதவியேற்பு வைபவமும், மாகாண அமைச்சர்களுக்கான பதவியேற்பும் நடைபெற்றபோது, அந்த நிகழ்வில் ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட்,ரெலோ ஆகிய கட்சி களைச் சேர்ந்த ஒன்பது உறுப்பினர்கள் அந்த வைபவத்தில் மாகாண சபை உறுப்பினர்களாக பதவிப்பிரமாணம் செய்துகொள்ளவில்லை. அக்கட்சித் தலைவர்களும் அந்த வைபவத்தில் கலந்து கொள்ளவில்லை.

இதுதொடர்பில் அந்த வைபவத்தில் கருத்துரைத்த முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அவர்கள், "பொதுவாழ்க்கையில் நுழைபவர்கள் சுய நலன்களைக் களைந்து எப்பொழுதும் பொது நலன்களைக் கருதியே முடிவெடுக்க வேண்டும். தமக்கோ, தமது குடும்பத்தாருக்கோ, தமது நண்பர்களுக்கோ, நிதி சார்பான அல்லது வேறு வகையான நன்மைகள் கருதியோ முடிவெடுக்கக் கூடாது" என்று கூறியிருந்தார். அது மட்டுமல்லாமல் அமைச்சுப் பொறுப்புக்கள் தொடர்பில் தற்போதைய முடிவை எவரும் தன்னிடம் கேள்வி கேட்கவில்லை. அப்படிக் கேட்டிருந்தால் அதற்கு விளக்கம் கொடுத்திருப்பேன் என்றும் கூறியிருந்தார்.

அதேவைபவத்தில் கருத்துரைத்த சம்மந்தன் அவர்கள் "இன்று நண்பர்கள் சிலர் வராமை கவலையளிக்கின்றது. இருந்தாலும் எமக்குள் எவ்விதமான கசப்புணர்வுகளும் இல்லை" என்று கூறியிருந்தார். அவரின் அந்தப் பேச்சு வழமைபோல் தலையில் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தாலும் கண்ணைப்பிதுக்கிக் கொண்டு ஒன்றுமே இல்லை அது பற்றி நாங்கள் பேசி முடிவுக்கு வருவோம் என்று கூறுவதுபோல் இருந்தது என்று அங்கு நின்றவர்கள் கூறினார்கள்.

எனினும் அடுத்த நாள் மூன்று கட்சிகள் பதவிப்பிரமாண வைபவத்தை பகிஸ்கரித்தது தொடர்பில் கருத்துக் கூறும்போது - வடக்கு மாகாண சபைக்கு அமைச்சர்கள் நியமனம் தொடர்பில் முதலமைச்சரே முடிவுகளை எடுத்தார். நாங்கள் தலையிடவில்லை. அவ்விடயத்தில் சில கட்சித்தலைவர்களின் தனிப்பட்ட விருப்புகளுக்காக எம்மால் விட்டுக் கொடுக்கமுடியாது. நாம் ஒருபோதும் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைக்கமாட்டோம் என்று கூறியிருந்தார்.

அதே நிகழ்வு தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் கூட்டாக கருத்துக் கூறிய சுரேஸ், சிவாஜி, சித்தார்த்தன் ஆகியோர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐந்து கட்சிகளின் கூட்டமைப்பாகும்.தேர்தலில் கூட்டமைப்பிற்கே தமிழ் மக்கள் வாக்களித்தார்கள். தனியே ஒவ்வொரு கட்சிக்குமாக தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை. ஆனால் தமிழரசுக் கட்சி தேர்தலுக்கு முன்னதாகவும், தேர்தலுக்கு பின்னதாகவும் தான்றோன்றித்தனமாகவும் செயல்படுகின்றது.

மாகாண அமைச்சர்கள் நியமனங்கள் தொடர்பில் ஐந்து கட்சிகளுடனும் கலந்துரையாடப்படவில்லை. இந்த விடயமானது கூட்டுக்கட்சி ஜனநாயகத்துக்கு முரணானதாகும். நாங்கள் பதவிகளுக்காக அங்கலாய்ப்பவர்கள் அல்ல. தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளவாறு வட,கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் தமிழர்களுக்குள்ள இறைமை அடிப்படையில் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டித் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். தேர்தல் பிரசார மேடைகளில் பேசியவாறு கூட்டமைப்பு நடந்து கொள்ளத் தவறுமாக இருந்தால் அதனை நாங்கள் தட்டிக் கேட்போம். அதனை யாரும் தவறு என்று குறிப்பிட்டால் அந்தத் தவறை நாங்கள் தொடர்ந்து செய்வோம் என்றும் குறிப்பிட்டனர்.

அதுமட்டுமல்லாமல் முதலமைச்சர் தலைமையிலான பதவியேற்பை நிராகரித்த தமது கட்சிகளின் ஒன்பது உறுப்பினர்களும், முல்லைத் தீவில் தமிழ் மக்களின் இரத்தம் சிந்திச் சிகப்பேரிய முள்ளிவாய்க்காலில் பதவிப்பிரமாணம் செய்து கொள்வார்கள் என்றும் கூறியிருந்தார்கள்.

அதற்கமைவாக இம்மாதம் 13ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் பதவிப்பிரமானம் செய்து கொள்ள அவர்கள் ஆயத்தமாகிய போதும் மன்னார் ஆயர் தலையிட்டுத் தடுத்ததால் அந்த பதவியேற்பு நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புகைச்சலுக்கு நடுவே வட மாகாண முதலமைச்சரின் இணைப்பாளர்களாக இரத்மலானை இந்துக்கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் திரு.மன்மத இராஜன், ரீ.ஆர்.ஓவின் இணை இயக்குநர் நிமலன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நியமனங்கள் தொடர்பிலும் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் உள்ளன. இவர்கள் இருவரும் நற்பெயர் அற்றவர்கள் என்ற குற்றச் சாட்டுக்களே முன்வைக்கப்படுகின்றன.

மன்மத ராஜனும், நிமலனும் முதலமைச்சர் விக்கினேஸ்வரனின் உறவினர்கள் என்று தற்போது கூறப்படுகின்றது. அது தவிர நிமலன் தொடர்பாக தெரிவிக்கப்படும் விமர்சனங்கள் அவர் சிறந்த கல்விமான் என்றும் அவர் தேசிய சமாதானப் பேரவையில் முக்கிய பங்கு வகித்தவர் என்றும், ஐக்கிய நாடுகள் சபையின் பிரிவுப் பணிகளிலும் சில காலம் பணியாற்றியவர் என்றும் கூறும் அதேவேளை சுனாமிக்குப்பின்னர் புலிகள் ஏற்படுத்திய (ரீ.ஆர்.ஓ) தமிழர் புனர்வாழ்வு அமைப்பில் பணியாற்றினார் என்றும் அதில் பல மோசடிகளில் ஈடுபட்டிருந்தார் என்றும் அதனால் புலிகளின் துரோகிப் பட்டியலில் இணைக்கப்பட்டு தேடப்பட்டார் என்றும் கூறப்படுகின்றது.

மன்மதராஜன் அதிபராக இருந்தபோதும் அதற்குப்பின்னரும் இந்து மா மன்றத்தின் தலைவராக இருக்கும் நீலகண்டனின் நெருக்கத்துக்குரியவர் என்று கூறும் விமர்சகர்கள், அவர் அதிபராக இருந்த போது பாடசாலையை வளர்ச்சிப் படுத்த பாடுபடவில்லை என்றும் தனிப்பட்ட வளர்ச்சியிலேயே அக்கறை செலுத்தினார் என்றும், அங்கு இரத்மலானை இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்டுவரும் சிறுவர் பராமரிப்பு இல்லச் செயற்பாடுகளிலும் விமர்சனத்துக்குரிய அநாவசிய தலையீடுகளைச் செய்து வந்தார் என்றும், பின்னாலில் தான் அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற வேண்டி ஏற்பட்டதால், அதற்கு தகுதியற்றவராக இருந்தபோதும், சட்டத்துக்குப் புறம்பாக தனது மனைவியை அப்பாடசாலையின் அதிபராக இவரே நியமித்தார் என்றும், அதை எதிர்த்த பாடசாலையின் மாணவர்களுடனும், பெற்றோருடனும், பாடசாலை நலன் விரும்பிகளுடனும் பிரச்சனைப்பட்டார் என்றும், இறுதியில் கல்வி அமைச்சுவரை கொண்டு செல்லப்பட்டு அதிபர் பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டதால் தகுதிவாய்ந்த அதிபர் பாடசாலையை பொறுப்பெடுத்ததும், நீண்ட காலமாக ஆக்கிரமித்திருந்த பாடசாலையை விட்டு வெளியேறினார் என்றும், பின்னர் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களை நாடி தமக்கு ஏதாவது பதவி ஒன்றை வழங்குமாறு கேட்டிருந்தார் என்றும் கூறும் விமர்சகர்கள் இப்போது நீல கண்டனின் ஆசிர்வாதத்தோடு முதலமைச்சரின் இணைப்பாளராக புதிய அவதாரம் எடுத்திருக்கின்றார் என்றும் கூறுகின்றனர்.

இணைப்பாளர்கள் தொடர்பாக வெளியாகி இருக்கும் விமர்சனங்கள் உண்மையா? பொய்யா? என்பதைத் தேடுகின்றபோது எதிர்காலத்தில் இதுமாதிரியான பல விமர்சனங்கள் வெளியாகும் என்றும் கூறப்படுகின்றது பொறுத்திருப்போம். இப்போது மாகாண அமைச்சர்கள் நியமனத்திலும், இணைப்பாளர் நியமனங்கள் தொடர்பிலும் வட மாகாண முதலமைச்சர் விமர்சனக் கணைகளை எதிர்கொண்டிருப்பது தெளிவாகின்றது.

இத்தைய நெருக்கடிகள் முதலமைச்சரை சுயாதீனமாகச் செயற்பட விடாமலும், மாகாண சபையை நேர்த்தியாக முன்னகர்த்த விடாமலும் தடுத்துவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இவற்றையெல்லாம் சமாளித்துக் கொண்டு முதலமைச்சர் எவ்வாறு தமிழ் மக்கள் வழங்கியிருக்கும் ஆணையை நிறைவேற்றப் போகின்றார் என்பதே கேள்வியாக உள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கள் இருந்து கொண்டு எவரும் எதையும் செய்யலாம் அவர்கள் திருடர்களாகவும் இருக்கலாம், தில்லாலங்கடியாகவும் இருக்கலாம். மோசடிப் பேர்வழிகளாகவும் இருக்கலாம். ஆனால் கூட்டமைப்புக்குள் இருந்தால் சரிதான் என்பதுதான் தன்மானமுள்ள தமிழ் மக்களின் ஒரே நிலைப்பாடாகும்.

— அலசுவது - மதியூகி —

# அமெரிக்க நெருக்கடியும் உலகப் பொருளாதாரமும்

**தொகுப்பு: வேணு கிருஷ்ணா**

### உலகப் பொருளாதார நெருக்கடியின் பாதிப்பு

நாம் தற்போது வாழும் காலகட்டம் மிக ஆழமான உலகளாவிய பொருளாதார நெருக்கடிக் காலகட்டம். இது முதலாளித்துவத்தின் தற்காலிக நெருக்கடியல்ல. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அடிப்படை முரண்களை வெளிக்காட்டும் ஆழமான நெருக்கடிக் கால கட்டம் இது. இந்த நெருக்கடியால் பாதிக்கப்படாத பொருளாதாரம் என்று ஒரு பொருளாதாரம் கிடையாது. உலகின் அனைத்து நாடுகளையும் இந்த நெருக்கடி தொட்டுத் துளைத்து நிற்கிறது. முதலாளித்துவ அமைப்புக்களின் - நிறுவனங்களின் போதாமையையும் இந்த நெருக்கடி பிளந்து காட்டியுள்ளது. முதலாளித்துவத்தின் மிகப் பெருமை வாய்ந்த திட்டப் பணியான ஐரோப்பிய ஒன்றியம் இன்று ஆடிப்போய் நிற்கிறது. கிரேக்க அரசு ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவதும் அதன் தொடர்ச்சியாக ஒன்றியம் சரிவடைவதும் தவிர்க்க முடியாத நிகழ்வுகளாகக் கருதப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் பதற்றமான நிலை உலகப்பொருளாதார நெருக்கடியை மேலும் ஆழமாக்கும் என்பதில் ஐயமில்லை.

### பொருளாதார நெருக்கடி முடிவுக்கு வந்துவிட்டதா?

உலகப்பொருளாதார நெருக்கடி முடிவடைந்துவிட்டதாக இந்திய நாட்டில் ஒரு தோற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்த செய்திகள், நாளேடுகளில் முதல் பக்கங்களில் வருவது தவிர்க்கப் பட்டுவிட்டது. தொலைக்காட்சியில் கூட பொருளாதார நெருக்கடி சம்பந்தமான செய்திகளை கேட்க முடிவதில்லை. இது போதாதென்று, பங்குச் சந்தையில் புள்ளிகள் 15 ஆயிரத்தையும் தாண்டி விட்டன. 9 ஆயிரத்திலிருந்து திடீரென்று இந்த உயர்வு ஏற்பட்டிருப்பதால், கடந்த சில மாதங்களுக்கு முன்பு சோர் வடைந்து போயிருந்த இந்திய பெரும் முதலாளிகளும் அதிகார வர்க்கமும் சந்தோசத்தில் ஆழ்ந்துள்ளனர். இந்திய பணக்கார வர்க்கம் மட்டுமல்ல, பொருளாதார நெருக்கடியால் மிகக்கடுமையாக தாக்குதலுக்கு உள்ளான வளர்ந்த நாடுகளின் பணக்கார வர்க்கமும் கூட எச்சரிக்கை உணர்வுடன் இருந்தாலும், நெருக்கடி முடிந்துவிட்டது என்ற மன நிலைக்கு சென்றிருக்கிறார்கள்.

### இந்த மனநிலை எப்படி வந்தது?

நிதித்துறையில் ஏற்படும் சில குறியீடுகள், குறிப்பாக உண்மைப் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த இயலாத பங்குச்சந்தை காட்டும் புதிய நிலவரங்களால் பணக்கார வர்க்கம் சற்று மகிழ்ச்சியடைந்துள்ளது.

உண்மைப்பொருளாதாரத்திலும் கூட, நெருக்கடியின் அடி ஆழம் எது என்பதை கண்டறிவதை நோக்கி இந்த உலகம் பயணப் பட்டுக்கொண்டிருக்கிறது.

ஆனால் நிலைமை மிகவும் மோசமடையவில்லை என்று கூறுவதற்கும், நிலைமை மீண்டும் 'இயல்பு' நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறது என்று கூறுவதற்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது.

இப்படித்தான், பிரிட்டிஷ் பிரதமர் கார்டன் பிரவுன், பிரிட்டனில் வேலையின்மை அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்ற போதிலும், அந்த உண்மையைக் கூறாமல், இந்த ஒட்டு மொத்த காலத்துடன் ஒப்பிடும்போது, வேலையின்மை பிரச்சினை குறைந்து கொண்டு வருகிறது என்று கூறியுள்ளார்.

இதேபோன்றுதான் ஜுன் மாதம் வரையிலும் அமெரிக்கா சொல்லிக்கொண்டிருந்தது ஆனால் கடந்த மே மாதத்துடன் ஒப்பிடும்போது ஜுன் மாதத்தில் அமெரிக்காவில் வேலையிழந்துள்ளோர் எண்ணிக்கை மிகமிக அதிகமானது இது அவர்களின் நம்பிக்கையை தகர்த்தது.

இப்போதும் உலகம் முழுவதும் வெளியாகிக் கொண்டிருக்கும் புள்ளி விவரங்களின் படி பார்த்தால்கூட, நாம் உலகப் பொருளாதார நெருக்கடியின் இறுதிக்கட்டத்தில் இருக்கிறோம் என்று கூறமுடியாது.

### மூன்று எதிர்மறைகள்

உலகளாவிய பொருளாதார நெருக்கடி தனது இறுதிக்கட்டத்தை எட்டிக்கொண்டிருக்கிறது என்று கருதப்படும் கருத்தை நிராகரிக்கிற விதத்தில், அதாவது, பொருளாதார நெருக்கடி தனது இறுதிக்கட்டத்தை எட்டவிடாமல் தடுக்கிற மூன்று முக்கிய அம்சங்கள் அமெரிக்காவில் வலம் வருகின்றன. அமெரிக்க பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் நிலவரங்களே பெரும்பாலும் உலகப்பொருளாதாரத்தில் பிரதிபலிக்கிறது என்பதால், இது உலகம் முழுவதற்கும் பொருந்தக்கூடியதே.

### முதலாவது, கூலியில் ஏற்பட்டுள்ள மந்தம்.

அதாவது, வேலையில் இருக்கிற தொழிலாளர்களில், ஒரு தொழிலாளிக்கு உண்மையாக கிடைக்கிற கூலி என்பது குறைந்து கொண்டிருக்கிறது. உண்மையான கூலி என்றால், கூலியின் வாங்கும் சக்தி என்று பொருள்.

தேவையின் அளவை அதிகப்படுத்துவதில் ஏற்பட்ட வீழ்ச்சியே பொருளாதார நெருக்கடியை துவக்கிவைத்தது என்பதை நினைவுகூரும் அதே நேரத்தில், வேலை வாய்ப்பில் ஏற்பட்டுவரும் வீழ்ச்சியானது தற்போது நெருக்கடியை மேலும் தீவிரமாக்குகிறது தொழிலாளர்கள் சம்பாதிக்கும் உண்மைக்கூலியில் ஏற்படும் வீழ்ச்சியானது, இந்த நெருக்கடியை மேலும் தீவிரமடையச் செய்கிறது.

பொருளாதார நெருக்கடியை தொடக்கி வைக்கும் விதத்தில் நடந்த தேவை வீழ்ச்சியுடன், தற்போது புதிதாக ஏற்பட்டுள்ள தேவை வீழ்ச்சியும், அத்துடன் வேலை வாய்ப்பில் ஏற்பட்டுவரும் வீழ்ச்சியின் விளைவுகளும் ஒன்றோடு ஒன்று இணைந்து, உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளின் அளவை முடக்குவதற்கும், அதைத்தொடர்ந்து நெருக்கடி மேலும் தீவிரமடைவதற்கும் வழிவகுக்கும்.

### இரண்டாவது எதிர்மறை அம்சம்

இரண்டாவது எதிர்மறை அம்சம் என்னவென்றால், அமெரிக்காவில் மாநில அரசுகளின் பொதுச்செலவின அளவு வீழ்ச்சியடைந்துள்ளது என்பதே. அமெரிக்காவைப் பொறுத்தவரை நிதிப்பற்றாக்குறையை தொடர மத்திய கூட்டாட்சி அரசுக்கு மட்டுமே உரிமை உண்டு. மாநில அரசுகளுக்கு அது இல்லை. இதன் காரணமாக, பொருளாதார மந்தச்சூழலில் அந்த அரசுகளின் வருவாய் குறையும்போது, அவர்களின் பொதுச்செலவினமும் வீழ்ச்சியடைகிறது. அமெரிக்க மத்திய அரசு மிகப்பெரும் அளவிலான நிதிப் பற்றாக்குறை கணக்கை பேணுகிறது என்ற போதிலும், வங்கிகளுக்கு அதிலிருந்து ஏராளமாக கைகொடுக்கிறது என்றபோதிலும், அந்த பெரும் அளவிலான பணம் வங்கிகளிலேயே குவிக்கப்பட்டு இருப்பதால், அந்தப் பணம் பொருளாதாரத்தில் தேவையை உற்பத்தி செய்யவில்லை.

நிதிப் பற்றாக்குறை கணக்கின் ஒரு பகுதியாக, அமெரிக்க மத்திய அரசு, பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான பொதுச்செலவினத்தை மேற்கொண்டாலும், பொருளாதாரத்தில் தேவையின் அளவை அதிகரிக்கும் அளவிற்கு அது இல்லை. இதுமட்டுமின்றி, மாநில அரசுகள் தங்களது செலவினத்தை வேறு வழியின்றி குறைத்திருப்பதால், அவர்களது வரவு - செலவை நேர் செய்வதற்கான தேவையும் மத்திய அரசுக்கு இருக்கிறது. இத்தகைய வீழ்ச்சி தொடருமானால், மத்திய அரசு அறிவித்துள்ள நிதி மீட்புச் சலுகைகளும் கூட மாநில அரசுகளின் செலவுகளால் விழுங்கப்பட்டுவிடும் என்பதே உண்மை.

### மூன்றாவது எதிர்மறை அம்சம்

மூன்றாவது எதிர்மறை அம்சம், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கும் மேல், மத்திய அரசின் இத்தகைய நிதி மீட்புச் சலுகைகள் தொடரமுடியாது என்பதேயாகும். சந்தையில் தேவையை உருவாக்குவது தொடர்பான மேலாண்மையில், நிதி மூலதனமானது ஒருபோதும் அரசின் நேரடி தலையீட்டை விரும்பாது என்பது நமக்குத் தெரிந்ததே. அது, அரசிடமிருந்து 'மிக வலுவான நிதியை' எதிர்பார்க்கும்' அதற்கு முன்னுரிமை கொடுக்கும். அதாவது, அரசு வருவாய்க்கும் செலவிற்கும் இடையே தள்ளாடவேண்டிய சூழ்நிலைமைய உருவாக்கும். எனவே, ஒபாமா நிர்வாகம் தற்போது நடைமுறைப்படுத்தியுள்ள நிதி மீட்பு சலுகைகளால் ஏற்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறை கணக்கு என்பது, நிதி மூல தனத்திற்கு ஒவ்வாததே ஆகும். பெரும் எண்ணிக்கையிலான பழமைவாத பொருளாதார நிபுணர்களும் அவர்களது ஆதரவாளர்களும் நிதி மூலதனத்தின் நிலைமை குறித்தே கவலைப்படுகிறார்கள்.

இவர்களது கைங்கரியத்தால், பொருளாதார நெருக்கடியின் இறுதிக்கட்டத்தை எட்டிவிட்டோம் என்று கருதி, கடந்த 2 மாதங்களாக வேலையின்மை அதிகரித்ததற்கான புள்ளிவிவரங்கள் பதிவாகாததை காட்டி, ஒபாமா அரசு தனது நிதிப்பற்றாக் குறை கணக்கை குறைத்துக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது. இதன்படி செயல்பட்டால், அமெரிக்கப் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியை நோக்கி உந்தித் தள்ளப்படும்.

இது 1937ல் பொருளாதார பெருமந்தம் ஏற்பட்ட காலத்தில் என்ன நடந்ததோ, அதை அப்படியே பிரதிபலிக்கிறது. அந்த கால கட்டத்திலும் நிதி மூலதனத்தின் லாப வெறிக்காக, ஜனாதிபதி ரூஸ்வெல்ட், மத்திய அரசின் நிதிப்பற்றாக்குறை கணக்கை வெட்டிச்சுருக்கினார் இதன் விளைவாக அமெரிக்கப் பொருளாதாரம் மேலும் வீழ்ந்தது. அதன்பிறகு, 2ம் உலகப்போரை பயன்படுத்தி, இரண்டு தரப்பு ராணுவங்களுக்கும் ஏராளமாக ஆயுதங்களை விற்று சம்பாதித்து தனது பொருளாதாரத்தை நிலைநிறுத்திக்கொண்டது.

இன்றைக்கும், பொருளாதார நெருக்கடியின் இறுதிக்கட்டத்தை எட்டாத நிலையில், அமெரிக்க நிதிப்பற்றாக்குறை கணக்கில் பெருமளவில் வெட்டிச்சுருக்கும் முயற்சியால் நிலைமை மேலும் மோசமடையப்போகிறது. ஜனாதிபதி ஒபாமா மிகக் கடினமான நிலைமையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார். எதிர்ப்பு ஏதும் இல்லாத நிலையில், நிதி மூலதனத்தின் வேட்கையை அனுமதித்தால் உலகப்பொருளாதாரம் மேலும் படுபாதாளத்திற்கு வீழும்.

### அபாய கட்டத்தில் அமெரிக்க பொருளாதாரம்: உலகவங்கி எச்சரிக்கை

அமெரிக்க பொருளாதாரம் அபாயகரமான ஒரு தருணத்தை நோக்கி சென்று கொண்டிருப்பதாக உலக வங்கி எச்சரித்துள்ளது. இன்னும் சில நாட்களில் அமெரிக்க பொருளாதாரம் பெரும் ஆபத்தை சந்திக்க வாய்ப்புள்ளதாக உலக வங்கி தலைவர் (Jim Young Kim) கூறியுள்ளார். அபாயத்தை தடுக்க வேண்டுமென்றால் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கும் ஒன்றுகூடி விவாதித்து ஏதாவது ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்றும் கிம் கூறியுள்ளார். கடன் வரம்பு பிரச்சினைக்கு அமெரிக்கா தீர்வு காணாத பட்சத்தில், அது வளரும் நாடுகளை கடுமையாக பாதிக்கும் என்றும் உலக வங்கித் தலைவர் எச்சரித்தார். அமெரிக்க அரசின் கடன் வரம்பு வரும் 17ம் தேதியுடன் நிறைவடைகிறது. அதன் பின்னர் அரசின் செலவினங்களுக்கு நிதி கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், இது தொடர்பாக அமெரிக்காவின் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் கருத்து வேறுபாடுகள் நிலவுவதால் இப்பிரச்சினை முடிவுக்கு வராமல் உள்ளது

> **மூன்றாவது எதிர்மறை அம்சம், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கும் மேல், மத்திய அரசின் இத்தகைய நிதி மீட்புச் சலுகைகள் தொடர முடியாது என்பதேயாகும். சந்தையில் தேவையை உருவாக்குவது தொடர்பான மேலாண்மையில், நிதி மூலதனமானது ஒருபோதும் அரசின் நேரடி தலையீட்டை விரும்பாது என்பது நமக்குத் தெரிந்ததே. அது, அரசிடமிருந்து ஷமிக வலுவான நிதியை◌ எதிர்பார்க்கும் அதற்கு முன்னுரிமை கொடுக்கும். அதாவது, அரசு வருவாய்க்கும் செலவிற்கும் இடையே தள்ளாடவேண்டிய சூழ்நிலைமையை உருவாக்கும். எனவே, ஒபாமா நிர்வாகம் தற்போது நடை முறைப்படுத்தியுள்ள நிதி மீட்பு சலுகைகளால் ஏற்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறை கணக்கு என்பது, நிதி மூலதனத்திற்கு ஒவ்வாததே ஆகும். பெரும் எண்ணிக்கையிலான பழமைவாத பொருளாதார நிபுணர்களும் அவர்களது ஆதரவாளர்களும் நிதி மூலதனத்தின் நிலைமை குறித்தே கவலைப்படுகிறார்கள்.**

### அமெரிக்காவில் கீழ் சபை முட்டுக் கட்டை போட்டிருக்கிறது.

அமெரிக்க அரசின் பல்வேறு துறைகளுக்குத் துறை ரீதியாக பட்ஜெட் ஒதுக்கீட்டைச் செய்து அதை வாக்கெடுப்புக்கு விட்டு அதன் மேல் விவாதித்து வாக்கெடுப்பு நடத்தி தேவைப்பட்டால் அதில் கூட்டல் குறைகளைச் செய்து பெரும்பான்மை வாக்கு பெற்றவுடன் கீழ் சபையில் இருந்து மேல் சபைக்கு அனுப்பி வைத்து அவர்கள் மீண்டும் திருப்பி அனுப்பி வைத்தோ அல்லது தாங்களும் வாக்குப் போட்டு ஜனாதிபதிக்கு அனுப்பியோ வைப்பார்கள். அப்படி செலவீனங்களுக்கு இரு சபையினரும் வாக்குப் போட்டு அனுமதி அளித்த பின்னர் ஜனாதிபதி கையெழுத்துப் போட்டு நிதியை ஒதுக்கி வைப்பார்கள். அதை அந்தந்த துறையினர் செலவு செய்வார்கள். இதில் மத்திய அரசின் துறைகளான ராணுவம், தபால், உளவுத் துறை, ஆராய்ச்சி நிலையங்கள், தேசிய பூங்காக்கள், மத்திய வருமான வரித்துறை, நிதித் துறை, நீதித் துறை என்று ஏகப் பட்ட துறைகளுக்கான பட்ஜெட்டுகள் அமெரிக்கப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றன. அது போலவே அமெரிக்க அரசின் ஒட்டு மொத்த வருடாந்திர வரவை விட செலவு அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதல் செலவுக்கான அனுமதியையும் இந்த இரு சபைகளும் அங்கீகரிக்க வேண்டும். இல்லாவிட்டால் அமெரிக்கா அரசு கடன்காரர்களுக்கு கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போய் விடும். இந்த வருடம் இந்த இரண்டு விஷயங்களுக்குமே கீழ் சபை முட்டுக் கட்டை போட்டிருக்கிறது.

இப்பொழுது அமெரிக்காவின் பட்ஜட்டை அதன் காங்கிரஸ் எனப்படும் பாராளுமனறம் வாக்குப் போட்டு அனுமதிக்கவில்லை. காங்கிரஸ் என்றாலே எங்கும் விவகாரம்தான். அவை அங்கீகரிக்காதபடியால் அமெரிக்க மத்திய அரசின் பெரும்பாலான நிறுவனங்கள் முடக்கப் பட்டுள்ளன. அதில் வேலை பார்க்கும் ஆட்களுக்கான சம்பளம், அலுவலக வாடகை, கரெண்ட் பில், கம்ப்யூட்டர் செலவுகள், உதிரிச் செலவுகள் என்று எந்தவொரு செலவுக்குமான நிதி ஆதாரம் அளிக்கப்

தொழில்நுட்பம்



# ஒரு குடும்பமே அழிந்த கதை!

நண்பர்களை தேடிக் கண்டுபிடிக்க, அரட்டை அடிக்க, மற்றும் சமூகத்தோடு இணைந்துவாழ, உதவியாக அமைவது பேஸ்புக் மற்றும் ரிவிட்டர் போன்ற சமூக இணையத்தளங்கள் ஆகும். இதனால் ஒன்றை ஆக்கவும் முடியும். அழிக்கவும் முடியும் என்பது உண்மைதான். உதாரணமாக எகிப்த்து புரட்சியை எடுத்துக்கொள்ளலாம். அங்கே புரட்சி நடைபெற்றவேளை பேஃஸ்புக் ஊடாகப் பரவிய செய்தியால், பல்லாயிரம் இளைஞர்கள் போராட்டத்தில் கலந்துகொண்டார்கள். ஆனால் இந்தியாவில் நடந்திருக்கும் விடயமோ ஒரு குடும்பத்தையே பாழும் கிணற்றில் தள்ளியுள்ளது. மிகவும் அநாகரிகமான செயல்களைச் செய்வதில் எம்மவர்கள் டிப்ளோமா வாங்கி இருப்பார்கள்போல இருக்கிறது. தமக்கு ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால், எவ்வளவு கேவலமாக இறங்கிசெயற்பட முடியுமோ அவ்வளவு கேவலமான வேலைகளில் இறங்குவார்கள் சிலர்.

இப்படிதான் இந்தியாவில் உள்ள மாணவி ஒருவர் தனது பேஸ்புக் அக்கவுண்டில் தனது புகைப்படங்கள் சிலவற்றை ஏற்றியுள்ளார். அம்மாணவியை பிடிக்காத இளைஞன் ஒருவன், குறித்த மாணவியின் போட்டோவை எடுத்து போட்டோ ஷொப்பில், சில மாற்றங்களைச் செய்து, அவரை ஆபாசமாகக் காட்டும் விதத்தில் வெளியிட்டுள்ளார்.

அதுமட்டுமல்லாது குறித்த பெண் விபச்சாரத்தில் ஈடுபடுவதாக பேஸ்புக் ஊடாக பரப்புரைகளையும் மேற்கொண்டுள்ளார். தான் இழிவுப்படுத்தப்பட்டதை அறிந்த பெண்ணும், இந்த பெண்ணின் குடும்பத்தினரும் தற்கொலையை தீர்வு என்று எண்ணியுள்ளார்கள். இவர்களை பேஸ்புக் இப்படியானதொரு மாபாதக முடிவுக்கு கொண்டுசென்றுள்ளது.

குடும்பத்தில் உள்ள அனைவரும், தூக்குப்போட்டு இறந்துபோனார்கள். இந்தக் காட்சியையே நீங்கள் இங்கே பார்க்கிறீர்கள். இக்கொடுமைகளைச் செய்த அந்த இளைஞனுக்கு என்ன கதி நேர்ந்தது என்று நாம் சொல்லவே தேவையில்லை.

சில நாட்களில் அவன் துடிதுடித்து இறந்துபோனான் என்ற தகவலும் வெளியாகியுள்ளது. அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்றுகொல்லும் என்பார்கள். ஆனால் இப்போது பாவம் இழைப்பவர்கள் எல்லோருக்கும் மிக சீக்கிரத்தில் தண்டனை கிடைத்துவிடுகிறது.

# லொக் போட வேண்டுமா?

Android Phone களுக்கு போடுகின்ற லொக்கை (Lock) எமது கணினியிலும் போடலாம். இந்த Lock ஆனது Android போன்களுக்கான lock ஆகும். அதிகமானோருக்கு இந்த Android Lock பற்றி தெரியும். ஆனால் கணினிகளுக்கு இவ்வாறான Lock போடுவது பற்றி அநேகமானோருக்கு தெரியாமல் இருக்கலாம்.

இந்த Lock இல் நிறைய விடயங்கள் இருக்கின்றன. அதை Settings பகுதியில் சரிசெய்து கொள்ளலாம். இந்த lock இன் Password ஐ மூன்று தடவை தவறுதலாக கொடுத்ததால் Alarm (அலாரம்) அடிக்கும். ஒரு நிமிடத்தின் பின்னர் நின்றுவிடும்.

இதற்கு Key கொடுப்பது எளிது. Key கொடுக்க வேண்டிய இடத்தில் இரண்டு அல்லது மூன்று முறை தவறுதலாக கொடுங்கள். பின்னர் தானாக License Active ஆகிடும்.






# இனி எடிட் செய்யலாம்!

இதுவரை பேஸ்புக்கில் கருத்தொன்றை பதிந்தபின்னர் அதில் பிழை ஏற்பட்டதை உணர்ந்தீரால் அதை சில நிமிடங்களுக்கு உள்ளாகவே திருத்திவிடவேண்டும். அதன் பின்னர் எடிட் ஒப்ஸன் கிடைக்காது. ஆனால் இனிமேல் பழைய கருத்துக்கள் posts மற்றும் status messages களை எப்போது வேண்டுமாயினும் விரும்பியவாறு எடிட் செய்யும் வசதியை தரவிருக்கின்றது பேஸ்புக் நிறுவனம்.

எனினும் இந்த வசதியை சிலர் துஷ்பிரயோகம் செய்யக்கூடும் என எச்சரிக்கப்படுகின்றனர். உதாரணமாக கணினியில் அல்லது ஏனைய தொடர்பு சாதனங்களில் பேஸ்புக்கை பயன்படுத்துபவர்களாயின் அவற்றை லொகின் செய்தபடி விட்டிருப்பீர்கள். இதனால் ஏனைய நபர்களும் நீங்கள் வெளியிட்ட கருத்தொன்றை மாற்றம் செய்யக்கூடிய நிலை உருவாகலாம்.

தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு
தினமுரசு
நாளிதழ்
ரூ.10/=
மட்டுமே
இப்போது நீங்கள் அறிய விரும்பும்
அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்
A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!
- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "புதிவிறக்கப் பெட்டகம்"




இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

# விட்டுக் கொடுத்தால் கெட்டுப் போவதில்லை!



தந்தை இறந்த பின்பு தம்பி முத்துவின் குடும்பத்தையும் சேர்த்துக் கவனித்துக்கொண்டான் முருகன்.

இத்தனை வருடங்களாகத் தன்னையும் தனது மனைவி, மூன்று பிள்ளைகளையும் சேர்த்துக் கவனித்து வரும் அண்ணனுக்குச் சற்றாவது ஓய்வு கொடுக்கவேண்டும் என நினைத்தான் முத்து. தனது விருப்பத்தை அண்ணனிடம் தெரிவிக்க, மிகவும் சங்கடத்துடன் சம்மதித்தான் முருகன்.

அதன்படி இரண்டு ஏக்கரில் உள்ள இருநூறு தென்னை மரங்களையும் இருவரும் சேர்ந்து கவனித்துக்கொண்டு பலனை சமமாகப் பிரித்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார்கள்.

அவ்வாறு செய்துகொண்ட ஒப்பந்தப்படி அறுவடை சமயத்தில் தேங்காய் பறித்தார்கள். 1000 தேங்காய்கள் கிடைத்தன. தலா 500 தேங்காய்களைச் சமமாகப் பிரித்துக்கொண்டார்கள்.

அண்ணன் முருகன், தம்பியிடம், "நான் மாலை வரை தேங்காய்க்குக் காவல் இருந்து கொள்கிறேன். நீ இரவில் வந்து காவல் காத்துக் கொள்" எனச் சொல்லித் தம்பியை வீட்டுக்கு அனுப்பி விட்டுத் தேங்காய்க்குக் காவல் இருந்தான்.

இரவு வந்தது. தம்பி முத்து வருவதைக் கண்டான் முருகன். அவன் அருகே வருவதற்குள் தனது பங்கிலிருந்து 50 தேங்காய்களை எடுத்துத் தம்பியின் பங்கோடு சேர்த்துப்போட்டான். "பாவம்... தம்பிக்கு நம்மைவிட இரண்டு குழந்தைகள் அதிகம்" என மனதுக்குள் சொல்லிக்கொண்டான் முருகன்.

தம்பி வந்தவுடன், "இனி நீ தேங்காயைப் பார்த்துக்கொள்.." என்று கூறிவிட்டு வீடு திரும்பினான் முருகன். மறுநாள் காலையில் தனது பங்குத் தேங்காய்களைச் சந்தைக்குக் கொண்டு போவதற்காக டிராக்டருடன் வந்தான் முருகன்.

அவற்றை சந்தைக்குக் கொண்போய் காய்களை எண்ணி விலைக்குப் போடும் போது அவன் பங்கில் காய்கள் குறையாமல் 500-ம் அப்படியே இருந்தன.

அண்ணன் முருகனுக்குத் தெரியாமல், முத்து தனது பங்கிலிருந்து 50 காய்களை, "அண்ணன்தான் இதுவரை தந்தை போலிருந்து என் குடும்பத்தைப் பார்த்துக்கொண்டாரே, அவருக்கு எனது காணிக்கை" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு, தனது பங்கிலிருந்து அண்ணன் பங்கிலே 50 காய்களைப் போட்டது முருகனுக்குத் தெரியாது.

**விட்டுக் கொடுத்தால் யாரும் கெட்டுப் போவதில்லை.**

## வாரம் ஒரு திருக்குறள்



குடிசெயல் வகை

**சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்**
**தாழாது உஞற்று பவர்க்கு.**

தம் குடி உயர்வதற்கான செயலை விரைந்து முயன்று செய்பவர்க்கு அவர் ஆராயாமலேயே அச்செயல் தானே நிறைவேறும்.

குறள்:1024

## மருத்துவ மேதை



ஹிப்போகிரேட்டீஸ் -. 'அலோபதி மருத்துவத்தின் தந்தை' என்று அழைக்கப்படும் கிரேக்க மருத்துவர். கி.மு.460 இல் கிரேக்க நாட்டில் 'கோஸ்' தீவில் பிறந்தவர்.

பேய், பிசாசுகளால்தான் மக்களுக்கு நோய்வருகிறது என்றும் மந்திரம், மாந்திரீகம் போன்றவற்றால் நோய்களைக் குணமாக்கலாம் என்று நம்பிக் கொண்டிருந்த காலத்தில் இரத்தம், பித்தம், சளி போன்றவற்றால் வரும் கிருமிகளால்தான் நோய்கள் உண்டாகின்றண என்று கூறியவர்.

இயற்கை வழிமுறைகளாலும் வாழ்க்கைமுறையில் சிறிய மாற்றங்கள் செய்வதன் மூலமும் நோய்களைக் குணமாக்க முடியும் என்று சொல்லி அலோபதி மருத்துவத்துக்கு அடித்தளம் அமைத்தவர். எந்த நோயாக இருந்தாலும் நோயாளியை நேரடியாகப் பரிசோதித்து நோயின் அறிகுறிகளைக் கவனித்து நோயைக் கணித்து சிகிச்சை கொடுக்கவேண்டும் என்று மருத்துவர்களுக்கு வழிகாட்டியவர்.

இறந்தவர் உடலைப் பிளந்து பரிசோதிப்பது பாவம் என்று நம்பிக்கொண்டிருந்த காலத்தில் உடலை முழுமையாகப் பரிசோதித்து மனிதனின் உடற்கூறு பற்றி முதன்முதலில் விளக்கியவர். கிரேக்க நாட்டிலும் ஆசியா மைனர் பகுதிகளிலும் மருத்துவம் செய்துகொண்டே மக்களுக்குப் போதித்தவர். இவருடைய மருத்துவ அனுபவங்களை ஏறக்குறைய எண்பது கையெழுத்துப் பிரதிகளில் எழுதி வைத்திருந்தார்.

மருத்துவர்களும் மருத்துவ மாணவர்களும் ஆற்றவேண்டிய கடமைகள் மற்றும் நெறிமுறைகள் குறித்த 'ஹிப்போகிரேட்டீஸ் உறுதிமொழி'யை இன்றைக்கும் அலோபதி மருத்துவர்கள் பின்பற்றுகின்றனர்.

## தம்பிக்கு ஒரு பாட்டு

**உழைத்துச்சேர்க்கும் பணத்தின் மதிப்பை**
**உணர்ந்துகொள்ளணும் தம்பி**
**உல்லாசத்தாலே உண்டாவதெல்லாம்**
**செலவும்கடனும்தான் தம்பி**

**காலம் என்பது உயிரைப்போன்றது**
**கருத்தில்கொள்ளடா தம்பி – வீண்**
**பொழுதுபோக்கினால் புகழ்கிடைக்காது**
**புரிந்துகொள்ளடா தம்பி**

**கல்வி ஒன்றுதான் கடைசி வரைக்கும்**
**கூடவருமடா தம்பி – நன்கு**
**கற்றவரைத்தான் உலகம்மதிக்கும்**
**தாயும்போற்றுவாள் தம்பி**

**மனிதனை மனிதன் மதித்திட வேண்டும்**
**மனதிற் கொள்ளடா தம்பி – பிறர்**
**மதிக்க வாழ்வதே சிறந்தவாழ்வு**
**மறந்திடாதேடா தம்பி**

**அன்பால் இந்த உலகை வெல்லலாம்**
**அறிந்துகொள்ளடா தம்பி – நற்**
**பண்பால் பிறரை வழிநடத்தலாம்**
**உணர்ந்துகொள்ளடா தம்பி!**



## முக்கிய நிகழ்வுகள்

❖ 1837 - இந்தியாவில் அஞ்சல் துறை ஏற்படுத்தப்பட்டது.

❖ 3, 990 - கிழக்கு மற்றும் மேற்கு ஜெர்மனி ஒன்றாக இணைந்தன.

❖ 1957 - ரஷ்யாவின் ஸ்புட்னிக் செயற்கைக்கோள் முதன்முதலாக விண்ணில் செலுத்தப்பட்டது.

❖ 1780 - வேலு நாச்சியார் தலைமையில் ஆங்கிலேயர் எதிர்ப்புப் போர் நடைபெற்றது.

❖ 1886 - தென்னாபிரிக்காவில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது.

❖ 1886 - தோமஸ் அல்வா எடிசன் உலகின் முதலாவது அசையும் சினிமாப் படத்தைக் காண்பித்தார்.

❖ 1950 - அன்னை தெரசா தனது தொண்டு நிறுவனத்தைத் தொடங்கினார்.

❖ 1968 - அமெரிக்காவின் அப்பல்லோ-7 விண்கலம் 3 வீரர்களுடன் விண்வெளிக்குச் சென்றது.

❖ 1792 - அமெரிக்காவில் வெள்ளை மாளிகைக்கு (குடியரசுத் தலைவர் வசிப்பிடம்) அடிக்கல் நாட்டப்பட்டது.

❖ 1977 - அன்னை தெரசா அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார்.

❖ 1943 - காசநோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

❖ 1844 - இங்கிலாந்தில் ரோச்டேல் என்பவர் தனது நண்பர்களுடன் சேர்ந்து 'சமத்துவ முன்னோடிகள் கூட்டுறவு சங்கம்' என்ற கூட்டுறவு அமைப்பை முதன் முதலில் ஏற்படுத்தினார்.

❖ 1917 - ரஷ்யாவில் ஒக்டோபர் புரட்சி ஏற்பட்டது.

❖ 1886 - அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் சுதந்திரதேவி சிலை திறந்து வைக்கப்பட்டது.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 21.10.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1034**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1012**

**அன்புதாஸ் யுஸ்ரீனா, பாடசாலை வீதி,**
**இளவாலை.**

பரிசுக்குரியவர்: 1012

**பாராட்டுக்குரியவர்கள்**

01. சி.மதிநிலா, வட்டுவாகல், முல்லைத்தீவு.
02. ரா.உஷாந்தினி, யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்.
03. தொ.அமுதகானன், முள்ளியவளை, முல்லைத்தீவு.
04. சௌ.துஷ்யந்தினி, கோவில் வீதி, கொக்குவில்.
05. ம.அபிஷன், கரவெட்டி, நெல்லியடி.
07. K.அருந்தமா, திருநாவற்குளம், வவுனியா.
08. இ.தமயந்தி, கச்சேரி வீதி, யாழ்ப்பாணம்.

## நேரத்தின் மதிப்பு



1. ஒரு ஆண்டின் மதிப்பு என்னவென்று தேர்வில் தோல்வி அடைந்த மாணவனைக் கேளுங்கள்.
2. ஒரு மாதத்தின் மதிப்பு என்னவென்று குறைப்பிரசவத்துக்கு ஆளான ஒரு தாயைக் கேளுங்கள்.
3. ஒரு வாரத்தின் மதிப்பை அறிய ஒருவாரப் பத்திரிகையின் ஆசிரியரைக் கேளுங்கள்.
4. ஒரு நாளின் மதிப்பு என்னவென்று தெரிய, அன்று வேலை கிடைக்காமல்போன ஒரு தினக்கூலித் தொழிலாளியிடம் கேளுங்கள்.
5. ஒரு மணிநேரத்தின் மதிப்பு என்னவென்று ரயில் நிலையத்தில் சுற்றத்தாருக்காகக் காத்திருக்கும் மனிதரைக் கேளுங்கள்.
6. ஒரு நிமிடத்தின் மதிப்பு என்னவென்று ரயிலைத் தவறவிட்ட பயணியிடம் கேளுங்கள்.
7. ஒரு விநாடியின் மதிப்பு என்னவென்று ஒரு விபத்தில் உயிர் தப்பியவரைக் கேளுங்கள்.
8. ஒரு மில்லி செகண்டின் மதிப்பு என்னவென்று ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றவரைக் கேளுங்கள்.

தான் உகண்டாவை ஆள்வதற் கான திறவுகோல்களில் அவளும் ஒருத்தி என்பதால், அவளை களைய ஆரம்பித்தான் அமீன்.

பிரிட்டனுக்கு சென்ற ஜனாதிபதி கபாகா பாரிய குற்றச்சாட்டு ஒன்றை வீசினார்.

"தனது மாளிகையில் ஆயிரக்கணக்கானோரை கொன்றுவிட்டனர்" என்று கூறினார்.

"அது உண்மையா?" என்று பிரதமர் கேட்க அமீன், "எங்கள் முன்னாள் ஜனாதிபதிக்கு கணக்கு சரியாக வராது போலிக்கிறது" என்றான்.

"ஏன்?" என்ற பிரதமரின் கேள்விக்கு "ஜனாதிபதியின் விசுவாசப்படைகள் மற்றும் ஆதரவாளர்கள் என்று சகலரையும் சேர்த்து கூட்டிப் பார்த்தால் குறைந்தது ஆயிரத்து ஐந்நூறு பேராவது



அற்புதன் எழுதிய

# இடி அமீன்

உண்மைத் தொடர்...

அதிர் இடி 08

செத்திருப்பார்கள்" என்றான் சர்வ சாதாரணமாக.

படுகொலையை நகைச்சுவையாகவும், சர்வசாதாரணமாகவும் அவன் கூறியவிதம் பிரதமர் ஒபேடேயைக்கூட அசரச் செய்துவிட்டது.

தன் முன்னால் நிற்பவன் மனிதனா? இராட்சதனா? என்று அவருக்கே சந்தேகமாக இருந்தது.

ஜனாதிபதி கபாகா பிரிட்டனுக்கு தப்பியோடியது அமீனுக்கு வெட்கமாகிவிட்டது.

"கொஞ்சம் தாமதித்துவிட்டோம், இல்லையானால் கபாகாவின் தலையில் ரவைகளால் ஓட்டை போட்டிருப்பேன்!" என்று உறுமினான்.

கபாகாவுக்கு சொந்தமான மாளிகைகள் பமுனிக்கா, மசாகா ஆகிய இடங்களில் இருந்தன.

தனது படையுடன் அந்த மாளிகைகளை சூறையாடினான். ஏராளமான பணம் மற்றும் பெறுமதியான பொருட்கள் அந்த மாளிகைகளில் சிக்கின.

முக்கியமானவற்றை தான் எடுத்து வைத்துக்கொண்டு, ஏனையவற்றை தன் படைகளுக்கு விட்டுவிட்டான்.

அதனால் அமீன்மீது படையாட்கள் பெரும் விருப்புக் கொண்டார்கள்.

உகண்டா படையினர் அனைவரிடமும் அமீனின் சாகசங்களும், தாராளக் குணமும் கதைகதையாகப் பரவின.

"நீ தான் இராணுவத் தளபதி!" என்று பிரதமர் ஒபேடே அமீனிடம் கூறினாரே தவிர, உடனடியாக தளபதியாக்க சற்றுத் தயங்கினார்.

ஒபேடேவுக்காக அமீன் காத்திருக்கவில்லை. படைகளுக்குள் அமீன் தான் தளபதியாக வேண்டும் என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தான்.

"ஜனாதிபதி கபாகாவை பதவி நீக்கியது அநியாயம் அதைவிட அநியாயம் கபாகாவிற்கு விசுவாசமானவர்களைக் கொன்று குவித்தது!" என்று மக்கள் கொந்தளிக்கத் தொடங்கிவிட்டனர்.

அமீனின் மூளை வெகு வேகமாகத் திட்டங்கள் தீட்டியது.

பத்திரிகையாளர் ஒருவரை அழைப்பித்த இடிஅமீன், "கபாகாவின் ஆட்ளை படுகொலை செய்தமைக்கு நான் பொறுப்பல்ல, பிரதமர் ஒபேடே கட்டளையிட்டார். நான் நிறைவேற்றினேன்!" என்றுசொல்ல அது மறுநாள் உகண்டாவையே உலுக்கியது.

"பிரதமர் ஒபேடே கொடுமைக்காரர். அடக்குமுறையாளர். பதவியில் இருக்க லாய்க்கற்றவர்" என்று மக்கள் கொந்தளித்தனர்.

இடிஅமீன் பிரதமர் ஒபேடேயின் இல்லத்துக்கு, திட்டமிட்டு ஏற்படுத்திக் கொண்ட பரபரப்போடு சென்றான்.

பிரதமர் ஒபேடேயின் உதடுகள் ஆத்திரத்தில் துடித்தன, விழிகள் வெறுப்பை உமிழ்ந்தன.

மிகச் சிரமப்பட்டு, வார்த்தைகளைத் தேடி அவர் பேசினார், "நீ இப்படி முதுகில் குத்துவாய் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை!"

அமீன் அபாரமான நடிகனாக மாறினான். "தாங்கள் என்னைத் தவறாக நினைத்துவிட்டீர்கள், அது பொய்யான மிகமிகப் பொய்யான செய்தி. செய்தியைப் பார்த்ததும் எனக்கே தலைசுற்றியது. உடனடியாக காரியத்தில் இறங்கினேன்" சொல்லிக்கொண்டே சட்டென்று அறைக்கு வெளியே போய்விட்டு மீண்டும் வந்த போது அந்தப் பத்திரிகையாளரும் உடனிருந்தார்.

"இவன்தான் செய்தி போட்டானாம். கபாகாவின் கையாள்!" என்று அமீன் சொன்னதற்கு பத்திரிகையாளர் ஒரு நொடி அதிர்ந்துபின்னர் உண்மையைச் சொல்வதற்கு இடையே, அமீனின் பிஸ்டல் ரவைகளைத் துப்பியது.

"என்ன இது? அமீன் வேண்டாம்... இங்கே வேண்டாம்..." என்று பிரதமர் சொல்லிமுடிப்பதற்கு இடையே, உடம்பில் ஏற்பட்ட பொத்தல்களால் இரத்தம் சிந்திக்கொண்டு, மிக நிச்சயமாய் செத்துப் போயிருந்தார் பத்திரிகையாளர்.

பிஸ்டலை தன் இடுப்பில் செருகிக் கொண்டே, "மன்னிக்கவேண்டும் சற்று உணர்ச்சிவசப்பட்டுவிட்டேன்!" என்று மன்னிப்புக் கேட்கும் பாவனையில் தலையை முன்னே சாய்த்தான் அமீன்.

பிரதமர் ஒபேடேவின் மனநிலை அவனது மன்னிப்பை கவனிக்கும் நிலையில் இருக்கவில்லை.

ஏற்கனவே கொந்தளிக்கும் மக்கள், பத்திரிகையாளர் ஒருவர் பிரதமர் இல்லத்தில் கொல்லப்பட்டதாக அறிந்தால் பொறுமை இழந்துவிடுவார்கள் என்று பயந்தார்.

ஒபேடேயின் தவிப்பு இடிஅமீனுக்கு உள்ளூர சந்தோசமாக இருந்தது.

பிரதமர் ஒபேடேயை மக்கள் வெறுக்கவேண்டும் என்பதும், கட்டுப்படுத்த முடியாதளவுக்கு பிரச்சினை ஏற்பட்டால்தான் இராணுவத் தளபதி பதவி உடன் கைக்கெட்டும் என்பதும் அமீன் மூளையில் தயாரான திட்டம்.

தனது விருப்பப்படியே நிகழ்ச்சிகள் நடப்பதை எண்ணி அமீனுக்கு குரூர மகிழ்ச்சி.

தன் ஆள் ஒருவன்மூலமே பத்திரிகையாளரின் உடலை அப்புறப்படுத்திய அமீன். "இவன் உடலை அடையாளம்தெரியாமல் ஆக்கிவிடு!" என்று சர்வசாதாரணமாக பிரதமர் முன்பாகவே உத்தரவிட்டான்.

அடுத்த சில நாட்கள் உகண்டா உலைக்களமானது. அரச உடமைகள் மக்களால் தாக்கப்பட்டன. பிரதமர் ஒபேடே ஒழிக என்று எங்கும் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஒரு நள்ளிரவு நேரம் பிரதமர் ஒபேடேயின் இல்லத்தின் தொலைபேசி மணி அலறியது.

தூக்கக் கலக்கத்தில் இருந்த பிரதமரின் காதில் அமிலத்தை பாய்ச்சுவதுபோல் ஒலித்தது அமீனின் குரல், "உங்கள் இல்லத்துக்குள் புகுந்து, உங்கள் குடும்பத்தை உயிரோடு கொளுத்த திட்டமிட்டிருக்கிறார்கள்."

பிரதமர் தூக்கம் சட்டென்று முறிந்துபோனது. உடம்பு எல்லாம் பதற்றம் தொற்றிக்கொள்ள, "நீ உடனே புறப்பட்டுவா!" என்றார்.

அமீன், பிரதமர் இல்லம்வந்து சேருவதற்கு முன்னரே, அவனை இராணுவத் தளபதியாக நியமிக்கும் உத்தரவை தயார்செய்து, கையொப்பமும் இட்டு வைத்திருந்தார் பிரதமர்.

அமீன் வந்ததும், கைகொடுத்து வரவேற்று, உத்தரவை அவன் கையில் கொடுத்தார்.

"என்ன இது?" என்று ஆச்சரியமாக நடித்து உத்தரவை படித்துக் கொண்டிருந்த அமீனுக்கு தலைகால் புரியாத சந்தோசம்.

"இத்தனை பெரிய பொறுப்பை என்தலையில் கட்டுகிறீர்களே? குருவியின் தலையில் பாறாங்கல்லை வைத்த மாதிரியல்லவா இருக்கிறது! என்றான் அப்பாவியாக.

மறுநாள் விடியும்போது புதிய இராணுவத் தளபதி இடிஅமீன் பொறுப்பை ஏற்றுவிட்டான்.

விடைபெற்றுச் செல்ல வந்த முன்னாள் தளபதியை இடிச் சிரிப்புடன் வரவேற்றான் அமீன்.

(தொடரும்)



## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும்
வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன்
பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**வாசகர்களின் கவனத்திற்கு...**

முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக, (முரசு 1021 - கு.எ. போ. - 528) குறுக்கெழுத்துப் போட்டியில் இருந்து வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூபா 1000/= ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை அறியத்தருகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 543

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ■ |
| 7 | ■ | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | ■ | 18 |
| 19 | 20 | ■ | ■ | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | ■ |
| ■ | 32 | 33 | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 21.10.2013 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 543
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-169, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 541 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம 1 | னி 2 | த 3 | நே 4 | ய 5 | ம் 6 |
| க 7 | பு 8 | ப் 9 | மி 10 | ■ | ன 12 |
| ச 13 | த 14 | மி 15 | ■ | ■ | ச 18 |
| ர் 19 | ■ | ■ | டு 22 | போ 23 | ரா 24 |
| நா 25 | ளி 26 | ■ | ■ | ரோ 29 | யூ 30 |
| மா 31 | க 32 | தி 33 | ■ | கி 35 | ம 36 |

**இடமிருந்து வலம்**

01. தனக்கும், தான் வாழும் சமூகம் ஆகிய இரண்டிற்குமே பிரதிநிதிதான் இவர்.
09. 63 விதமான சத்துக்கள் நிறைந்த ஒரே கீரை இது. (குழம்பியுள்ளது)
13. நடைபெறுகின்ற இந்த மாதம், தேசிய ......... மாதமாகும்.
19. அழகு, சுத்தம், பூரணம்.
23. சரியான, தகுதியான.
25. பெண்களின் வாழ்க்கை நெறிமுறைகளை கூறும் தொகுப்பு, இப்படி அழைக்கப்படும். (திரும்பியுள்ளது)
32. காந்தி வாழ்ந்த ஆச்சிரமம். (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. இளைப்பாறுகை; களைப்பாறல்.
03. மாற்றுதல், கடைசி எழுத்து விடுபட்டுள்ளது. (குழம்பியுள்ளது)
04. கைப்பு ; வெறுப்பு, மூன்றாம் எழுத்து விடுபட்டுள்ளது. (குழம்பியுள்ளது)
05. இன்மை. (திரும்பியுள்ளது)
12. வயது முதிர்ந்தவன். (குழம்பியுள்ளது)
14. கஞ்சா ; கனி ; மலிவு. (குழம்பியுள்ளது)
23. கீர்த்தி; புகழ். (குழம்பியுள்ளது)
27. ஆபரணம்; தொண்டு ; தொழில். (திரும்பியுள்ளது)
28. மனிதருக்குரிய ஆசைகளில் ஒன்று. (திரும்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 541 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**ஆர்.சமந்தனி, கம்மடுவ, மாத்தளை.**

பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. மா.அம்புஜா, சிவன் கோவில் வீதி, மன்னார்.
02. ச.டொறின், தபால் கந்தோர் வீதி, மன்னார்.
03. கெ.ஆர்யா, கல்வளை, சண்டிலிப்பாய்.
04. எஸ்.றிஸ்வான், மத்திய வீதி, காத்தான்குடி -05.
05. இ.பபிதா, கண்டி வீதி, சாவகச்சேரி.
06. பொ.பிரதீபா, கண்டாவளை, கிளிநொச்சி.
07. த.ஜெகந்தன், கடற்கரை வீதி, மன்னார்.
08. க.மலர்விழி, அராலி மேற்கு, அராலி.
09. மு.காந்திமதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.








# திருமணத்துக்கு வயது வரவில்லை?

பழைய நடிகை ராதா வின் மகளும், நடிகையுமான கார்த்திகாவுக்கு திருமணம் நடக்கப்போவதாக பரபரப்புத் தகவல் வெளியானது. கார்த்திகாவுக்கு புதுப்படங்கள் கைவசம் இல்லை என்றும், எனவே திருமணத்துக்கு சம்மதித்துவிட்டதாகவும் கூறப்பட்டது.

கார்த்திகா 'கோ' படம்மூலம் தமிழில் அறிமுகமானார். பாரதிராஜா இயக்கிய அன்னக்கொடி படத்திலும் நடித்தார். எதிர்பார்த்தபடி கார்த்திகாவுக்கு படவாய்ப்புகள் வரவில்லை. ஹன்சிகா, அமலாபால், காஜல் அகர்வால் போன்றோருக்கு படங்கள் குவிந்த வண்ணம் உள்ளது. இவர்களுடன் போட்டியிடுவது கார்த்திகாவுக்கு சவாலாக உள்ளது.

திருமணம் பற்றி வெளியான செய்தி குறித்து ராதாவிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:

என் மகள் கார்த்திகாவுக்கு திருமணம் செய்வது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை. கார்த்திகாவுக்கு 21 வயதுதான் ஆகிறது. இன்னும் திருமணம் செய்துகொள்வதற்கான வயதே வரவில்லை. நான்கு வருடத்துக்கு பிறகுதான் கார்த்திகா திருமணம் பற்றி சிந்திப்போம். இவ்வாறு ராதா கூறினார்.

# 'வணக்கம் சென்னை' திரைவிமர்சனம்

லண்டனில் வாழும் தமிழ்ப்பெண்ணான பிரியா ஆனந்த் இந்திய கலாசாரத்தை புகைப்படம் எடுப்பதற்காக சென்னைக்கு செல்ல முடிவெடுக்கிறார். அதன்படி அவர் சென்னைக்கு வருகிறார். இங்கு அவரது சொந்தக்காரர் மூலம் ஒரு அபார்ட்மெண்டை வாடகைக்கு எடுத்து தங்க முடிவெடுக்கிறார்.

அதேவேளையில் சொப்ட்வேர் என்ஜீனியரான சிவா கிராமத்திலிருந்து சென்னைக்கு வேலை தேடிவருகிறார். அவர் தங்குவதற்கு ஒரு அபார்ட்மெண்டை வாடகைக்கு எடுக்கிறார். இதற்காக சந்தானத்தை அணுகும் சிவா, அவரிடம் அக்ரிமெண்ட் போட்டு ஒரு அபார்ட்மெண்டில் உள்ள வீட்டை வாடகைக்கு எடுக்கிறார். இதே வீட்டை பிரியா ஆனந்த்துக்கும் வாட்கைக்கு விட்டுவிடுகிறார் சந்தானம்.

பிரியா ஆனந்தும், சிவாவும் ஒரே வீட்டை வாடகைக்கு விட்டு தங்களை ஏமாற்றிவிட்ட சந்தானத்தைப் பற்றி பொலீஸ் நிலையத்தில் புகார்கொடுக்க செல்கின்றனர். அங்கு, அந்த அபார்ட்மெண்டின் சேர்மனும், பொலிஸ் இன்ஸ்பெக்டருமான ஊர்வசி இவர்களை கணவன், மனைவி என

காத
லண்டனில் ஒ
நிச்சயிக்கப்பட்
ஆனந்தை தே
இறுதியில் சி
சொல்லி இரு
இல்லையா? எ
சிவா மற்ற
தன்னுடைய
கில்லாடிதான்.
மட்டும் ஏனோ
ஆனந்த் எண்
வலம் வருகிற
காட்சிகளிலும்
ஆனால், காத
தெளித்திருக்கி
வீட்டு புரோ
டிரெண்டான க
மையப்படுத்தி
இந்த படத்தி
கொஞ்சம் அ
சொல்லவேண்
ஊர்வசி, ந
கதாபாத்திரத்
செய்திருக்கிற
ஏற்கெனவே




# காதல் இரகசியம்

இன்றும் தனது இரகசிய காதலை தொடர்ந்துகொண்டேதான் இருக்கிறார் கேரளத்து பைங்கிளி மீரா ஜாஸ்மின். ரன், சண்டக்கோழி, ஆய்த எழுத்து உள்ளிட்ட பல படங்களில் நடித்தவர் மீரா ஜாஸ்மின். இவருக்கும், மாண்டலின் ராஜேுக்கும் காதல் மலர்ந்து திருமணம்வரை பேச்சுவார்த்தை சென்றது. ஆனால் ராஜேஷின் குடும்பத்தினர் எதிர்ப்பால் அது நடக்கவில்லை. இந்நிலையில் ஒரு வருடத்துக்கும் மேலாக புதிய படங்களில் நடிக்காமல் ஒதுங்கி இருந்த இவர் மல்லுவுட்டில் நட்சத்திர கலைவிழாக்களில் பங்கேற்கவில்லை என்பதற்காக சில பிரச்சினைகளை எதிர்கொண்டார். தற்போது பிரச்சினைகள் ஓய்ந்தநிலையில் மீண்டும் மீராவின் காதல் விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கி உள்ளது. இருவரின் காதல் எந்த நிலையில் உள்ளது என்றுகேட்டால், இருவரும் சிக்கலான நேரங்களை சந்தித்தது உண்மை, ஆனால் அது எங்களை பிரியும் அளவுக்கு கொண்டு செல்லவில்லை என்று அவரது தரப்பில் கூறப்படுகிறது.

# எனது இதயமே நின்றுவிட்டது:

டெண்டுல்கர் 200ஆவது டெஸ்ட் போட்டியோடு
குறித்து பிரபல இந்தி நடிகர் அமிதாப்பச்சன் கூறி
டெண்டுல்கர் 200ஆவது டெஸ்டோடு ஓய்வு மு
செய்தியை கேட்டது என் இதயத்துடிப்பு நின்றுவிட்ட
இந்திய கிரிக்கெட்டின் இதயதுடிப்பு நின்றுவிட்டது.
செயற்பாட்டை பாராட்ட எனக்கு வார்த்தைகள் இ
என்றும் தனிச்சிறப்புடன் ஆடியவர். இந்திய கிரிக்
கிடைத்த மிகப்பெரிய அடையாளம். விளையாட்டி
அவரது ஓய்வுபெறும் கற்பனைதான். ஏனென்றால்
கிரிக்கெட்டை நாம் கற்பனை செய்துகூட பார்க்க
நாட்டுக்காக அவர் பல ஆண்டுகள் விளையாடி இ
அவர் சாதனைகள் எல்லாம் நம்பமுடியாதவை. அ
எனது சிறந்த பாராட்டுக்கள்.






...ன்னை'
...ம்

...பண்ணான
...ரத்தை
...னைக்கு
...படி அவர்
... அவரது
...ட்மெண்டை
...வெடுக்கிறார்.

...ிருந்து
...றார்.
...மெண்டை
...ாக
...அவரிடம்
...ரட்மெண்டில்
...க்கிறார். இதே
...வாடகைக்கு

...ஒரே வீட்டை
...மாற்றிவிட்ட
...நிலையத்தில்
...அங்கு, அந்த
...ாலிஸ்
...வர்களை

நினைத்துவிடுகிறார். இதை ஒரு ஐடியாவாக பயன்படுத்தி இருவரும் வேறு வழியின்றி ஒரே வீட்டில் குடியிருக்க முடிவெடுக்கின்றனர். அதன்படி இருவரும் ஒரே வீட்டில் இருந்துவருகின்றனர்.

அப்போது சிவா, பிரியா ஆனந்த்மீது காதல்வயப்படுகிறார். ஆனால், பிரியா ஆனந்துக்கோ லண்டனில் ஒரு பையனுடன் ஏற்கெனவே திருமணம் நிச்சயிக்கப்பட்டுவிட்டது சிவாவுக்கு தெரியவருகிறது. பிரியா ஆனந்தை தேடி லண்டன் பையனும் சென்னை வருகிறார். இறுதியில் சிவா, தன்னுடைய காதலை பிரியா ஆனந்திடம் சொல்லி இருவரும் வாழ்க்கையில் ஒன்று சேர்ந்தார்களா? இல்லையா? என்பதே மீதிக்கதை.

சிவா மற்றவர்களை சிரிக்க வைக்கும் வித்தையை தன்னுடைய முகபாவனையிலேயே காட்டுவதில் கில்லாடிதான். ஆனால், காதல், ரொமான்ஸ் காட்சிகளில் மட்டும் ஏனோ இவருடைய நடிப்பு எடுபடவில்லை. பிரியா ஆனந்த் எண்ணெய் வழிந்த முகத்தோடு படம் முழுக்க வலம் வருகிறார். சோகக் காட்சிகளிலும், கோபமான காட்சிகளிலும் இவருடைய நடிப்பு மிளரவில்லை. ஆனால், காதல் காட்சிகளில் உணர்ச்சிகளை அள்ளித் தெளித்திருக்கிறார்.

வீட்டு புரோக்கராக சந்தானம் வருகிறார். இவருடைய டிரெண்டான கவுண்டர் வசனங்களும், உருவங்களை மையப்படுத்திய காமெடி வசனங்களையும் வழக்கம்போல் இந்த படத்திலும் பயன்படுத்தியிருக்கிறார். இந்த படத்தில் கொஞ்சம் அடக்கி வாசித்திருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும்.

ஊர்வசி, நாசர், ரேணுகா, ராகுல் ஆகியோர் தங்களது கதாபாத்திரத்திற்குண்டான நடிப்பை சிறப்பாக செய்திருக்கிறார்கள். அனிருத் இசையில் பாடல்கள் ஏற்கெனவே ஹிட் ஆகியிருந்தாலும், எங்கடி பொறந்த, ஒசக்கா ஒசக்கா ஆகிய பாடல்கள் மீண்டும்மீண்டும் கேட்கத் தூண்டுகின்றன. கிளைமாக்ஸில் இடம்பெறும் "சென்னை சிட்டி கேங்ஸ்டர்" பாடலும் ஆட்டம்போட வைக்கிறது. ரிச்சர்ட் ஒளிப்பதில் பாடல்களை படமாக்கிய விதம் அருமை.

மொத்தத்தில் 'வணக்கம் சென்னை'க்கு ஒரு சலாம் போடலாம்.



## பொலிவூட்டில் கவர்ச்சி பறவை

சவால்னா எனக்கு சர்க்கரைப் பொங்கல் மாதிரி என்று படுதெம்பாகப் பேசுகிறார் பொலிவூட்டின் கவர்ச்சி பறவை ரித்திகா சிப்பர். பொலிவூட்டில் கவர்ச்சிப் பறவையாக வந்து தரையிறங்கியுள்ள ரித்திகா, நாயகிகளுக்கு சவால்விடுத்துள்ளார். இவர் தனது வருகை குறித்து கூறுகையில், பொலிவூட்டை ஆள நான் விரும்புகிறேன். மேலும் எனது உடல் அமைப்பு எந்த மாதிரியான கதாபாத்திரத்திற்கும் பொருந்தக்கூடியது.

இங்கு ஏற்கனவே உலா வந்துகொண்டுள்ள நாயகிகளுக்கு ஒன்று சொல்லிக் கொள்கிறேன், உங்களுக்குப் போட்டியாக நான் வந்துவிட்டேன் என்று முழங்குகிறாராம். மேலும் இவருக்கு சவால் என்றால் சர்க்கரைப் பொங்கல் போலவாம். சவால்களைச் சந்தித்து வெல்வது தனக்குப் பிடித்தமானது என்று கூறும் ரித்திகா, கவர்ச்சி, செக்ஸி, திரில்லர், மசாலாப் படங்கள் மற்றும் அதிரடிப் படங்கள்தான் தனது சொய்ஸ் என்கிறார்.

## ரீமேக் படங்களில் நடிக்கமாட்டேன் : விஜய்

இனிமேல் ரீமேக் படங்களில் நடிக்கமாட்டேன் என்று அதிரடியான முடிவினை எடுத்துள்ளாராம் விஜய். பவன் கல்யாண் நடிப்பில் அண்மையில் வெளியான தெலுங்கு படமான அத்தாரிண்டிகி தாரேதி பாக்ஸ் ஓபிஸில் சக்கைபோடு போட்டுவருகிறது.

படம் கல்லா கட்டிய வேகத்தை பார்த்து அதை தமிழில் ரீமேக் செய்ய தயாரிப்பாளர் பி.வி.எஸ்.என். பிரசாத்தை, கொலிவூட்டைச் சேர்ந்த பல தயாரிப்பாளர்கள் அணுகினர்.

இந்நிலையில் இந்த படத்தின் ரீமேக்கில் நடிக்க விஜய் ஆர்வமாக உள்ளதாக தகவல்கள் வெளியாகின. இதனைத் தொடர்ந்து விஜய்யை அணுகியதில், அவரோ சொரி, நான் நடிக்க முடியாது என்று கூறிவிட்டாராம். மேலும் இனி ரீமேக் படங்களில் நடிக்க விரும்பவில்லை என்றும் தெரிவித்துள்ளாராம்.





## ...தயமே நின்றுவிட்டது: அமிதாப்பச்சன்

...200ஆவது டெஸ்ட் போட்டியோடு ஓய்வுபெறுவது
...இந்தி நடிகர் அமிதாப்பச்சன் கூறியதாவது:
...200ஆவது டெஸ்டோடு ஓய்வு முடிவை அறிவித்த
...து என் இதயத்துடிப்பு நின்றுவிட்டதாக உணர்ந்தேன்.
...டின் இதயதுடிப்பு நின்றுவிட்டது. அவரது
...ராட்ட எனக்கு வார்த்தைகள் இல்லை. அவருக்கு
...ப்புடன் ஆடியவர். இந்திய கிரிக்கெட்டுக்கு
...ரிய அடையாளம். விளையாட்டில் இருந்து
...றும் கற்பனைதான். ஏனென்றால் அவர் இல்லாத
...ம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது.
...ர் பல ஆண்டுகள் விளையாடி இருக்கிறார்.
...ள் எல்லாம் நம்பமுடியாதவை. அவருக்கு
...ராட்டுக்கள்.

# தேன் கிண்ணம்



உன் சிரிப்புச்சிதறல்கள் எனும்
செந்தாமரை இதழ்கள் என்
முகம் வருடி உள்ளுணர்வை
விதைக்கிறது உள்ளத்திலே..!

அசைவுகள் எதுவுமின்றி
பூமி நோக்கும் தேவி அவள்
பூ வதனமதில் அலைபாய்ந்து
தவிக்கும் கருவிழிகள்
இமைகளின் இடைவெளிகளை நிரப்பி
நிழலாடும் நினைவுகளை
நனவாக பரிமாற பாதைதேடி
துடிக்கின்றனவா...!

வித்தியாசத்தில் விசித்திரமும்
தெரிகிறது..!
அவள் விழிகள்
விழிப்பது காதலின் கருப்பிறப்பைத்தான்...!

வேண்டாம் நான் மண்டியிடுகிறேன்
வேண்டாம்...!
கன்னியவளின் கலையழகான
சிற்றிதழ்களைச் சிவக்கும் வரை
வதைக்கிறதே வஞ்சி அவள்
வடிவான பற்கள்...!
ஏன்...!
வருகின்ற வார்த்தைகளை
இதழ்கள் பிரியும் வேளையில்
என் முன்
இழக்காமல் இருக்கவா...?

உள்ளம்தொட்டு உணர்வில்
நனைந்து உடலில் கலந்து சொற்களாகி
தொண்டைவரை வந்த வார்த்தைகள்
நாவிலே தவழ உண்டாகும் நளினங்கள்
அவள் கன்னங்கள் சிவக்கிறதே...!

## என் இதயத்தாரகை

அவள் விரல்கள் ஏன்
சண்டையிடுகின்றன...?
எப்படி சொல்வது...?
எவ்வாறு முடிப்பது ...?
எங்ஙனம் மனதை திறப்பது...? - என்ற
குழப்பமான கேள்விகளால்
உருவானதோ அது...!

ஓரக்கண்களால் ஒரு செய்தி சொல்லி
அவள் காதலைச் சொல்லும் - என்
வாழ்வின்
இணையற்ற கணமதை
ஒத்தி வைத்துவிட்டவள் பாதைக்கும்
தெரியாமல்...!
பத்திரமாய் நகர்ந்தாளே...!

மனசு நிறைய காதல் சுமையை
மறைத்து வைத்து போறாளே..!
உடல் கொதிக்க நான் நிற்க
மனம் வதைத்து போறாளே...!

என்றைக்கோ ஓர் நாள் வரும்
என் நம்பிக்கை உயிர்பெறும் - அன்று
என் இதயத்தாரகை என்னிடம் வரும்.

எஸ்.சிபானி முஹம்மட்,
ஒலுவில்

## ஓ மனமே தூய்மை பெறு



கல் நெஞ்சமதில்
வன் சொல் - நாவில்
விஷத்தை
விதைக்கும் மனம்
அறுவடையில்
என்ன நன்மை
விளையும்!

பொறாமையும்
காழ்ப்புணர்வும்
இருளடைந்த
ஒற்றைக் குகை
எந்த ஒளியில்
இங்கே
வெளிச்சம் பெறும்!

போற்றவும் வேண்டாம்
பிறரை வைதல் செய்யாது
வாழவொரு வழி காண்போம்

நன்மைக்கும் உண்மைக்கும்
வழி கோலா விடினும்
தவறின் பால் செல்லாது
தவிர்த்து விடுதல் நன்று... என்று(ம்)
மனதில் நல்லெண்ணம் ஈன்று!!

ஏ.அர்.எம்.நதார்.
ஜின்னாநகர்.

## இயற்கையிடம் கற்றுக்கொள்...

முட்கள் தைத்தாலும்
ரோஜா தைப்பதில்லை!
மனிதா!
உன் பற்கள்
சிரித்தாலும்
சொற்கள் சுடுகிறதே!

தத்தளித்தாலும்.
தரம்கெட்ட
நீரில் வாழ்ந்தாலும்
தாமரை.
தன் நிலைமாறி
போவதில்லை.

வறுமை வந்தால்
வழிமாறி.
துன்பம் வந்தால்
கொள்கைமாறி.
தேவை ஏற்பட்டால்
திருடி.
தெம்பு ஏற்பட்டால்
வருடி-
ஊருக்காக
வாழாமல்
சோறுக்காக வாழும்
மனிதனே? - நீ
இயற்கையிடம்
கற்றுக்கொள்ள வேண்டியது
எத்தனையோ இருக்கிறது!

நா.ஜெயபாலன்,
பிபிலை.

## எனக்காக நீ

**கள்ளமில்லா உன் மனதை**
**காயப்படுத்த விரும்பவில்லை**
**கவிதையினில் உனை வடிக்க**
**கவியரசும் அல்ல**
**உன்னை ஒன்று கேட்பேன்**
**உன் உயிராய் இருக்க**
**இறுதி வரை வாழ வேண்டும்**
**நீ என்றும் எனக்காக...**

**கரன் - சஞ்சு, திருநெல்வேலி.**

## காதல் உபதேசம்!



இப்போதெல்லாம்
எவர் குரலும்
என் காதில் விழுவதில்லை
காற்று காணாமல் போனதால்!

நேற்று வரை
நிம்மதியாய் சுவாசித்தேன்
இன்று இதயம் துடிக்க
மறுக்கிறது!

ஏய்... காற்றே!
பாதிக்கப்படுவது
நான் மட்டுமல்ல
அகிலம் வாழும்
அனைத்துயிர்களும்.

ஓ!
இப்போதுதான் புரிகிறது
என்னைப் போல் நீயும்
எவளோ ஒருத்தியை
காதலிக்கிறாய் என்று!
அவளை விட்டுவிடு
அனைத்துயிர்களும்
உன்னால் வாழ்கிறது!

அவள் விட்டு விலகமுன்
காற்றே விட்டு விலகு
அவள் விட்டுப்பிரிந்தால்
அதன் சுமை
உன்னால் தாங்க முடியாது!

உன்னை காதலிப்பவரை காதலி
நீயாக எவரையும்
காதலிக்காதே!
என்னைப் போல்
நீயும் துன்பப்படலாம்.

A.பாரிஸ், மகிந்தலை.

## வானவில்



*அன்று மழைக்காலம்*
*மழையை ரசிக்க முடியவில்லை*
*உனக்கு பிடிக்குமென்று*
*தெரியவில்லை*
*வானவில்லை ரசிக்காமல்*
*இருக்கவும் முடியவில்லை*
*ஏன் தெரியுமா?*
*வான வில்லில் தெரியும்*
*நிறங்களின் அழகு*
*நீ என்பதால்...*

கிருஸ் காஜா, அராலி.

## அன்னையின் புகழ்



பல்லாயிரம் கனவுகளோடு
தாயானவள் ஒரு சிற்பத்தை
பத்துத் திங்களாய்
வளர்த்தெடுக்கிறாள் கருப்பை
எனும் ஆலயத்தில்...!

சிற்பத்தை செதுக்குகையில்
அவளடைந்த துன்பதுயரங்களை
வார்த்தைகளால் வர்ணிக்கத்தான்
முடியுமா? அவ்வலிமை
தாயால் தவிர்த்து யாரால்
உணரமுடியும் - இப்பூவுலகிலே...!

பிள்ளைப் பேறு என்பது
ஓர் தாயைப் பொறுத்தவரை
மறுஜென்மம்
மழலைக்கோ அது
ஓர் புதுஜென்மம்...!

ஆயிரம் கவிஞர்கள்
திரண்டாலும்
தாலாட்டில் தாய்மொழி
விதைத்திடும் அன்னையின்
புகழைத்தான்
பாட முடித்திடலாமோ??

எம்.யூ.அல்சாத், ஓட்டமாவடி.




பிரசவம் ஒரு இயற்கை நிகழ்வு. உலகில் 3 விநாடிக்குள் ஒரு குழந்தை பிறக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தாய்க்கும் இது வாழ்வில் ஓர் முக்கியமான காலம். மகிழ்ச்சி, பயம், கடின உழைப்பு கலந்த ஓர் புதிய அனுபவம்.

கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள் என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது. சற்று ஆழமாக காலை வைத்திருப்பதாக தோற்றலாம். ஆனால் இந்த கணினி யுகத்தில் கண்ணாடித் தன்மை (Transparency) அவசியமென நான் கருதுகின்றேன். மருத்துவம் மூடுமந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினைகளை நன்கு விளக்கமாக அறியவிளைகின்றனர்.

Dr. சி.நவநீதன்

# ஆரம்ப கால கர்ப்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள்

**01) குருதிப்போக்கு**
(Early Pregnancy Bleeding)

இப்பிரச்சினை ஐந்தில் ஒரு கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படுகிறது. இதற்கான காரணங்கள் வருமாறு:

01.கருச்சிதைவு (Miscarriage)
02.பலோப்பியன் குழாயில் கரு (Ectopic)
03.கர்ப்பப்பை நோய்கள்.

பலருக்கு கர்ப்பகாலத்தில் குருதிப்போக்கு இருப்பினும் சிலருக்கே கர்ப்பத்தில் பிரச்சினைகள் ஏற்படுகிறது. ஏனையோருக்கு கரு சாதாரணமாக வளரும் சாத்தியம் உள்ளது.

எனவே, குருதிப்போக்குள்ள பெண்கள் உடனடியாக வைத்தியரை நாடி பரிசோதனைகளும், ஸ்கான் பரிசோதனையும் செய்தல் அவசியம்.

**02) கருச்சிதைவு**
(Miscarriage, Abortion)

கர்ப்பமுற்றிருக்கும் தாய்மார்கள் தங்கள் கருவிற்கு ஏதாவது ஆபத்து அல்லது கருச்சிதைவு ஏற்பட்டுவிடும் என்ற பயம் நிலவுவது சகஜம். அன்றாட வாழ்வில் ஏற்படும் சாதாரண நிகழ்வுகளால் கருச்சிதைவு ஏற்படுவதில்லை.

பிரயாணங்கள் செய்வதாலோ அல்லது பழங்கள் (உதாரணமாக அன்னாசி, பப்பாளி) உட்கொள்வதாலோ கருச்சிதைவு ஏற்படுவதில்லை.

**ஏன் கருச்சிதைவு ஏற்படுகிறது?**

ஐந்து கர்ப்பங்களில் ஒரு கர்ப்பம் முழுமைபெறாமல் கருச்சிதைவடைகிறது. இதற்கு வெளிப்படையாக காரணங்கள் பெரும்பாலும் தெரிவதில்லை. ஆனால் கருவுற்ற குழந்தையின் உடலமைப்பு அல்லது நிறமூர்த்தங்களில் பாதிப்பு இருப்பின் இயற்கையாகவே இக்கரு சிதைவடையும். இதன்மூலம் இயற்கை தேகாரோக்கியம் உள்ள குழந்தைகளை தேர்வு செய்கிறது எனலாம்.



**கருச்சிதைவுக்கான முக்கிய காரணிகள்**

01. குறைபாடுள்ள கரு.
02. பலவீனமான கருப்பைக்கழுத்து.
03. தாய்க்கு ஏற்படும் தொற்றுநோய்கள்.
04. தாயின் ஏனைய நோய்கள். (சலரோகம், சிறுநீரக நோய்கள்)

(தொடரும்)



# அதிக வெள்ளைபடுதல் கர்ப்பப்பையை தாக்கும்

பெண்கள் கவனக்குறைவாக இருந்தால் கர்ப்பப்பை இழக்கநேரிடும். பெண்களுக்கு வரக்கூடிய பல நோய்களில் வெள்ளைபடுதலும் ஒன்றாகும். இதை வெள்ளைப்போக்கு, வெட்டை என்று சொல்வார்கள். இதைப் பல பெண்கள் கவனிக்காமலும், வெளியில் சொல்ல வெட்கப்பட்டும் விட்டுவிடுவதுண்டு.

இதை கவனிக்காமல் விட்டுவிட்டால் இனவிருத்தி உறுப்புகளின் ஒரு பகுதியையோ அல்லது பல பகுதியையோ பாதித்து தீவிரமான நோய்களுக்கு அடிப்படையாக மாறிவிடும். கர்ப்பப்பை எடுக்கக்கூடிய சூழ்நிலை உண்டாகும். இந்த வெள்ளைபடுதல் சிறிய வயது பெண்கள் முதல் வயதான பெண்கள்வரை அனைவருக்கும் வருகிறது.

குறிப்பாக 15 முதல் 45 வயது வரை உள்ள பெண்களுக்குத்தான் அதிகமாக வருகிறது. இது வெள்ளை நிறமின்றி பல நிறங்களிலும் வெளியாகிறது. சாதாரணமாக வெளியாகும் வெள்ளைபடுதல் மூக்கிலிருந்து நீர்வருவதுபோல் இருக்கும்.

மேலும் சிலருக்கு தயிர்போல கட்டியாகவும், முட்டையின் வெண்கரு போன்று வழுவழுப்பாகவும் வருவதுண்டு. வியாதியின் குணம் நாட்பட நாட்பட நிறமும் மாறுபடும்.

எனவே வெள்ளைபடுதல் இருந்தால் உடனடியாக மருத்துவரை அணுகி நோயின் தன்மையை அறிந்துகொள்வது நல்லது.

# பாதுகாப்பான கருக்கலைப்பு முறைகள்

கருக்கலைப்பு என்றாலே நம்மில் பலருக்கு அலர்ஜி. திகிலோடும் பயத்தோடும் தான் அதனை நினைத்துப் பார்ப்பார்கள். உண்மையில், சரியான முறைகளைத் தேர்ந்தெடுத்துச் செய்தால், கருக்கலைப்பு என்பது மிகவும் பாதுகாப்பான மற்றும் எளிய செயல்முறையாகும்.

பல்வேறு காரணங்களால், பெரும்பாலான பெண்கள் பாதுகாப்பான கருக்கலைப்பு முறைகளைத் தேர்ந்தெடுப்பது இல்லை. பாதுகாப்பற்ற கருக் கலைப்பு முறைகளைத் தேர்ந்தெடுப்பதால், சிலசமயங்களில், அவர்கள் தமது இன்னுயிரை இழக்கும் நிலைகூட ஏற்படுகிறது.

நவீன கால மருத்துவ அறிவியல்மூலம் ஏராளமான, பாதுகாப்பான கருக் கலைப்பு முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால், சரியான முறையைத் தேர்ந்தெடுப்பது மட்டும்தான்.

பெரும்பாலான பெண்கள் தமது கருவை மருத்துவரீதியாக கலைப்பதற்காக மருத்துவரிடம் செல்வதற்கு தயக்கம் காட்டுவார்கள். இந்த மனோபாவத்தினால் அவர்கள் பல தவறான முறைகளைப் பின்பற்றி அம்முயற்சிகள் தோல்வி அடைவதுண்டு.



ஆகவே உங்களுக்கு பாதுகாப்பான கருக்கலைப்பு நடைபெற வேண்டுமென்றால், தகுதியான மருத்துவரிடம்தான் சென்றாக வேண்டும். மருத்துவரிடம் மருத்துவ ஆலோசனை பெற்றபின்தான், உங்களுக்கான பாதுகாப்பான கருக்கலைப்பு முறை எது என்பதை நீங்கள் தேர்ந்தெடுக்க முடியும்.

பாதுகாப்பான கருக்கலைப்பு முறை என்பது, உங்கள் வயிற்றில் வளரும் கருவின் வயதினைப் பொறுத்தது. கருவின் வயதினை அடிப்படையாகக்கொண்டு அதற்கேற்றாற் போல பல்வேறு கருக்கலைப்பு முறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

நான்கு மாதங்கள், அதாவது 16 வாரங்கள் வயதுள்ள கருவினை மருத்துவமுறையில் கலைப்பதுதான் மிகவும் பாதுகாப்பானதாகும். நீங்கள் இயற்கையான கருக்கலைப்பினைத் தேர்ந்தெடுக்க விரும்பினால், கருவின் வயதானது 8 வாரங்களுக்குள் இருக்க வேண்டும். ஏழு வாரங்களுக்குக் குறைவான வயதுள்ள கருவினைக் கலைக்க வேண்டுமானால், கருக் கலைப்பு மாத்திரைகளை உட்கொள்வது சிறந்தது.

இம்முறையானது எந்த சிக்கலையும் உண்டு பண்ணாது. அதற்கு உங்களுடைய மருத்துவர் பரிந்துரைக்கும் ஹோர்மோன். மாத்திரைகளை உண்டுவந்தால், இயற்கையாகவே கருச்சிதைவு ஆகிவிடும்



# குழந்தையின்மை பிரச்சினைக்கு உதவும் சித்த மருந்துகள்

குழந்தையின்மை பிரச்சினைகளுக்கு சித்த மருத்துவத்தில் பல்வேறு வழிமுறைகள் உள்ளன. குழந்தைப்பேற்றுக்கு சித்த மருத்துவத்தில் ஏராளமான மருந்துகள் உள்ளன. என்ன காரணத்தில் மகப்பேறின்மை உள்ளது என்பதைக் கண்டறிந்து அதற்கேற்ப மருந்துகள் கொடுக்கப்படும்.

வெண் பூசணி லேகியம், கரிசாலைக் கற்ப மாத்திரை, வான்குமரி லேகியம், நரசிங்க லேகியம், குன்ம குடோரி மெழுகு, கர்ப்ப சஞ்சீவி எண்ணெய், லவண குணாதி எண்ணெய், அஸ்வகந்தி லேகியம், நிலக்கடம்பு சூரணம், சதாவரி லேகியம், நந்தி மெழுகு, குன்ம உப்பு சூரணம், கர்ப்பப்பை சஞ்சீவி சூரணம், அகத்தியர் குழம்பு, அசோகப்பட்டை சூரணம், அமுக்கரா சூரணம், சித்தாதி எண்ணெய், கலிங்காதி தைலம், பஞ்ச மூலிகை சூரணம், குமரி எண்ணெய், அதிமதுர சூரணம், திரிபலாக்கற்ப சூரணம், கடுக்காய் சூரணம், மலைவேம்பாதி தைலம், சண்டமாருத செந்தூரம், புங்கம்பட்டை தைலம், திரிகடுகு ஆறுமுக செந்தூரம் ஆகிய மருந்துகள் உள்ளன.

இதில் எந்த மருந்துகளை எடுத்துகொள்வதாக இருந்தாலும் தகுந்த மருத்துவரை ஆலோசித்த பின்னரே எடுத்துக்கொள்ளவேண்டும். அவரவர் குழந்தைப்பேற்றிற்கு உள்ள பிரச்சினைகளுக்கு ஏற்ப மருந்துகளை மருத்துவர் பரிந்துரைப்பார்.

# முக அழகை கூட்டும் மஞ்சள் முகப்பூச்சு



மஞ்சளை ஒருசில பொருட்களுடன் சேர்த்து சருமத்தை பராமரித்து வந்தால் சருமத்தின் கருமை நிறம் முற்றிலும் நீங்கி சருமம் விரைவில் வெள்ளையாவதை உணரலாம். அதிலும் ஒரு வாரம் தொடர்ந்து பின்பற்றிவந்தால், நிச்சயம் சருமத்தில் நல்ல மாற்றத்தைக் காணமுடியும். சருமத்தை வெள்ளையாக்கும் மஞ்சள் முகப்பூச்சுக்களை பார்ப்போமா?

**மஞ்சள் மற்றும் மில்க் க்ரீம்:** மஞ்சள் துளை, மில்க் க்ரீமுடன் சேர்த்து முகத்திற்கு பூச்சுப்போட்டால், விரைவில் சருமம் வெள்ளையாகும். ஏனென்றில் இதில் உள்ள மில்க் க்ரீம் சருமத்தின் ஈரத்தன்மையை தக்கவைக்கவும், மஞ்சள் தூள் சருமத்தின் கருமை நிறத்தை போக்கும்.

**மஞ்சள் மற்றும் சந்தனம்:** சருமத்தில் உள்ள பருக்கள் நீங்கி, சருமம் பளிச்சென்று காணப்பட வேண்டுமெனில், 1 மேசைக்கரண்டி மஞ்சள் பேஸ்ட், சிறிது சந்தனப்பொடி, 1 மேசைக்கரண்டி தயிர்சேர்த்து நன்கு அடித்துக்கொண்டு, அந்த கலவையை சருமத்தில் தடவி ஊற வைத்து கழுவவேண்டும்.

**மஞ்சள் மற்றும் ரோஸ் வோட்டர்:** 1 மேசைக்கரண்டி ரோஸ் வோட்டரில் மஞ்சள் தூள் சேர்த்து கலந்து, அதில் 1/2 மேசைக்கரண்டி தயிர்சேர்த்து நன்கு அடித்து, முகத்தில் தடவி ஊற வைத்துக் கழுவினால், சருமம் ரிலாக்ஸ் ஆவதுடன், சருமம் வெள்ளையாகவும் காணப்படும்.




## லேடிஸ் ஸ்பெஷல்



# சருமத்தில் உரோமமா?

சருமத்தில் தேவையற்ற உரோம வளர்ச்சி இருந்தால் முதலில் கவனிக்க வேண்டிய விஷயம் மாதவிலக்கு சுழற்சிதான். அது சரியில்லாமலிருப்பது உடலில் ஹோர்மோன் கோளாறு இருப்பதற்கான அறிகுறி. எனவே அதற்கே முதல் சிகிச்சை.



கத்தரிக்கோல், ரேசர் போன்ற எந்தக் கருவியையும் உபயோகித்து உரோமங்களை நீக்க முயற்சிக்கவேண்டாம். அப்படிச் செய்தால், உரோமங்களை நீக்கிய இடம், தடித்து, கறுப்பதுடன், உரோம வளர்ச்சியை மேலும் அதிகப்படுத்தும். இரசாயனம் கலந்த ஹேர் ரிமூவிங் கிரீம்களை உபயோகிப்பதும் உரோம வளர்ச்சியை மேலும் அதிகரிக்கச் செய்யும்.

ஏற்கனவே கிரீம் மாதிரியானவற்றைக் கொண்டு உரோமங்களை நீக்கியவர்களுக்கு சருமத்தின் சில இடங்களில் கரும்புள்ளிகள் மாதிரி நின்றுவிடும். அந்த இடங்களை அப்படியே வறண்டு போகவிடாமல், வாரம் ஒரு முறை உச்சி முதல் பாதம்வரை எண்ணெய் வைத்து, ஊறிக் குளிப்பது மூலம் ஓரளவு நிவாரணம் காணலாம்.

பிளீச்சிங் செய்வதால் சருமத்தின் மெல்லிய உரோமங்கள் சரும நிறத்துக்கே மாறும். அதனால் உரோம வளர்ச்சி அத்தனை அசிங்கமாகத் தெரியாமல் தற்காலிகமாக மறைக்கப்படும். ஆனால், பிளீச்சிங் தீவிரம் குறையக்குறைய, அதாவது, நான்கைந்து நாட்களில் மறுபடி உரோமங்கள் தம் பழைய நிறத்துக்குத் திரும்பும். இரசாயனம் கலந்த கிரீம்கொண்டு அடிக்கடி பிளீச் செய்வது சருமத்துக்கும் கேடு.

# பெண்களுக்கான பாட்டி வைத்தியம்

* மாதவிலக்கு நேரங்களில் ஏற்படும் மார்பகவலியைக் குறைக்க சுடுதண்ணீர் ஒத்தடம் கொடுக்கலாம்.
* மார்பக வலியைக் குறைக்க உளுந்தை அரைத்து பற்றுப்போட்டு அதன்மீது வெந்நீர் ஒத்தடம் கொடுக்கலாம்.
* விற்றமின் ஏ சத்துள்ள கீரை வகைகளை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொள்ளலாம். அகத்திக் கீரை மற்றும் .முருங்கைக் கீரையை அடிக்கடி சாப்பிடுவதன்மூலம் புற்றுநோய் வாய்ப்புகளை குறைக்க முடியும்.
* இரவுநேரத்தில் பப்பாளிப் பழம் ஒரு துண்டு சாப்பிடுவதன்மூலம் மாதவிலக்கு பிரச்சினைகள் வருவ்தைத் தடுக்கலாம். இரத்தம் சுத்தம் அடையும். புற்றுநோயையும் தவிர்க்கலாம்.
* அதிகாலை வெறும் வயிற்றில் சின்ன வெங்காயத்தை பச்சையாக சாப்பிடுவது நல்லது.
* கொதிக்கும் பாலில் பூண்டைப்போட்டு வெந்தபின்னர் அதனை குழைத்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடுவதன்மூலம் இரத்தத்தில் உள்ள கொழுப்பு கரையும்,• புற்றுநோய்க்கான வாய்ப்பும் குறையும்.



# 20 வயதுகளில் தம்மை அறியாமல் செய்யக்கூடிய தவறுகள்!

**பொதுவாக** அனைவரும் தம்மை அறியாமல் பல தவறுகளை சிறுவயது என்று சொல்லும் இருபது வயதுகளில்தான் செய்வோம். ஏனெனில் இந்த வயதில் அனைவருக்கும், நாம் பெரிய ஆளாகிவிட்டோம் என்ற எண்ணம் எழும். இதனால் யார் என்ன சொன்னாலும் கேட்கமாட்டோம். நம் மனம் சொல்வதை மட்டும்தான் செய்வோம். மேலும் இந்த வயதில் உடல் மற்றும் மனம் முற்றிலும் வேறுபட்டிருக்கும்.

குறிப்பாக டீனேஜ் பருவம் முடிந்து அடுத்த பருவத்தில் காலடி எடுத்துவைக்கும்போது, மனதில் தோன்றும் முதல் எண்ணம், நான் ஒரு சுதந்திரப் பறவை என்பது. இக்காலத்தில் நண்பர்கள் மிகவும் முக்கியமானவர்களாக இருப்பர். பெற்றோர்கள் எதையும் செய்ய விடாமல் தடுக்கும் எதிரிகளாக இருப்பதுபோல் இருக்கும். மேலும் இந்த பருவத்தில் எண்ணற்ற தவறுகளை செய்யநேரிடும்.

அதிலும் அத்தகைய தவறுகளை சற்று பெரியவர்களான பின்னர் நினைக்கும்போது, அவற்றில் சில வருத்தப்பட வைப்பவையாகவும், சில நகைச்சுவையாகவும் இருக்கும். இப்போது டீனேஜ் பருவம் முடிந்து அடுத்த பருவத்தில் காலடி வைக்கும்போது, பெண்கள் செய்யக்கூடிய சில பொதுவான தவறுகளை கொடுத்துள்ளோம்.

சமூக வலைத்தளங்களான ஃபேஸ்புக், டுவிட்டர் போன்றவற்றில் எந்நேரமும் இருப்பது. இதனால் தேவையில்லாத நபர்களிடம் நட்புறவு கொண்டு, பின் பிரச்சினையில் சிக்கிக்கொள்வது.

டீனேஜ் பருவம் முடிந்து அடுத்த பருவத்தில் காலடி வைக்கும்போது, இரவில் சரியாக தூங்காமல், காரணமே இல்லாமல் ஆண் நண்பர்களுடன் சட்டிங் செய்வது.

பெண்களை எளிதில் காதலில் விழும் காலம்தான் இருபது வயது. இந்த விவரம்தெரியாத இருபது வயதில் பெண்கள் காதலில் விழுந்து, இறுதியில் காதல் முறிவடையும்போதுதான் தவறை உணர்வார்கள்.

இன்றைய நாகரிக உலகில் ஃபேஷன் என்ற பெயரில் பெண்கள் கூட சிகரெட் பிடிப்பது, மது அருந்துவது என்றெல்லாம் செய்கிறார்கள். அதிலும் இந்த பழக்கம் விவரம் தெரியாத இருபது வயதில்தான் எளிதில் தொற்றிக்கொள்ளும்.

இந்த வயதில் கட்டுப்பாட்டில் இருப்பது சற்றுக் கடினமானது. அந்த கட்டுப்பாடு இல்லாவிட்டால், எளிதில் தவறுகளை செய்யநேரிடும். ஏனெனில் இந்த காலத்தில் ஆசை, காம உணர்ச்சி போன்றவை அளவுக்கு அதிகமாக இருக்கும்.

குண்டாகிவிடக்கூடாது என்று ஆண்கள் மற்றும் பெண்கள் செய்யும் ஒரு செயல்தான் சாப்பிடாமல் இருப்பது. இவ்வாறு சாப்பிடவேண்டிய காலத்தில் ஒழுங்காக சாப்பிடாவிட்டால், பின், உடலுக்கு வேண்டிய சத்துக்கள் கிடைக்காமல், பிற்காலத்தில் அவஸ்தைப்பட வேண்டியிருக்கும்.

20 வயதுகளில் அனைத்து பெண்களும் செய்யும் ஒரு தவறுதான், அனைவரையும் கண்மூடித்தனமாக நம்புவது. யார் என்ன சொன்னாலும், அதை நம்பி அதற்கேற்றாற் போல் நடந்துகொண்டு, பின் வருத்தப் படுவார்கள். இந்த வயதில் வீட்டு சாப்பாடு சாப்பிடப் பிடிக்காது. மாறாக நண்பர்களுடன் வெளியே சென்று கண்டகண்ட உணவுகளை வாங்கி சாப்பிடுவார்கள்.

## சமையல் குறிப்பு

# முளைகட்டிய பயிர் சாண்ட்விச்

இது காலையில் செய்வதற்கு மிகவும் சுலபமானது மற்றும் விரும்பி சாப்பிடக்கூடியது. சரி, இப்போது அந்த முளைக்கட்டிய பயிர் சாண்ட்விச்சை எப்படி செய்வதென்று பார்ப்போமா!

### தேவையான பொருட்கள்:

பாண் - 6 துண்டுகள், வெங்காயம் - 2 (துண்டுகளாக்கப்பட்டது), குறைந்த கொழுப்புள்ள வெண்ணெய் - 2 மேசைக்கரண்டி

**முளைகட்டிய பயிர் கலவைக்கு...**

விருப்பமான முளைக்கட்டிய பயிர்கள் - 1 கப் (வேக வைத்தது), உருளைக்கிழங்கு - 2 (வேக வைத்து மசித்தது), வெங்காயம் - 1 (பொடியாக நறுக்கியது), தக்காளி - 1 (பொடியாக நறுக்கியது), இஞ்சி பூண்டு பேஸ்ட் - 1 கரண்டி, பச்சை மிளகாய் - 2 (பொடியாக நறுக்கியது), சீரகப்பொடி - 1 மேசைக்கரண்டி, மல்லித்தூள் - 1 கரண்டி, மஞ்சள் தூள் - 1/2 கரண்டி, கறுப்பு உப்பு - 1/2 கரண்டி, உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - 1 கரண்டி.



### செய்முறை:

முதலில் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், வெங்காயம் சேர்த்து 5-6 நிமிடம் தீயை குறைவில் வைத்து வதக்கவேண்டும்.

பின்னர் அதில் இஞ்சி பூண்டு பேஸ்ட் சேர்த்து 2 நிமிடம் வதக்கிவிடவேண்டும். பின் பச்சை மிளகாய், சீரகப்பொடி, மல்லித் தூள், மஞ்சள் தூள், கறுப்பு உப்பு சேர்த்து 2-3 நிமிடம் கிளறி விடவேண்டும்.

அடுத்து தக்காளி மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து, கலவை நன்கு வதங்கும் வரை வதக்கவேண்டும். இறுதியில் முளைகட்டிய பயிர்கள் மற்றும் மசித்த உருளைக்கிழங்கு சேர்த்து நன்கு கிளறி இறக்கி, தனியாக வைத்துக் கொள்ளவேண்டும்.

பிறகு அந்த கலவையை மூன்றாக பிரித்து, அதில் ஒரு பகுதியை எடுத்து ஒரு பாண் துண்டின் மீதுவைத்து, சிறிது வெங்காயத்தை தூவி, அதன் மேல் மற்றொரு பாண் துண்டை வைக்கவேண்டும்.

இதேபோல் அனைத்து பாண் துண்டுகளையும் செய்யவேண்டும். பின்பு ஒரு தோசைக்கல்லை அடுப்பில் வைத்து, அதில் சாண்ட்விச்சுகளை வைத்து, அதன் இரண்டு பக்கமும் வெண்ணெய் தடவி, 3-4 நிமிடம் முன்னும் பின்னும் பொன்னிறமானதும் எடுக்கவேண்டும். இப்போது சூப்பரான முளைகட்டிய பயிர் சாண்ட்விச் தயார்!

## வாசகர்களின் கவனத்திற்கு...

முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக. (முரசு 1021 - வாரமொரு அதிர்ஷ்டசாலி - 375) இப்போட்டியிலிருந்து வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூபா 250/= என்பதை அறியத்தருகின்றோம்.

**250/= ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

**பரிசுப் போட்டி இல :-390**

**கேள்வி:** சருமத்தில் தேவையற்ற உரோமம் வளர்வதற்கு காரணமாக அமைவது எது?

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 21.10.2013**

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 390
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 388 இற்கான விடை:- மெனோரேஜியா.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி:- ல.ஜினுஷாந், நாகம்மாள் கோவில் வீதி, உடுவில்.

390

பெயர் : ..........
முகவரி : ..........
தே.அ. அட்டை இல : ..........
விடை : ..........
கையொப்பம் : ..........

படாதபடியால் பட்ஜெட்டை இரு சபைகளும் அங்கீகரித்து ஒரு முடிவுக்கு வரும் வரை ஒரு சில பணியாளர்கள் தவிர பிறர் வேலைக்கு வர வேண்டாம் வீட்டில் இருங்கள் அல்லது பீச்சுக்குப் போங்கள். பின்னால் சொல்லி அனுப்புகிறோம் என்று கட்டாய சம்பளமில்லாத விடுமுறை அளித்து வீட்டுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். சம்பளமில்லாத லீவில் பெரும்பாலானோர் சென்றிருக்கிறார்களே அன்றி நமது தமிழ் பத்திரிகைகளின் அமெரிக்க நாட்டு வல்லுனர்கள் எழுதுவது போல எவரும் டிஸ்மிஸ் செய்யப் படவில்லை அமெரிக்கா நிதி இல்லாமல் ஆண்டியாகவும் இல்லை. இங்கு நிதிப் பற்றாக்குறையினால் இந்த பட்ஜெட் நின்று போகவில்லை. பட்ஜெட் நிறைவேற்றப் படாததற்கு உண்மையான காரணத்தைச் சொல்ல வேண்டும் என்றால் அது மிகவும் அசிங்கமானது. அமெரிக்கா தன்னுடைய நிதி திட்டத்தைக் கூட நிறைவேற்ற முடியாமல் இன்று முட்டுச் சந்தில் நிற்கும் காரணம் நிற வெறி என்பதுதான் உண்மைக் காரணம். அந்தக் காரணத்தைப் பற்றி பேசும் முன்னால் குத்து மதிப்பாக அமெரிக்க அரசு இயங்கும் விதத்தைச் சற்று பார்க்கலாம்.

## அமெரிக்க ஆட்சி முறை

அமெரிக்காவில் ஜனாதிபதி மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் எலக்டோரல் காலேஜ் மூலமாகத் தேர்ந்தெடுக்கப் படுபவர்.

அமெரிக்காவின் சாசனப் படி மூன்று விதமான அரசியல் நிர்ணய அமைப்புக்கள் உள்ளன. இந்த மூன்று அமைப்புகளும் இணைந்தே அமெரிக்காவின் சட்டங்களை இயற்றியும், செயல்படுத்தியும் வருகின்றன. ஜனாதிபதியும் அவரது அமைச்சர்களும்(இந்த அமைச்சர்களை ஜனாதிபதி தேர்ந்தெடுத்து பாராளுமனறத்தின் ஒப்புதலை வாங்கிக் கொள்வார் மக்கள் தேர்ந்தெடுப்பதில்லை) நிர்வாகத் தூணாகவும், காங்கிரஸ் எனப்படும் பாராளுமன்றம் மற்றொரு தூணாகவும், நீதி மன்றங்கள் மூன்றாவது தூணாகவும் இருந்து அமெரிக்காவை ஆட்சி செய்கின்றன, சட்டங்களை உருவாக்கி அமுல் படுத்துகின்றன.

காங்கிரஸ் எனப்படும் தேர்ந்தெடுக்கப் பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபையில் செனட் என்ற மேல் சபையும், ஹவுஸ் ஆ்ஃப் ரெப்ரசென்டேடிவ் என்ற கீழ் சபையும் உள்ளன. இரு சபைகளும் அவைகளுக்கு உரிய கடமைகளைச் செயலாற்றுகின்றன. மக்கள் தொகையின் அடிப்படையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இத்தனை ஹவுஸ் ஆ்ஃப் ரெப்ரசெண்டேடிவ் உறுப்பினர்கள் என்று தீர்மானிக்கப் படுகிறார்கள். பெரிய மாநிலமான கலிஃபோர்னியா மாநிலத்தில் 53 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். செனட் உறுப்பினர்களாக மாநிலத்திற்கு இரு உறுப்பினர்கள் என மொத்தம் 100 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். நிதி சம்பந்தப்பட்ட சட்ட மசோதாக்களை உருவாக்குவது, தவறு செய்யும் ஜனாதிபதியை தண்டிப்பது போன்ற கடமைகள் ஹவுஸ் ஆ்ஃப் ரெப்ரசெண்டிவ் சபைக்கு உள்ளன.

காங்கிரஸ் என்பதில் செனட், ஹவுஸ் ஆ்ஃப் ரெப்ரசெண்டேடிவ்ஸ் எனப்படும் பிரதிநிதிகள் சபை என்று இரண்டு சபைகள் உள்ளன. செனட்டில் மொத்தம் 100 உறுப்பினர்கள். செனட் உறுப்பினரின் பதவிக் காலம் 6 வருடங்கள். ஒரு மாநிலத்திற்கு இரண்டு உறுப்பினர் வீதம் மொத்தம் 100 செனட்டர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். இதற்கு இந்திய பாராளுமன்றம் போல ஒட்டு மொத்தத் தேர்தல் இருக்காது. இந்திய ராஜ்ய சபை போல பதவி முடிய முடிய, தேர்வுகள் இருக்கும். பிரதிநிதிகள் சபையில் 435 உறுப்பினர்கள் அவர்களின் பதவிக்காலம் 2 வருடம், ஒவ்வொரு இரட்டைப் படை இரண்டாவது வருடத்திலும் 435 இடங்களுக்கும் தேர்தல் நடக்கும். நவம்பரில் நடந்த தேர்தலுக்குப் பின்னர் செனட் எனப்படும் மேல் சபையில் ஜனநாயகக் கட்சியின் சார்பாக 55 உறுப்பினர்களும், ரிபப்ளிக்கன் கட்சியினர் சார்பில் 45 உறுப்பினர்களும் இருக்கிறார்கள். செனட் சபையில் டெமாக்ரடிக் கட்சி மெஜாரிட்டியாக உள்ளது. பிரதிநிதிகள் சபையில் 234 ரிபப்ளிக்கன் கட்சி உறுப்பினர்களும், 201 டெமாக்ரடிக் உறுப்பினர்களும் இருக்கிறார்கள். இங்கு அதிபர் ஒபாமாவின் டெமக்ரடிக் கட்சி சிறுபான்மையாக உள்ளது. தற்பொழுதைய நிலைப் படி செனட்டில் ஆளும் கட்சியும், பிரதிநிதி சபையில் எதிர்க் கட்சியினரும் பெரும்பான்மை வகிக்கிறார்கள். அதனால் பட்ஜெட் உட்பட எந்தவொரு சட்டத்தையும் ஜனாதிபதியினால் எளிதில் நிறைவேற்ற முடிவதில்லை.

பொதுவாக ரிபப்ளிக்கன் கட்சியானது மத விசுவாசமுள்ள கன்சர்வேடிவ் கொள்கைகள் உடைய கட்சி. ரிபப்ளிக்கன் கட்சி கிறிஸ்துவ மத நிறுவனங்களின் மதக் கொள்கைகளையே தனது சமூகக் கொள்கைகளாகக் கொண்டிருக்கும் ஒரு கட்சி. ரிபப்ளிக்கன் கட்சியின் ஆதரவாளர்களில் பெரும்பாலானவர்கள் தீவீர கிறிஸ்துவ மதப் பற்றுடையவர்களே. வெள்ளை அமெரிக்கர்களால் பெரிதும் ஆதரிக்கப்படுவது. சர்ச்சுக்களின் ஆதரவினைப் பெற்ற கட்சி. ரிபப்ளிக்கன் கட்சி வடக்கு, தெற்கு மற்றும் உள் அமெரிக்க மாநிலங்களில் அதிகமாக வசிக்கும் எவாஞ்சலிக்கல் கிறிஸ்துவர்களின் ஆதரவினைப் பெற்ற கட்சி. ரிபப்ளிக்கன் கட்சியின் முக்கிய கொள்கைகளானவை:

ஜனாதிபதி ஒபாமாவின் டெமாக்ரடிக் கட்சியானது லேசான இடதுசாரி கொள்கைகள் உடைய கட்சியாகக் கருதப் படுகிறது. புலம் பெயர்ந்து வந்த குடியேறிகள் அதிகம் வசிக்கும் கடற்கரையோர மாநிலங்களிலும், தொழிற்சாலைகள் தொழிலாளர்கள் நிறைந்த மாநிலங்களிலும் டெமாக்ரடிக் கட்சி அதிக ஓட்டுக்கள் பெற்று வென்று வருகின்றது. கலிஃபோர்னியா, நியூயார்க், ஓரேகான், வாஷிங்டன், நியூஜெர்சி, நெவேடா போன்ற பெரும் மக்கள் தொகையும் அதிக அளவு அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தோர் வசிக்கும் மாநிலங்களில் வழக்கமாக டெமாக்ரடிக் கட்சி வெற்று பெறுகிறது. எலக்டோரல் காலேஜ் ஓட்டுக்கள் இந்த மாநிலங்களில் அதிகம் இருப்பதினால் குறைந்த அளவு மாநிலங்களிலேயே ஒபாமா வெற்றி பெற்றிருந்தாலும் அதன் எண்ணிக்கை பலத்தால் ஒட்டு மொத்த அதிக எண்ணிகையிலான எலக்ட்ரோரல் ஓட்டுக்களைப் பெற்று அவரால் வெற்றி பெற முடிந்தது.

## ரிபப்ளிக்கன் கட்சியின் முக்கிய கொள்கைகளானவை:

1. கருக்கலைப்பு தவறானது. எந்த நிலையிலும் கருக்கலைப்பு அனுமதிக்கப் படக் கூடாது. கற்பழிக்கப் பட்டு கரு உருவாகியிருந்தாலும், அறியாமையினால் கரு உருவாகியிருந்தாலும் கூட அந்தக் கரு கலைக்கப்படக் கூடாது. இதற்கான சட்டங்களை ஆதரித்து அமுல் படுத்த முயல்வது ரிபப்ளிக்கன் கட்சி.

2. உலகத்தை ஆண்டவன் மட்டுமே படைத்தான் என்பதில் நம்பிக்கையுள்ளது. பள்ளிப் பாடங்களில் பரிணாமத்துவத்துடன் அதை மறுக்கும் உலகம் கடவுளால் உருவாக்கப் பட்டது என்ற பாடமும் போதிக்கப் பட வேண்டும் என்ற கொள்கையுடையது.

3. ஓரினத் திருமணத்தை ரிபப்ளிக்கன் கட்சி கடுமையாக எதிர்க்கிறது. திருமணம் என்பது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலானது மட்டுமே என்ற கொள்கையுடையது.

4. அரசாங்கம் சிறியதாக இருக்க வேண்டும் என்பது ரிபப்ளிக்கன் கட்சியின் பொருளாதாரக் கொள்கை. அரசாங்கத்தின் பங்கு குறைவானதாகவும் தனியார் நிறுவனங்களின் பங்கு பெரிதானதாகவும் இருக்க வேண்டும் என்பதும், வருமான வரி குறைவாகவும், இராணுவச் செலவு அதிகமானதாகவும் பெரிய பலமுள்ள ராணுவமாக இருக்க வேண்டும் என்பதும் ரிபப்ளிக்கன் கட்சியின் கொள்கைகள். முதலாளித்துவத்திற்கு பெருத்த ஆதரவையும் அவர்களுக்கு வரிச் சலுகைகளையும் ஆதரிக்கும் கொள்கையுடையது ரிபப்ளிக்கன் கட்சி. அவுட் சோர்சிங் போன்ற பெரு நிறுவனங்களுக்கு வசதியான விஷயங்களில் கட்டுப்பாடுகளை விதிக்க விரும்பாத கட்சி.

5. இமிக்ரேஷன் சட்டங்கள் கடுமையானதாக இருக்க வேண்டும் என்பதும் கள்ளத்தனமாக அமெரிக்காவில் நுழைந்தவர்கள் வெளியேற்றப் பட வேண்டும் என்பதில் ரிபப்ளிக்கன் கட்சி உறுதியாக உள்ளது.

6. அமெரிக்காவுட ஒத்துக் கொள்ளாமல் முரண்டு பிடிக்கும் வெளிநாடுகளை அமெரிக்கா தன் ராணுவ வலிமை கொண்டும் போர்கள் மூலமாகவும் அடக்கப் பட வேண்டும் என்பது ரிபப்ளிக்கன் கட்சியின் முக்கியமான வெளிநாட்டுக் கொள்கை.

7. ஸ்டெம் செல் ரிசர்ச் போன்றவை தடை செய்யப் படவேண்டும். மரபுசாரா எரிசக்தி போன்ற ஆராய்ச்சிகளுக்குப் பணம் அதிகம் செலவழிக்க வேண்டியதில்லை, பருவ நிலை மாற்றம் போன்ற விஷயங்கள் குறித்து அதிகமாகக் கவலையடைந்து ஆராய்ச்சிகள் வேண்டியதில்லை, அமெரிக்காவின் எண்ணெய் வளத்தை சுற்றுச் சூழல் இயக்கங்களின் எதிப்புகளைக் கண்டு கொள்ளாமல் அதிகமாக பயன்படுத்த வேண்டும் போன்றவையும் ரிபப்ளிக்கன் கட்சியின் முக்கியமான கொள்கைகள்.

மேற்சொன்ன முக்கியமான கொள்கைகள் தவிர இன்னும் ஏராளமான முக்கியமான பிரச்சினைகளில் ரிபப்ளிக்கன் கட்சி டெமாக்ரடிக் கட்சியுடன் கடுமையாகக் கொள்கை அளவில் வேறு படுகிறது.

## டெமாக்ரடிக் கட்சியின் முக்கிய கொள்கைகள்:

1. கருக்கலைப்பு செய்வது அவரவர் தேர்வு என்பதும், ஓரினத் திருமணத்தைச் சட்டப் படி தடை செய்யத் தேவையில்லை கிறிஸ்துவ திருச்சபையின் கொள்கைகளைப் பொது மக்கள் மீது திணிக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருப்பவர்கள்.

2. டெமாக்ரடிக் கட்சியோ பணக் காரர்களிடம் அதிக வரி விதித்து ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்ற கொள்கையும், குறைந்த ராணுவச் செலவு, குறைந்த போர்கள். அதிக அளவிலான ஆராய்ச்சிச் செலவுகள், வெளிநாட்டுக்குச் செல்லும் வேலைகளைத் திரும்பக் கொணர்தல், தனியார் நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடுகள் அதிகம் இருக்க வேண்டும் போன்ற பொருளாதாரக் கொள்கைகளை உடையது.

இரண்டாவது முறையாக ஜெயித்து வந்த ஒபாமா மீது ரிபப்ள்கிக்கன் கட்சியின் அடிப்படைவாதிகள் பலருக்கும் கடுமையான வெறுப்பும் காழ்ப்பும் இருக்கிறது. அவர் கருப்பர் என்பதினால் பல நிறவெறி பிடித்த ரிபப்ளிக்கன் கட்சியினரின் கோபம் இன்னும் பலமாக இருக்கிறது. ஆரம்பம் முதலாகவே அவரை செயல் பட விடாமல் தடுப்பதில் குறியாக இருந்து வந்துள்ளனர். பட்ஜெட்டை அனுமதிக்காமல் இழுப்பதன் மூலமாகவும் கடன் வாங்கும் சக்தியை அதிகரிக்க விடாமல் முட்டுக்கட்டை போடுவதன் மூலமாகவும் அவருக்குத் தொடர்ந்து கடுமையான தடைகளை விதித்து வருகிறார்கள்.

ஹவுஸ் ஆ்ஃப் ரெப்ரசென்டேடிவ் எனப்படும் கீழ் சபையில் அவரது டெமாக்ரடிக் கட்சி மைனாரிடியாக இருந்தபடியால் அவரால் வேகமாக எந்தவிதத் திட்டங்களையும் அமுல்படுத்த முடியவில்லை. அவரது திட்டங்களைத் தோற்கடிப்பதையே முதல் குறிக்கோளாக ரிபப்ளிக்கன் கட்சியினர் கருதியதால் அவர் பெரும் பின்னடைவுகளைச் சந்திக்க நேர்கிறது. முக்கியமாக ஒபாமாவினால் கொணரப் பட்ட மருத்துவக் காப்பீடு திட்டம், வருமான வரி சீர்திருத்தங்கள் ரிபப்ளிக்கன் கட்சியினர் கடுமையாக எதிர்த்து வருகிறார்கள். இப்பொழுது பிரச்சினை துறைரீதியான நிதி ஒதுக்கிடு செய்வதில் கிடையாது. ஒபாமாவின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை நிறைவேற்றாமல் வாபஸ் பெறக் கோரியே ரிபப்ளிக் கட்சி உறுப்பினர்கள் தங்களுக்கு இருக்கும் சொற்ப மெஜாரிட்டியைக் கொண்டு கிட்டத்தட்ட ஒபாமாவின் அரசை ப்ளாக் மெயில் செய்து வருகிறார்கள். நீ கொண்டு வந்த திட்டத்தைக் கை விட்டால் மட்டுமே நாங்கள் பட்ஜட்டை அனுமதிப்போம் இல்லாவிட்டால் அமெரிக்காவே நாசமாகப் போனாலும் கவலையில்லை என்று மிரட்டி வருகிறார்கள். ஹவுஸ் எனப்படு சபையில் அவர்கள் நிறைவேற்றும் தீர்மானத்தை டெமாக்ரட் கட்சியினர் மெஜாரிட்டியாக இருக்கும் செனட் என்ற சபை நிராகரித்து மீண்டும் ஹவுசுக்கே அனுப்பி வைக்கிறது. கிட்டத்தட்ட பிங் பாங் விளையாடுவது போல இருவரும் மாற்றி மாற்றி அனுப்பி செப்டம்பர் 30 தேதி இரவுடன் புதிய நிதி ஆண்டு ஆரம்பிக்கும் நேரம் வரை ஒரு முடிவுக்கு வராத படியால் அமெரிக்க அரசு இப்பொழுது ஸ்தம்பித்து நிற்கிறது.

## பொருளாதார நெருக்கடி

ஃபிஸ்கல் க்ளிஃப்(Fiscal cliff) என்று அழைக்கப்படும் நிதிப் பிரச்சினையே. சென்ற டிசம்பர் 31ம் தேதிக்குள் ஒபாமாவும், இரு கட்சியினரும் ஒரு சமரச முடிவுக்கு வந்து ஒரு உடன்பாட்டை எட்ட முடியாமல் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்து இப்பொழுது ஒக்டோபர் 17 அன்று கெடுவில் வந்து அந்த பிரச்சினையும் முட்டிக் கொண்டு நிற்கிறது. செனட்டில் டெமாக்ரட் கட்சியினர் மெஜாரிடியாக இருந்தாலும் ஹவுஸ் ஆ்ஃப் ரெப்ரசெண்டேடிவ் சபையில் அவர்கள் மைனாரிடியாக இருப்பதால் ஒபாமா ஜெயித்து ஜனாதிபதியாக இருந்தாலும் கூட ரிபப்ளிக்கன் கட்சியினரின் தயவு இல்லாமல் இந்த சிக்கலைத் தீர்க்க முடியாது. பட்ஜெட் அனுமதியை விட இன்னும் மோசமான விளைவுகளை அந்த பிரச்சினை ஏற்படுத்தவிருக்கிறது.

அமெரிக்கா நிதி இல்லாமல் பட்ஜெட் நிறைவேற்றாமல் திண்டாடவில்லை. பட்ஜெட் நிறைவேற்றப் படாத காரணம் எதிர்க்கட்சியினரான ரிபப்ளிக்கன் கட்சியினர் ஒரு சபையில் மெஜாரிட்டியுடன் இருப்பதினாலும் அவர்கள் ஒபாமாவையும் அவரது திட்டங்களையும் இன வெறியுடன் எதிர்ப்பதினாலேயும் ஒபாமாவின் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடும் விதமாக இந்த பட்ஜட் தடையைப் பயன் படுத்தி வருகிறார்கள்

அமெரிக்க மத்திய அரசின் துறைகள் மட்டுமே செயல் படாமல் இருக்கின்றன. இராணுவம் தபால், சமூக ஓய்வூதியம் போன்றவை வழக்கம் போல செயல் பட்டு வருகின்றன. நீங்கள் இப்பொழுது அமெரிக்காவுக்கு போனால் சுதந்திர தேவி சிலையுள்ள தீவுக்குப் போக முடியாது, கிராண்ட் கான்யனைப் பார்க்க முடியாது, யெல்லோ ஸ்டோன் யோசிமிடி காட்டுக்குள் போக முடியாது. பெரும்பாலான மத்திய அரசு ஊழியர்கள் இந்த பிரச்சினை முடியும் வரை வேலைக்குச் செல்ல முடியாது அவ்வளவுதான். எவரும் டிஸ்மிஸ் செய்யப் படவில்லை நிரந்தரமாக வேலை இழக்கவில்லை. இந்த பிரச்சினை தீரும் பொழுது அனைவரும் ஒரிரு வாரங்களுக்குள்ளாக மீண்டும் வேலைக்குத் திரும்பி விடுவார்கள். அவ்வளவுதான். தினமலரும், த கிண்டுவும் சொல்லுவது போல எவரும் பிச்சைப் பாத்திரம் ஏந்தித் தெருத் தெருவாக அலையவில்லை.

## வேலைக்கு ஆளில்லாமல் வாலண்டியராக (volunteer) வந்த மோனிக்கா

ஆனால் ஒரு முடிவுக்கு வராமல் இந்த பிரச்சினை இழுக்கப் படும் பட்சத்தில் மத்திய அரசு ஊழியர்கள் மட்டும் அல்லாமல் தனியார் துறைகளும் ஒட்டு மொத்த பொருளாதாரமும் பெரும் அளவில் பாதிக்கப்படும். உலகப்பொருளாதாரம் பெரும் அளவில் பாதிக்கப்படும். அந்த அளவுக்குச் செல்ல அனுமதிக்க மாட்டார்கள். இதைப் போலவே முன்பு கிளிண்டன் ஆட்சியிலும் இதே ரிபப்ளிக்கன் கட்சியினர் கொடுத்த குடைச்சலில் மத்திய அரசு செயல் படாமல் 22 நாட்கள் ஸ்தம்பித்திருக்கிறது. அப்பொழுது வேலைக்கு ஆளில்லாமல் வாலண்டியராக (volunteer) வந்த மோனிக்கா லிவின்ஸ்கியுடன் கிளிண்டன் உறவு கொண்டது வேறு விபரீதத்திற்குக் கொண்டு சென்றது. அது போல எந்தவொரு விபரீதமும் நடக்கும் முன்னால் இந்த இழுபறியையும் நிறுத்திக் கொள்வார்கள் என்று நம்புவோம்.

## ப்ளாக்மெயில் மிரட்டல்

ஒபாமாவின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு இந்த பட்ஜெட்டில் நிதி வழங்கப் போவதில்லை அது ஏற்கனவே நிறைவேற்றப் படத் துவங்கியுள்ளது. இது ரிபப்ளிக்கன் கட்சியினர் நிகழ்த்தும் ஒரு ப்ளாக்மெயில் மிரட்டல் அரசியல் மட்டுமே. மேலும் ஆப்கான் போருக்கும் சிரியா போருக்கும் இந்த பட்ஜெட் விவகாரத்திற்கும் சம்பந்தமில்லை. இது முழுக்க முழுக்க ஒபாமாவை மிரட்டப் பயன்படுத்தப்படும் ஒரு மிரட்டல் கருவி மட்டுமே. பத்து லட்சம் பேர்களுக்கு அல்ல பத்து பேர்களுக்குக் கூட வேலை போகப் போவதில்லை. அனைவரும் மீண்டும் வேலைக்குச் செல்லப் போகிறார்கள். எவரையும் யாரும் வீட்டுக்கு அனுப்பி விடவில்லை. நிதி ஒதுக்கீடு கிடைக்கும் வரையிலும் கட்டாய விடுமுறை விடப்பட்டுள்ளது. அவ்வளவுதான்.

அமெரிக்கா இன்னும் முழுகி விடவில்லை. ஆனால் உலகப் பொருளாதாரமும் வர்த்தகமும் இது தொடர்ந்தால் பாதிப்புறும்.

# மாறாது நிர்ணயம்



ஏழு ஒருநாள் போட்டிகளில் கலந்துகொள்ள அவுஸ்திரேலிய அணி இந்தியாவந்துள்ளது. இது தொடர்பான, அச்சு ஊடகம், தொலைக்காட்சி கிரிக்கெட் விளம்பரங்கள் கூட யார் அந்த ஒரு நாள் முதல்வன் என்ற கோள்வியுடனேயே ஒளி பரப்பாகின்றன. தற்போது ரிலயன்ஸ் ஐ.சி.சி. ஒரு நாள் தர வரிசையில் முதன்மையில் இருப்பது இந்திய அணி இரண்டாவது இடத்தில் இருப்பது அவுஸ்திரேலிய அணி. எனவே விளம்பரம் நியாயமானதுதான். எனினும் நடக்கப் போவது என்ன. தற்போதுள்ள தரவரிசை மாற வேண்டுமாயின் 6 - 1 என்று ஒருநாள் போட்டிகளை வெல்ல வேண்டும். இதேவேளை இந்தியா தனது முதலிடத்தைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்றால் இரண்டோ அல்லது அதற்கு மேலான போட்டிகளை வென்றால் போது மானது.

இன்னொருபுறம் இந்திய அணியின் ரவீந்திர ஜடேஜா தற்போது ஒருநாள் பந்துவீச்சுத் தரவரிசையில் மே.இந்திய மாயாஜால சுழற்பந்து வீச்சாளர் சுணில் நாராயனுடன் இணைந்து முதல் இடத்தில் இருக்கிறார். அணியின் தவிர்க்க முடியாத வீரர் என்ற வரிசையில் சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்திக் கொண்டார் என்றால் முதல் தடவையாக ஒருநாள் தரவரிசையில் முதலிடம் பெறும் வாய்ப்பு ரவீந்திர ஜடேஜாவுக்குக் கிடைக்கும். இதேவேளை அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் கிளின்ட் மக்கே ஏழாவது இடத்திலும், மிட்சல் ஜோன்சன் எட்டாவது இடத்திலும் முதல் பத்து இடங்களுக்குள் கௌரவமான இடத்தில் இருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டால் மேலும் முன்னேற இடம் உண்டு.



மறுபுறம் இரண்டு அணிகளையும் சேர்ந்த நான்கு துடுப்பாட்ட வீரர்கள் முதல் பத்து இடங்களுக்குள் இருக்கிறார்கள். அதாவது நான்காவது இடத்தில் விராட்கோஹ்லி, ஏழாவது இடத்தில் இந்திய அணித்தலைவர் மகேந்திர சிங் டோணி, ஒன்பதாவது இடத்தில் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஜோர்ஜ் பெய்லி, பத்தாவது இடத்தில் ஷேன் வொட்ஸன் இருக்கிறார்கள். இவர்களின் துடுப்பாட்டத் திறமை இவர்களை உயர்த்த உதவும். குறிப்பாக விராட்கோஹ்லி மிகுந்த கவனத்துக்குரியவர் ஆகிறார். தற்போதைக்கு முதல் மூன்று துடுப்பாட்ட வீரர் வரிசையில் ஹசீம் அம்லா, ஏபிடி.வில்லியர்ஸ், குமார் சங்கக்கார ஆகியோர் இருக்கிறார்கள்.

மொத்தத்தில் முடிந்து போன ஒரேயொரு இருபதுக்கு இருபது ஆட்டத்தின் முடிவைப் பார்க்கும்போது எதுவும் மாறக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. ஆனால் அணியின் இந்திய முதலிடம் மாறவே மாறாது என்றே ஊகிக்க முடிகிறது.

**அணி தரவரிசை 11.10.2013 படி**

| தரம் | நாடு | புள்ளி |
|---|---|---|
| 01 | இந்தியா | 123 |
| 02 | அவுஸ்திரேலியா | 115 |
| 03 | இங்கிலாந்து | 111 |
| 04 | இலங்கை | 111 |
| 05 | தென் ஆபிரிக்க | 105 |
| 06 | பாகிஸ்தான் | 101 |
| 07 | நியுசீலாந்து | 89 |
| 08 | மே.இ.தீவுகள் | 89 |
| 09 | பங்களாதேஷ் | ·76 |
| 10 | சிம்பாப்வே | 55 |
| 11 | அயர்லாந்து | 38 |
| 12 | நெதர்லாந்து | 13 |
| 13 | கென்யா | 10 |

**இந்திய அவுஸ்திரேலிய ஒருநாள் போட்டி அட்டவணை (சகலதும் இரவுபகல் ஆட்டங்கள்)**

| | | |
|---|---|---|
| 13 ஒக்ரோபர் | 1வது ஒருநாள் போட்டி | - புனே |
| 16 ஒக்ரோபர் | 2வது ஒருநாள் போட்டி | - ஜெய்ப்பூர் |
| 19 ஒக்ரோபர் | 3வது ஒருநாள் போட்டி | - மொஹாலி |
| 23 ஒக்ரோபர் | 4வது ஒருநாள் போட்டி | - ராஞ்சி |
| 26 ஒக்ரோபர் | 5வது ஒருநாள் போட்டி | - கட்டாக் |
| 30 ஒக்ரோபர் | 6வது ஒருநாள் போட்டி | - நாக்பூர் |
| 02 நவம்பர் | 7வது ஒருநாள் போட்டி | - பெங்களூர் |

# நன்றி சச்சின்




ஜோசெப் கிருஷ்ணா



சரியாக ஒருவாரத்தின் முன் கிரிக்கெட் சகாப்தம் சச்சின் ரமேஷ்டெண்டுல்கார் டெஸ்ட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார். எனவே மேற்கிந்தியத் தீவுகளுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியை சச்சின் விளையாடும் போது அது அவரது இருநூராதவது டெஸ்ட் போட்டியாக இருக்கும். அதுவே கிரிக்கெட் மைதானத்தில் எந்த வகைக் கிரிக்கெட்டிலும் ஒரு வீரரைக் காணும் இறுதிச் சந்தர்ப்பமாகவும் இருக்கும்.

இவரது ஓய்வு பற்றிய அறிவிப்பு வந்த கையோடேயே உலகின் எல்லாத் திசைகளில் இருந்தும் மிக உயர்ந்த கருத்துக்கள் வெளிப் பட்டிருந்தன. 1969ல் 16 வயதுச் சிறுவனாக பாகிஸ்தானுக்குச் சென்ற போது, இவரது அணித்தலைவர் கிருஷ்ணமாச்சாரி.ஶ்ரீசரந்த் அவர் மனம்நெகிழ்ந்து சச்சின் பற்றிப் பேசியிருந்தார். தனது இருபத்து நான்கு வருட கிரிக்கெட் வாழ்க்கையில் 15837 டெஸ்ட் ஓட்டங்களைக் குவித்துள்ளார் இவர்.

மேலும் அண்மையிலேயே (சாம்பியன்ஸ் லீக் போட்டிகள்) எல்லா வகையான போட்டிகளிலும் ஐம்பதாயிரம் ஓட்டங்களைக் கடந்த ஒரே வீரர் என்ற சாதனையையும் பதிவு செய்தார். எனது பதினொரு வயதிலேயே கிரிக்கெட் விளையாட ஆரம்பித்தேன். இந்த நிலையில் கிரிகெட் இல்லாத ஒரு வாழ்க்கையை நினைத்துப்பார்க்கவே முடியவில்லை என்று உணர்வு பூர்வமாகவே கண்கலங்கி இருக்கிறார் சச்சின். இவர் தனது பதின்னான்காவது வயதில் பாடசாலைத் தோழனான வினோத் காம்பிளியுடன் இணைந்து குவித்த 664 இணைப் பாட்டத்துடன் (இவர் பெற்றதும் இரட்டைச் சதம்) தொடங்கிய பிரபல்யம் இன்றுவரை முடியவில்லை. சச்சின் பற்றிய செய்திவராத நாளே இல்லை எனும் அளவிற்கு பிரபல்யம் பெற்றவர் இவர். இவரது பெருமைகள் சாதனைகள் என்றுமே குறைத்து மதிப்பிடக் கூடியவை அல்ல. அவற்றுக்கு அருகில் வரக் கூடியதாகக் குறிப்பிடத்தக்க வீரர்களும் யாரும் இல்லை. இருந்தும் இவர் ஓய்வு பெறுவது தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சைகள் சிறிது கசப்புணர்வை ஏற்படுத்தியது என்பதிலும் மாற்றுக் கருத்துக்கள் இருக்கமுடியாது.

தனது ஓய்வு பற்றிச்சரியான நேரத்தில் சரியான முடிவெடுக்க முடியாமல் போனமை பல்வேறு தரப்புக்கும் சிறிது அதிருப்தியை ஏற்படுத்தியது என்பதும் உண்மை. மறுவளமாக எத்தனையோ அதிதிறமை நிறைந்த இளைஞர்கள் ஒரு இடைவெளி கிடைக்குமா என்று ஏங்கிப்போன வரலாறும் உண்டு. இப்படி ஒரு விடயத்தை விட்டாள் கிரிகெட் வாழ்க்கையிலும், அப்பால் தனிப்பட்ட வாழ்க்கையிலும் எந்தச் சர்ச்சைக்கும் உட்படாத மிகப் பெரிய கண்ணியமான ஒருவராகவே சச்சின் திகழ்ந்தார் என்பது மறுக்க முடியாத உண்மை. கிரிக்கெட் இருக்கும் வரை சச்சின் என்ற உன்னதப் பெயரும் நீடித்திருக்கும்.

# முன்மாதிரி அல்ல

அவுஸ்திரேலியாவின் டேவிட்.வோர்ணர் நிறைய எதிர்பார்க்கப் பட்டவர். ஆனால் இவரது முரண்போக்கால் கிரிக்கெட் எதிர்காலம் அழிக்கப்பட்டுவிடுமோ என்று சுட்டிக்காட்டப்படுபவர். அண்மையில் சிட்னி கழகமொன்றின் ஆட்டத்தில் விளையாடவேண்டியவர், பொறுப்பை மறந்து வேறுவேலைபார்க்கப் போய்விட்டார். இதனால் ஒரு ஆட்டத்தில் விளையாடத் தடையை எதிர்கொண்டார். முன்னதாக ஆஷஸ் தொடரின் போது இங்கிலாந்தின் ஜோருட்டை முகத்தில் அறைந்தார். அதனால் அடுத்துவந்த இரண்டு டெஸ்ட் ஆட்டங்களை இழந்தார். அவுஸ்திரேலிய சாம்பியன் லீக் அணியின் விளையாடும் சந்தர்ப்பத்தையும் இழந்தார். பின்னர் அவுஸ்திரேலிய கிரிக்கெட் விமர்சகர்களுடன் முரண்பட்டு அதனால் ஒரு ஆட்டம் விளையாட தடை விதிக்கப்பட்டார்.

இப்படியாக தவறுகளைச் செய்து கொண்டேபோகும் அவரால் தன்னைத் திருத்திக் கொள்ளமுடியவில்லை. இப்பொழுது முன்னாள் அவுஸ்திரேலிய அணித்தலைவர் மார்க் ரெயிலரிடம் சில அறிவுகைளைப் பெற்றிருக்கிறார் போலத் தெரிகிறது. நான் முன்பு ஒரு தொல்லையாகத்தான் இருந்தேன். இப்போது மார்க் ரெயிலரைச் சந்தித்த பின் எனது திறமையை வீணாக்கக் கூடாதென்று உணர்கிறேன். அனுபவ முதிர்ச்சி நிலை ஒன்றை அடைந்து, என் விளையாட்டில் மிகுந்த அக்கரை செலுத்தி என்தரத்தை உயர்த்தப் பாடுபடுவேன் என்று கூறியுள்ளார்.



இருபத்தாறு வயது மட்டுமே நிரம்பிய இவர், அவுஸ்திரேலிய அணிக்கு நிரையவே கொடுக்கும் தகுதிவாய்ந்தவர் ஆனாலும் இவரது முன்கோபம், பொறுப்பின்மை என்பன இவரது எதிர்காலத்தைக் கோள்விக் குறியாக்குகின்றன. இப்பொழுது புதிதாகத் தத்துவம் பேசுகிறார் அது எத்தனை நாளுக்கென்று பொறுத்திருந்துப்பார்ப்போம்.

# விட்டுக்கொடுப்பு



இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் திலகரட்ண.டிர்ஷான் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இளந்தலைமுறையினருக்கு இடையூறாக இருக்க விரும்பாமையே தான் விலக்கொள்வதற்கான காரணம் என்றும் தெரிவித்துள்ளார். உண்மையில் இலங்கை கிரிக்கெட் அணி சங்கடமான நிலைமைகளை எதிர்கொண்ட சந்தர்ப்பங்களில், அதனைச் காப்பாற்ற உறுதுணையாக இருந்தவர் டில்ஷான் என்பதை மறக்கக் கூடாது. அத்தகைய ஒரு சூழ்நிலையில் தான் டில்ஷான் இலங்கை அணியின் தலைமைப் பதவியைக் கூட ஏற்றிருந்தார். துரரிஷ்டவசமாக அவர் தலைமைப் பதவியில் சோபிக்கமுடியாமப் போயிவிட்டது. நிறைய வெற்றிகளைப் பெற்றுக் கொடுக்கவும் முடியாமல் போய்விட்டது. ஆனால் அதற்கான முழுப்பொறுப்பையும் டில்ஷான் மீது சுமத்த முடியாமல் இருக்கும் என்பதும் வேறு பல காரணங்கள் இருந்ததென்பதும் மறுக்கப் பட முடியாத உண்மைகளும் கூட.

டில்ஷான் தனது முதலாவது டெஸ்டில் 1999இல் சிம்பாவேக்கு எதிராக 163 ஓட்டங்கள் பெற்றதுடன் அவரது டெஸ்ட் வாழ்க்கை ஆரம்பமாகியது. அதன்பின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக இவருக்கு யாரும் இணையில்லை என்ற அளவில் எல்லோருக்கும் ஒரு களக்கத்தைக்கொடுத்தவர். தன் கிரிக்கெட் வாழ்க்கையின் முக்கியமான தருணங்களும், தான் ஆரம்பத்துடுப்பாட்ட வீராகக் களமிறங்கிய தருணங்களே என்று டில்ஷான் கூறியுள்ளார். பதினான்கு ஆண்டுகள் டெஸ்ட் கிரிக்கெட் விளையபடிய டில்ஷான் பதினாறு சதங்கள் இருபத்துமூன்று அரைச்சதங்கள் பெற்றவர். மொத்தமாக டெஸ்ட் ஓட்டங்கள் 5492 பெற்றுள்ள இவர் அதிகூடிய ஓட்டங்களாகா 193 ஓட்டங்கள் குவித்தவர் டில்ஷான் இலங்கை அணித்தலைவராக இருந்தபோது 2011இல் இங்கிலாந்து அணிக்கு எதிராக லோட்ஸ் மைதானத்திலேயே தனது அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையான 193 பெற்றார். இதேவேளை டெஸ்ட் போட்டிகளில் மொத்தம் 39 விக்கெட்டுக்களைச் சாய்த்துள்ள இவர் பங்களாதேஷ் அணிக்கு எதிராக பத்து ஓட்டங்கள் கொடுத்து நான்கு விக்கெட்டுக்கள் சரித்த, சிறந்த பந்துவீச்சுச் சாதனையைக் கொண்டிருக்கிறார்.

அண்மையில் நடைபெறவுள்ள பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய பின்பே ஓய்வு பெறும் எண்ணம் இருந்ததாகக் கூறி இருந்தார். எனினும் ஏன் இந்தச் சடுதியான முடிவை எடுத்தார் என்று தெரியவில்லை. எனினும் ஒருநாள் மற்றும் இருபதுக்கு இருபது போட்டிகளில் இருப்பார். என்றும் தெரியவருகிறது. அதோடு 2014 ஐ.பி.எல்.போட்டிகள் அதிரடி டில்ஷாணை மீண்டும் ரசிகர்கள் முன் கொண்டு வரும் என்பதில் சந்தேகம் இல்லை.

# தமிழர் தலைவிதி தமிழர் கரங்களிலேயே!



**பொன்னாலை வரதராஜப் பெருமாள் பதியில் அமைந்த பிருந்தாவனம் தியான மண்டபத்தில் இயங்கும் உயிர் ஆன்மீக மன்றத்தின் ஆக்கம்.**

### முக்கிய மந்திரங்கள் போல் மொழியின் பெயரில் உச்சரிப்பு நன்மை தரக்கூடிய அதிர்வாக இருத்தல் வேண்டும்

அடுத்து அகத்தியரின் எச்சரிக்கைக் குறிப்பொன்றை நாம் அவசரமாக கவனத்தில் எடுக்கவேண்டியுள்ளது. ஒவ்வொரு பொருளுக்கும், ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு தெய்வத்திற்கும், ஒவ்வொரு பெயருள்ளது. தெய்வப்பெயரை திரும்பத் திரும்ப உச்சரிப்பதால் பலமான சக்திமிக்க அதிர்வலைகள் மனித மனத்திடமிருந்து உண்டாகி அதே மனிதனுக்கும் நன்மைகளை விளைவிக்கிறது. தொண்டையில் காற்று அதிர்வால் பேச்சு உண்டாகிறது. செவிப்பறையில் ஒலி அலைகள் அதிர்வதால் கேட்டல் நடைபெறுகிறது. அடிமனதில் ஏற்படும் அதிர்வுமேல் மனதில் எண்ணமாக வெளிப்படுகிறது. திரும்பத் திரும்ப மனதில் ஏற்படும் நல்லெண்ண அலைகள், சக்திமிக்கதாகி நன்மையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இவ்வாறே தவறான அல்லது தீய எண்ண அதிர்வுகள் பலப்படும்போது தீயவிளைவுகள் உண்டாகின்றன.

ஆலயங்களில் மந்திரங்களை உச்சரிக்கும்போது சுத்தமாக சரியான உச்சரிப்புடன் உச்சரிக்கவேண்டும் என்பது ஆகமவிதி. மந்திரங்களில் உயர்வான மந்திரங்களாகச் சொல்லப்படுபவை இவை நாமங்களேயாகும். திரும்பத் திரும்ப சரியான உச்சரிப்புடன் சொல்லப்படும்போது மந்திர அதிர்வுகள் பலமடைந்து மந்திரங்களுக்குரிய தெய்வங்களின் சாந்நித்தியம் பலமடைந்து அத்தெய்வங்களில் பக்தி பண்ணும் பக்தர்களுக்கான துன்பங்கள் நீங்கி அவர்கள் கோரிக்கைகள் நிறைவேறுவதை பலரும் அனுபவபூர்வமாக அறிவர். இவ்வாறே தமிழ்த்தாயும் தமிழர்களுக்கு ஒரு தெய்வமாகிறாள். இதனால்தான் தமிழர்களுக்கு சிறந்த அதிர்வுகளை ஏற்படுத்தும் தமிழ் எனும் பெயரை சரியாகக் கணித்தே எமது மொழிக்கு எம் முன்னோர்கள் சூட்டியுள்ளனர். மொழியைக் காக்கவேண்டுமானால் மொழியின் பெயரை முக்கியமாகக் காக்க வேண்டும். மொழியின் பெயர் சிதைந்து போனால் அதாவது தவறான உச்சரிப்பாகப் போனால் அம்மொழியும் அம்மொழி பேசும் மக்களும் கீழ் நிலையடைவர். தமிழர்களும் ஆங்கிலேயர் ஆட்சிவரை பல்லாயிரம் ஆண்டுகளாக தமிழ் என்னும் பெயருடன் சிறப்பாக வாழ்ந்து வந்துள்ளனர் என்பது வரலாற்று உண்மையாகும்.

### மனோசக்தி

மனோசக்திக்கு எல்லையே கிடையாது. இது மனோதத்துவ விஞ்ஞானிகளின் முடிந்த முடிவாகும். சூரியவெப்பத்தில் பகல் முழுக்க கிடக்கும் ஒரு பஞ்சு தானாக தீப்பற்றிக் கொள்ளாது. ஆனால் தகுந்ததொரு பூதக் கண்ணாடி கொண்டு சூரிய வெளிச்சத்தை பஞ்சின் ஒரு புள்ளியில் குவித்தால் சிறிது நேரத்தில் பஞ்சுதானாக தீப்பற்றிக்கொள்ளும். இதேபோல் மன ஒருமைப்பாட்டை விருத்தி செய்வதன்மூலம் எவரும் மனோசக்தியை பெருக்கிக்கொள்ள முடியும். மனோசக்தியை பெருக்கிக் கொள்பவர்கள் மற்றவர்களை மனோவசியம் செய்து தம் எண்ணப்படி நடக்கவைக்க முடியும். மேலும் மனோசக்தி நிரம்பப் பெற்றவர் பார்வையால் மின்குமிழை ஒளிரச்செய்யவும், இரும்புக் கம்பியை வளைக்கவும் முடியும் என்பது அண்மைக் காலத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. மறுதலையாக மனதின் எல்லையற்ற சக்தி புதிய புதிய எண்ணங்களாக வெளிப்பட்டுக்கொண்டிருக்கும். இந்த எண்ண அதிர்வுகள் ஒருபோதும் அழிவதில்லை என்பதுடன் வலிமையுடையவையாகவும் இருக்கும்.

ஒரேவிதமாக திரும்பத் திரும்ப அநேகரிடமிருந்து எழும் எண்ண அதிர்வுகள் காலகதியில் மிகவும் வலிமையடைகின்றன. பொதுவாக நாட்டின் பெயர், மொழியின் பெயர் போன்றவை மக்களின் அன்றாடப் பாவனையில் பல தடவை திரும்பத் திரும்ப எண்ணப்படுவதால் நாட்கள் செல்லச்செல்ல இவ்வதிர்வுகள் பலமடைந்து நல்ல எண்ண அதிர்வுகள் நல்ல பலன்களையும் தீய எண்ண அதிர்வுகள் தீயபலன்களையும் அதே மக்களுக்குக் கொடுக்கின்றன. அதாவது ஒரு நாட்டின் அல்லது மொழியின் பெயர் நல்ல அதிர்வைத் தருமாயின் அது அந்நாட்டின் மக்களுக்கு அல்லது அந்த மொழிபேசும் மக்களுக்கு நன்மையைத் தரும். இவ்வாறே தீய அதிர்வைத்தரும் மொழியின் பெயர் அல்லது நாட்டின் பெயர் அந்த மக்களுக்குத் தீமையைத்தரும்.

இன்று உலகம் முழுவதும் பெரும்பாலும் ஆங்கிலக் கலண்டரே பாவனையில் உள்ளதால் பெரும்பாலான மக்கள் அன்றாடப் பாவனையில் ஆங்கிலக் கலண்டரின் திகதியையே பாவிக்கிறார்கள். அதன்போது இன்று 2ஆம் திகதி அல்லது 3ஆம் திகதி அல்லது 4ஆம் திகதி என்று உலக மக்களில் பெரும்பாலானோர் எண்ணுவதுதான் அந்தந்த திகதிக்கான எண்கள். அந்தந்த நாட்களில் மிகவும் பலம்பெற காரணமாகின்றன. இதனால் அந்தந்த திகதிகளில் அந்தந்தத் திகதிக்குரிய அதிர்வுகள் பலம்பெறுவதால் அத்திகதிகளில் பிறக்கும் குழந்தைகள் அத்திகதிக்குரிய எண்களின் ஆதிக்கம் உடையதாகின்றன. இவ்வாறே 9 எண்கள் உலக மக்கள் எல்லோரையும் ஆட்சி செய்கின்றன.

இனி குழந்தைகளுக்கு பெயர் வைத்து அதை திரும்பத் திரும்ப கூப்பிடுதல், எழுதுதல் மூலம் பல தடவைகள் அந்தப் பெயரைப் பாவிப்பதால் அந்தப் பெயருக்கான அதிர்வுகள் பலம் பெறுகின்றன. பெயர்மூலம் நாம் உண்டாக்கும் அதிர்வுகள் பிறந்த திகதிக்கான அதிர்வுகளுடன் ஒத்துப் போகுமாயின் வாழ்க்கை அதிர்ஷ்டமாகும். இல்லாவிடில் வாழ்க்கை துன்பமாகும். இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டதே அதிர்ஷ்ட எண் விஞ்ஞானம் எனும் கலையாகும்.

இந்துவேத மந்திரங்களை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் மிகப் பழைய காலத்திலேயே ஒன்றிலிருந்து 108 வரையிலான ஒவ்வொரு எண்களுக்குமான பலன்களை சித்திரங்களாக தீட்டி பழைய கால முனிவர்கள் வைத்திருப்பதை வெளியிட்டுள்ளனர். உதாரணமாக 16 எண்ணுக்கான பலனாக சிங்காசனத்தில் இருக்கும் அரசனின் தலைமீது இடிவிழுந்து அரசன் கீழே விழுவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. Japan (11815)=16 இந்த நாட்டின்மீது இரு அணுகுண்டுகள் விழுந்து இரண்டாம் உலக யுத்தத்தில் Japan தோல்வியடைந்தது. அண்மையில் மீண்டும் Japan இல் அணுமின் நிலையங்கள் சுனாமியாலும் நிலநடுக்கத்தாலும் பாதிப்படைந்து தீய அணுக்கதிர்கள் அங்கு பரவியுள்ளன. வரலாற்றின் முக்கிய கதாபாத்திரங்களான இராமனுடைய வாழ்க்கையையும் இயேசுவினுடைய வாழ்க்கையையும் ஆராயும்போது 15ஆயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே மிகச் சிறப்பாக இருந்த தமிழ் இனம் கடந்த 2, 3 நூற்றாண்டுகளாக சீரழியத் தொடங்கியதற்கான காரணம் பளிச்செனத் தெரிகிறது.

தமிழ்மொழியின் உயிர் எழுத்துக்கள் 12, மெய்யெழுத்துக்கள் 18, உயிர்மெய் எழுத்துக்கள் 216, ஆயுத எழுத்து 1 ஆக மொத்தம் 247. இதை 2+4+7 எனக் கூட்டி 108 இற்குள் கொண்டுவர 13 ஆகிறது. தமிழ் என்ற தமிழ்ப் பெயரைவிட Tamil என்ற ஆங்கிலப் பெயரே பாவனையில் மிக அதிகமாக உள்ளது. Tamil(4+1+4+1+3=13)= 13 ஆங்கிலப் பெயரின் மூலம் 13ம் என்ற பாவ எண்ணே தமிழர்களை தற்சமயம் ஆள்கிறது. நிற்க, இதிகாச புருசனான இராமனை வடஇந்திய அயோத்திய மக்கள் இராமன் என்பதற்கான ஆங்கில பெயருக்குரிய உச்சரிப்பான Raman(2 +1+4+1+5=13)=13 என்றே அழைத்து வந்தார்கள். இதனால் பின்னாளில் இந்த மந்திரம் Ram, Ram என்றே உச்சரிக்கப்படலாயிற்று. Tam Tam என்று உச்சரிக்கப்படவில்லை.

Raman என்ற அதிர்வு பாவ எண்ணான 13 ஆதலால் காலம் செல்லச்செல்ல அது வலிமை பெற்று இராமன் முடி சூடவேண்டிய அன்று முடி துறந்து வனவாசம் செல்ல காட்டிற்கு மனைவியுடன் செல்ல வேண்டியதாயிற்று. காட்டிலும் சீதையை அரக்கன் கவர்ந்து சென்றான். பின்னாளில் திரும்பவும் சீதையையும் பிள்ளைகளையும் பிரிந்து வாழவேண்டியதாயிற்று. இச்சோதனைகள் Raman என்ற பெயரால் வந்த 13 எனும் பாவ எண்ணே ஏற்படுத்தியது.

இனி இயேசுவும் அவரது சீடர்களும் சேர்ந்து 13 எனும் எண்கொண்ட ஒரு குழுவினராக குறிப்பிடப்பட்டார்கள். இயேசு ஆரம்பத்தில் இருந்தே தனது முடிவை அறிந்திருந்தார். யூதாஸ் தன்னைக் காட்டிக்கொடுப்பான் என்பதை அறிந்திருந்தும் அவனையும் தன் கூட்டத்தில் சேர்த்துக்கொண்டார். அந்நாளில் யூதர்கள் இயேசுவையும் அவர்களது சீடர்களையும் 13 எனும் எண்ணாலேயே குறிப்பிடத் தொடங்கினார்கள். காலகதியில் 13 எனும் பாவ எண் வலிமைபெற யூதர்களால் இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார். 13ஆம் எண்ணின் தீமையினால் இது நடந்தது என்ற விடயம் உலகமெங்கும் பரவியது. அதனால்தான் உலகமெங்கும் உள்ள வெள்ளையர்கள் 13ஆம் எண்ணை துர்அதிர்ஷ்ட எண்ணாகக் கருதுகிறார்கள். அதனால் Hotel களில் ஆஸ்பத்திரிகளில், தொடர்மாடிகளில், 13 எனும் எண் இடம்பெறாமல் பார்த்துக் கொள்கிறார்கள். இதனால்தான் சந்திரனுக்கு அனுப்பப்பட்ட அப்பலோ 13 எனும் விண்கலம் வெற்றி பெறவில்லை என அவர்கள் நம்புகிறார்கள்.

ஆனானப்பட்ட இராமனையும் இயேசுவையும் பதம்பார்த்த அதே 13ஆம் எண் தமிழர்களாகிய எங்களை எப்போது, எப்படி பதம்பார்க்க ஆரம்பித்தது என்பதை இப்போது பார்ப்போம்.

தமிழ்நாட்டில் 15 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்கள் மிகச்சிறப்பாக வாழ்ந்துவந்தார்கள். 1000 ஆண்டுகளுக்கு முன் மொகலாயர்கள் இந்தியாவின் வடபகுதியின் மேல் படையெடுத்து பல பகுதிகளை கைப்பற்றி ஆண்டுவந்தார்கள். தென்னாட்டுக்கும் படையெடுத்த மொகலாயர்கள் தென்னகத்தை பூரணமாக கைப்பற்ற முடியாமல் திரும்பிப் போய்விட்டார்கள். பின்பு போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் என வந்தவர்களும் தமிழகத்தை கைப்பற்ற முடியாமல் போய்விட்டது. இறுதியாக ஆங்கிலேயர் வந்தார்கள்.

### தமிழர் தலையெழுத்து ஆங்கிலேயர் வருகையால் துர்அதிர்ஷ்ட 13 ஆகுதல்

இதுவரை வந்த எவராலும் இந்தியாவில் தமிழகத்தையும் இலங்கையில் வன்னித் தமிழ் அரசுகளையும் பிடிக்க முடியவில்லை. ஆனால் ஆங்கிலேயர்களுக்கு தமிழர்களை வெல்ல ஒரு அற்புதமான ஆயுதம் அவர்களுக்குத் தெரியாமலே அவர்களுக்குக் கிட்டியது. ஆம், அதுதான் தமிழர்களின் தலைவிதியாக அமைந்தது. Tamil என்ற பெயராக 13 என்ற பாவ எண்ணை ஆங்கிலேயர் தமிழர்களுக்குப் பாவிக்க ஆரம்பித்தபோது Tamil People, Tamil place, Tamil king, Tamil soldiers எனத் தமிழர்களை Tamil என அழைக்க ஆரம்பிக்க அவை பல நூறு பீரங்கி வெடிகளாக எமக்கு எதிரான பல துர்அதிர்ஷ்டங்களை ஏற்படுத்தின.

வீரபாண்டிய கட்டபொம்மனை எட்டப்பன் காட்டிக்கொடுத்தான். இவ்வகையில் வன்னியில் பண்டாரவன்னியனை காக்கை வன்னியன் காட்டிக்கொடுத்தான். சகல தமிழ் பிரதேசங்களும் ஆங்கிலேயர் வசமாகின. சரியாக இதே மாதிரித்தான் இராமனுக்கும் Raman என்ற 13ஆம் எண் துர்அதிர்ஷ்டத்தை ஏற்படுத்தியது. இராமனைப்பெற்ற கோசலையை விட சிறிய தாயாகிய கைகேயிக்குத்தான் இராமனிடம் அன்பு அதிகம். ஆனால் 13 எனும் துர்அதிர்ஷ்டம் இராமனைக் காட்டுக்கு அனுப்பியது. இவ்வாறே இயேசுவுக்கு மிக நெருக்கமாக இருந்த அவரது சீடர்களில் ஒருவனான் யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுத்தான். ஆனால் இயேசுவுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டதை அறிந்து நல்ல இரத்தத்தைக் காட்டிக்கொடுத்தேன் என்று தன்னைத்தானே நொந்து தற்கொலை செய்து கொண்டான். தமிழர்களது விரதங்கள், பூசைகள், யாகங்கள் ஒழுக்கங்கள் அனைத்தையும் அவற்றின் புண்ணியபலன்கள் அனைத்தையும் Tamil என்னும் 13ஆம் எண் அழிப்பது மாத்திரமல்ல மெல்ல மெல்ல எங்களை கீழ்நோக்கி அமிழ்த்தியும் வருகிறது.

### எமது சகோதர இனத்துக்கு ஆங்கிலேயர் வருகையால் ஏற்பட்ட அதிர்ஷ்டம்

எமது சகோதர இனமாகிய பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு ஐரோப்பிய மக்களால் வழங்கப்பட்ட பெயர் Sinhala = 19 1+9=10, 1+0=1 1ம் எண்ணே மற்ற எல்லா எண்களையும் அடக்கி அரசாளும் பலனை கொடுக்கிறது. இவற்றில் 19ஆம் எண் மிகவலிமையானது. காரணம் 19ஆம் எண்ணுக்குரிய படம் உதய சூரியன் ஆகும். நேரம் செல்லச்செல்ல வளர்ச்சியே ஒழிய தேய்வில்லை. தேவலோகத்து காதல் இளவரசன் என்று வர்ணிக்கப்பட்டுள்ள இந்த எண்ணில் சிங்கள மக்கள் இருப்பதால் தங்களைத் தாங்களே சுயமாக ஆண்டு சுகமாக வாழ்ந்துவருகிறார்கள். இந்தியாவில் பெரும் போராட்டங்கள் செய்துபெற்ற சுதந்திரத்தை இலங்கையில் சிங்கள மக்கள் பெரும் போராட்டங்கள் செய்யாமலே பெற்றுக் கொண்டார்கள். இலங்கையில் Sinhala என்ற 19ஆம் எண்ணே ஆங்கிலேயர்களை விரட்டி அடித்தது என்றால் அது மிகையாகாது.

மேற்படி விடயங்களை சரியாக விளங்கிக் கொள்ளாமல் மிக நீண்ட காலத்தை தமிழினம் வீணடித்துவிட்டது. இனிமேல் Tamil என்ற பெயரை அன்றாடப் பாவனைக்கு தமிழர்கள் எல்லோரும் விலக்கி Tha=த me=மி il=ழ் எனக் கொண்டு Thameil என்றே எல்லோரும் இணையத்தில், பத்திரிகைகளில், விளம்பரங்களில் நாம் எல்லோரும் பாவித்துவருவோமாக. முக்கியமாக ஒவ்வொருவரும் வீடுகளில் தினமும் 23 தடவைகள் Thameil என பெரிய Capital எழுத்துக்களில் எழுதிவர சகல தீயபலன்களும் தமிழ் மக்களைவிட்டு நீங்கி தமிழர்களாகிய நாம் அதிர்ஷ்டமாக, சமாதானமாக மற்றவர்களுக்கு ஆன்மீகம், நல்வாழ்க்கை என்பவற்றில் வழிகாட்டுபவர்களாக இருந்து இன்பமாக வாழ்வோமாக.

இனி சிலர் Thamil =18 என்று எழுத எத்தனிப்பார்கள். இந்தப் பதினெட்டு தமிழர்களுக்கு நன்மை பயக்காது.

### விவிலிய வேதமான பைபிளில் 13 எண்ணாக இருந்த சவுல் என்ற பெயரை பவுல் மாற்றியமை

இதற்கு விவிலிய வேதமான பைபிளுக்குள் போகவேண்டும். பைபிளின் இரண்டு இடத்தில் பெயர் மாற்றம் இறைவனால் செய்யப்பட்டுள்ளது. முதலாவது அபிராம் என்ற பெயரை மாற்றி ஆபிரகாம் என்ற பெயர் ஆபிரகாமுக்கு வைக்கப்பட்டது. ஆபிரகாமிலிருந்து 42 சந்ததிகள் கழித்து இயேசு வந்தார். அக்காலத்தில் இயேசுவை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று சவுல் என்பவன் இயேசுவை நம்புவர்களை சிறைப்பிடித்து துன்புறுத்திக் கொண்டிருந்தான். ஒரு முறை இவன் ஒரு பிரயாணத்தின் போது இறைவனால் இரண்டு கண்களும் பறிக்கப்பட்டான். அவன் பார்வை இன்றி துன்பப்பட்டான். அவனுக்கு இறைவன் மீண்டும் பார்வையளித்து, "இனி மற்றவர்களை துன்பப் படுத்தாதே இதுவரை உன் பெயர் Saul=13 என்றிருந்தது. இனிமேல் சவுல் அல்ல. உன் பெயர் பவுல் ஆகட்டும். நீ புனிதனாகி வெளியுலக மக்களுக்கு இயேசுவைப் பற்றிக் கூறுவதற்கு உன்னை நான் தெரிந்துகொண்டேன்". அவ்வாறே அவனும் சவுல் என்னும் 13ஆம் என்ற பாவ எண்ணிலிருந்து நீங்கி புனித பவுலாக மற்றவர்களால் அழைக்கப்படத் தொடங்கினான்.

Saint Paul=32 எனும் அதிர்ஷ்டமான எல்லோருடனும் இணக்கமாகவும், சமாதானமாகவும் வாழ வழிவகுத்தும் யூதர்கள் தவிர்ந்த ஏனையபிற சாதியினருக்கு இயேசுவைப் பற்றி அறிவித்து உலகில் ஒரு பெருந்தொகையினரான வெள்ளையர்கள் கிறிஸ்தவர்களாக மாறுவதற்கான அடித்தளத்தையும் சவுலை இடவைத்தது. இனி பைபிளின் வெளிப்பாடு எனும் கடைசி அத்தியாயத்தில் 666 எனும் எண்ணைக் குறிப்பிட்டு இந்த எண் மனித இலக்கமாக இருக்கிறது. புத்தியுள்ளவன் கணக்குப் பார்க்கக்கடவன் என்று கூறியிருக்கிறது. ஆம், மூன்று ஆசைகளான(பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை) 3 ஆறுகளையும் கூட்ட 18 எண் வருகிறது. இந்த 18 எனும் எண் பேரழிவுகளைக் கொடுக்கக் கூடிய ஆன்மீக வீழ்ச்சிக்குரிய எண்ணாகும்.

Berlin-இரண்டாம் உலக மகா யுத்தத்தை நடத்திய Hitlor இருந்த ஜேர்மனியின் தலைநகர்.

Kashmir =18

Vanni = 18

மகாபாரத யுத்தம் 18 நாட்கள் நடந்தது. இதில் 18 அக்குறோனி சேனைகள் கலந்துகொண்டன. இந்துக்களின் ஆன்மீக நூலாக பகவத்கீதை இருந்தபோதும் குரு சேத்திரம் எனும் யுத்தகளத்தில் அப்போது யுத்தத்தைத் தூண்ட 18ஆம் அத்தியாயங்கள் கொண்ட கீதை காரணமாயிற்று. பாரத யுத்தத்தில் பேரழிவு ஏற்பட்டது. தமிழர்களாகிய நாம் தலைநிமிர்ந்து, எமது பழைய நிலையை அடைந்து எல்லோருடனும் சமாதானமாகவும் இணைந்து வாழ எம் அன்றாட பாவனையில் இன்றுமுதல் Thameil என்ற சொல்லை எமது மொழி யின் பெயராக எழுதி எமது மொழியின் பெயரை தமிழில் எழுதி தமிழ் என உச்சரிக்கும்போது, எப்படி உச்சரிக்கிறோமோ அதே உச்சரிப்பை ஆங்கிலத்தில் THAMEIL என எழுதி உச்சரித்துவர தமிழரின் துர்அதிர்ஷடம் நீங்கி நாம் உயர்வுபெறுவோம் என்பது நிச்சயமான உண்மை என்பதை எதிர்கால அனுபவம் உணர்த்தும்.

(முற்றும்)

# பட்டணமா... பட்டிக்காடா!



வ. குணபாலசிங்கம்,
நல்லூர்.

இந்த முறை எனக்கு அதிர்ஷ்ட வசமாக பத்து நாள் விடுமுறை கிடைத்தது. "நாணுஓயாவில் இருந்து நீர் கொழும்புக்கு வந்த நான் என்னுடைய மனதில் நீண்டநாட்களாக பதிந்திருந்த ஆசையை... அம்மாவிடம் சொன்னேன். அவளின் புருவத்திலும்... குரலிலும் ஆச்சரியம்... விரிந்தது. யாழ்ப்பாணம்" அராலிக்குப் போறியா...?

ஆமாம்மா... அத்தை மாமாவைப் பார்த்து எத்தனை... வருஷமாச்சி...? நாளைக்கு கிளம்பிப் போகலாம்னு இருக்கேன்... தாராளமா போய்ட்டு வா... ஒரு நாளிலே திரும்பிடுவேயில்ல...? இல்லம்மா... ரெண்டு மூணு நாள் தங்கிட்டு வரலாம்னு இருக்கேன்.

சின்ன வயசிலே அங்கபோய் மாசக் கணக்கில தங்கியிருந்தீங்க... அதுவேற... இப்ப அந்தப் பட்டிக்காட்டுல உனக்குப் பொழுது போகுமா...? நகரத்தோட இரைச்சலில இருந்துவிடுபட்டு அமைதியா இருக்கணும்னுதாம்மா போறேன். அதுமட்டுமில்ல... அங்கபோனா சின்ன வயசு சந்தோஷத்தையெல்லாம் திரும்ப அனுபவிக்கிற மாதிரி இருக்கும்.

பள்ளிப் பருவத்தில்... வருடா வருடம் கோடை விடுமுறையில் நானும் தம்பி கார்த்திக்கும் அராலிக்கு சென்றுவிடுவோம். அம்மாதான் எங்களைக் கொண்டு போய்விடுவாள்... கூடவே மா.... அரிசி.... பருப்பு... எண்ணெய் போன்ற பொருட்கள் அத்துடன் பணமாய் சில நூறு ரூபாய் தாள்கள் இதெல்லாம் எதுக்கு அண்ணி? என் அத்தை மறுப்பதும் இருக்கட்டும் வைச்சிக்குங்க... என அம்மா கூறுவதும் வருடம் தவறாமல் நிகழும் உரையாடல். அப்பொழுது அத்தையின் குடும்பம் சராசரி வசதிக்கும் சற்று கீழானநிலையில் தான் இருந்தது. அதோடு யுத்தம்... ஒரே பையன் அரவிந்தன் அவனைப் படிப்பிக்க வைப்பதற்கே மாமாவும் அத்தையும் பட்ட சிரமங்கள் ஏராளம். அம்மாவுக்குத் தெரிந்து சிலசமயங்களும் தெரியாமல் பல சமயங்களும் அப்பா பணம் அனுப்பி வைத்ததை நான் அறிவேன்... அரவிந்தன் என்னைவிட ஐந்து வயசு மூத்தவன். விடுமுறையில் நாங்கள் அங்கு போய் விட்டால் அவனுக்கும் சந்தோஷம்தான்.

காலையிலேயே ஒற்றை மாட்டுவண்டியில் வயலுக்குக் கிளம்பிவிடுவோம். ஜல்... ஜல்... என சலங்கை ஒலிக்க... வண்டி செல்கையில் ரதத்தில் ஏறிப் போவது போல் எங்களுக்கு பெருமையாக இருக்கும். வயலையொட்டிய குளத்தில் தினமும் குளியல்... ஈர உடம்புடன் சுடுமணலில் படுத்து உருள்வது தனிசுகம்... விரிந்திருக்கும் தொட்டா சிணுங்கி கை விரல்பட்டதும் சுருங்கிப் போவது உலக மகா... அதிசயமாகத் தோன்றும். வயலில் கொடுக்காப் புளி... மா... கொய்யா மரங்களெல்லாம் உண்டு பிடுங்கி உப்பு மிளகாய்த்தூள் தொட்டுச் சாப்பிடுவோம்... வெயில் நேரத்தில் என்றால் நொங்கு அல்லது இளநீர்... மதியச் சாப்பாடு வயலுக்கே வந்துவிடும். தென்னம் ஓலையின் மேல் அமர்ந்து கொள்வோம். தலை வாழை விரித்து அத்தை பரிமாறுவாள். மாலை திரும்பவும் மாட்டுவண்டிப் பயணம். வெயில் தாழ்ந்ததும் பையன்களெல்லாம் கூடிவிடுவார்கள். கிட்டிப்புள்... கிளித்தட்டு... பம்பரம்... குதிரைத் தாண்டல்... கோலிக்குண்டு தெருவே அமளிப்படும்...

நான் சைக்கிள் ஓட கற்றுக்கொண்டது... அரைக்குடுக்கை கட்டி நீச்சல் பழகியது எல்லாம்... அங்கேதான். இரவு இதமான காற்று வீசும் வேப்பமரத்தடியில்.. கயிற்றுக் கட்டில் போட்டு உட்கார்ந்து கதை சொல்வார் மாமா... பௌர்ணமி தினங்களில் அத்தை நெய்ச்சோறு செய்து "கவளம்... கவளமாக உருட்டி தருவாள்" எத்தனை இனிமையான நாட்கள் அவை கோடி கோடியாய்க் கொடுத்தாலும் அதுபோன்ற தருணங்கள் திரும்ப வருமா? பழைய நினைவுகளின் அசைபோடலில் ஏற்படும் சந்தோஷத்தோடு திருப்தி பட்டுக்கொள்ள வேண்டியதுதான்... "செட்டியாமடம் கிளம்புவதை நினைக்கையில் மனசுக்கு இறக்கை முளைத்தாற் போலிருந்தது. அத்தைக்கு எள்ளுருண்டை என்றால் உயிர். அம்மா அதை மறக்காமல் செய்து கொடுத்தாள்..." அத்தையையும் மாமாவையும் ரொம்ப விசாரிச்சதாச் சொல்லு என்றார்... அப்பா... இரவு.. பஸ் காலை ஏழு மணிக்கே வந்து... சேர்ந்தது... இறங்கி அராலி பஸ்... பிடித்தேன்... இருபது... நிமிடங்களில் பஸ்... செட்டியாமடத்தில் தரித்தது... இறங்கிக் கொண்டேன்.

பதின்மூன்று வருட இடைவெளி ஆனாலும் கிராமத்தில் எவ்வித மாற்றமும் தெரியவில்லை. பஸ் நிறுத்தத்தில் அதே.. அரசமரம்.. ஆறுகால் மண்டபம்... பெரிய வரம்பு பாதையை நோக்கி நடந்தேன். நெஞ்சில் இனம்புரியாத சிலிர்ப்பு... இருபுறம் பச்சைப் போர்வையாய் நெல் வயல்கள். உயர்ந்து நிற்கும் தென்னை மரங்கள். வானத்தில் கொக்குகளும்... குருவிகளும்... வட்டமிட்டுக் கொண்டிருந்தன.. வயல் வேலைசெய்யும் பெண்களின் பேச்சும் சிரிப்பும் சப்தமும் காற்றில் மெலிதாய்.. மிதந்து வந்து வரவேற்றது.

அரவிந்த் க.பொ.த. உயர்தரத்திற்கு போனதுமே நாங்கள் இங்கு வருவது நின்றுபோனது. அவன் படிப்பில் மகா கெட்டிக்காரன். கனிம வேதியலில் 'டாக்டரேட்' வாங்கினான். நோர்வேயில் வேலை காத்திருந்தது. போய் சேர்ந்து ஆறு வருடமாகிறது. கைநிறைய சம்பளம்.... அங்கு சகல வசதிகளுடன் இருக்கிறானாம். அவ்வப் பொழுது அங்கிருந்து முகம்பார்த்து கதைப்பான். புளியடி.. தாண்டியதுமே... அத்தை வீடு கண்ணில் பட்டது. மறுவிநாடியே திடுமென்று யாரோ எனது காலை வாரிவிட்டாற் போலிருந்தது.

அத்தை வீடுதானா அது?

இயல்பிலேயே அழகான பெண்ணை "அலங்காரம் என்கிற அலங்கோலப் படுத்தியது போல நின்று... கொண்டிருந்தது. அந்த வீடு ஓடு களையப்பட்டு கொங்கிறீட் தளம் போடப்பட்டிருந்தது... திண்ணையையொட்டிய செம்மண்... பரப்பில் மணம்வீசும் ரோஜாக்களும்... நிழல்தரும் வேப்பமரமும் இருக்கும்... இப்பொழுது... இல்லை. அந்த இடம் சலவைக்கல் தரையாய் ஜொலித்தது.

டபுள் இரும்புக் கேற் புதிதாய் போட்டிருந்தது.... அதனைத் திறந்த சத்தம்கேட்டு... அத்தை வந்து... எட்டிப் பார்த்தாள். அடையாளம் முற்றிலுமாக மாறிப்போயிருந்தாள். எப்பொழுதையும் விட உடல்... பூசியிருந்தது... முகத்தில் பூரிப்பு கலந்த மினுமினுப்பு... தோற்றத்தில் புதுமெடுக்கு. வழக்கமாக நூல் புடைவைதான் உடுத்தியிருப்பாள். இப்பொழுது விலை உயர்ந்த வெளிநாட்டுப் புடைவை. காதிலும் மூக்கிலும் வைரம் ஜொலித்தது... கழுத்திலும் கைகளிலும் விதவிதமான நகைகள்...

என்னைக் கண்டதும் அத்தையின் முகத்தில்... ஆச்சரியம்... கலந்த ஆனந்தம். "வாடா... முரளி..." இப்பவாவது உனக்கு வழி... தெரிஞ்சதே" "நல்லாயிருக்கீங்களா... அத்தை?" எனக்கென்ன குறை. உள்ளே... வா... எல்லாமே... மாறுதல் சிமெண்ட்... தரைக்குப்பதில்... மாபிள்ஸ் சுவரையொட்டி வெல்வெட் சோபாக்கள். புதிய மொடல் டி.வி... சுவரில் அரவிந்தனின் பெரியளவு புகைப்படம். உட்காரு... முரளி ஊர்ல எல்லாரும் சௌக்கியமா?

சௌக்கியந்தான் அத்தை... உங்களை ரொம்ப கேட்டதா சொல்லச் சொன்னாங்க... ஆமா... மாமா... எங்கே? தெரிஞ்சவங்க வீட்டு சம்மந்தம் கலப்பு. கொடிகாமம் போயிருக்கார்... வர சாயந்திரமாகும்.. இரு குடிக்க... கொண்டு வர்றேன்... அத்தை உள்ளே சென்றுவிட... நான் பார்வையைச் சுழற்றினேன். ஹோலுக்கும் சமையற்கட்டுக்கும் இடையே மர ஊஞ்சல் இருக்கும். நாங்கள் மூவரும் அதில் அமர்ந்து மணிக்கணக்கில் ஆடிக்கொண்டிருப்போம். இப்பொழுது அங்கே பெரிய "ஷோகேஸ்" வீற்றிருந்தது. அதனுள் ஏதேதோ... அலங்காரப் பொருட்கள். அத்தனையும் வெளிநாட்டுத் தயாரிப்புக்கள்...

அத்தை டம்ளருடன் வந்தாள். இஞ்சியும் பெருங்காயமும் தட்டிப்போட்டு கருவேப்பிலை கிள்ளிப்போட்டு அவள்... கையால் தரும் நீர்மோர் தேவாமிர்தமாய் இனிக்கும்... ஆனால் இப்பொழுது அவள் தந்தது கறுப்பு... நிறத்தில்... ஏதோ குளிர்பானம். இனிப்பும்... துவர்ப்புமாய் சுவைத்தது... கோப்பி... டீ... எதுவும் கிடையாது" என்றாள் அமர்த்தலாக...

அம்மா கொடுத்தனுப்பிய எள்ளுருண்டை ஞாபகத்துக்கு வந்தது... ஆனால் அதை எடுத்துக்கொடுக்க இயலாமல் ஏதோ ஒன்று என்னைத் தடுத்தது. அத்தையின் தோற்றத்தில் தெரிந்த மாற்றமா... அங்கு நிலவிய பணக்காரத் தன்மையா... எது எனத்தெரியவில்லை... வீட்டைச் சுற்றிப் பார்க்கிறியா?... என்றாள் பணக்கார அத்தை... எழுந்தேன்.

வராண்டா இருந்த இடம் நீளமான படுக்கையறையாக மாறியிருந்தது. உள்ளே ஏ.சி.யின் ஜில்லிப்பு... அரவிந்தனுக்கு... நோர்வே பழகிப்போயிடுச்சு... நம்ம ஊர்... உஷ்ணம்... ஒத்துவராது அதுக்காக வாங்கிப் போட்டது. வருஷத்துக்கு ஒரு தடவைதான் வர்றான்.. இருந்தாலும் தேவைப்படுது. எங்களுக்கே இதில பழகிட்டு. வெறும்... பேன் காத்துல தூக்கம் வரமாட்டேங்குது. அரவிந்தன்... இனி எப்ப வருவான்...? ஒரு முறையென்றாலும் எங்கள் வீட்டுப் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை. டிசம்பர் மாதம் ஒரு மாதம் லீவ் கிடைக்குமாம்! இந்தத் தடவை வர்றப்ப அவன் கல்யாணத்தை முடிச்சிடலாம்னு இருக்கோம். ஆமா... உனக்கு எப்ப பண்றதா உத்தேசம்... அதுக்கு இன்னும்... ரெண்டு... மூணு... வருஷம் ஆகும். அத்தை தம்பி கார்த்தி என்ன இயர்? என்றாள்... அத்தை புதிதாக நிறைய ஆங்கில வார்த்தைகளை உபயோகிப்பது புரிந்தது. பைனல் இயர்! என்றேன்.

சமையலறையிலும் வெளிநாட்டு தாக்கம் தெரிந்தது. மிகப்பெரிய குளிர்சாதனப் பெட்டி, கரானைட் மேடை... அதில் மைக்ரோ ஒவன். ஆரம்பத்தில் இதில் சமைக்க கஷ்டமாதான் இருந்திச்சி. போகப் போகப் பழகிடுச்சி. இன்னும் சொல்லப் போனா இப்பல்லாம் ஒருநாள் கரண்ட் இல்லேன்னா கூட கஷ்டமாயிடுது.

அப்பொழுதெல்லாம் சாணம் மெழுகின மண்தரையில் மண் அடுப்பு வைத்துத்தான் அத்தை சமையல்செய்வாள். அம்மியில் சரக்கு ஆணம் அரைத்து அவள்வைக்கும் பூண்டு குழம்பிற்கு நிகர் வேறெதுவுமில்லை. மறுநாள் வரை உள்ளங்கை மணக்கும்.

பின்புறம் சென்றோம். அங்கேதான் பசுவும் கன்றுக்குட்டியும் சணல் ஆடுகளும் இருக்கும். ஆனால் மாட்டுக் கொட்டகையும் கிணறும் அதையொட்டி துணி துவைக்கும் கல்லும் இருந்த இடம் இப்பொழுது பளபளவென்ற தரையுடன் ஆஸ்பெஸ்டாஸ் கூரையாக மாறியிருந்தது... பாத்திரம் கழுவும் மெஷினும், துணி துவைக்கும் மெஷினும் இருந்தது.

வீட்டையே "கம்ப்ளீட்டா மாத்திட்டீங்க போலிருக்கு?"

இதெல்லாம் எதுக்குன்னு நானும் உங்க மாமாவும் சொல்லிப் பார்த்தோம். அரவிந்தன்தான் நாம வசதியில்லாம இருந்தப்ப இந்த ஊர்க்காரங்க நம்மை எவ்வளவு கேவலமாக பேசியிருப்பாங்க. பனை ஓலையை மாத்தியாச்சு. அவங்க கன்னத்தில் அறையற மாதிரி, இப்ப நம்ம வசதியைக் காட்டணும். பணத்தைப் பத்தி கவலையில்லன்னு சொல்லிட்டான். இல்லேன்னா இந்த பட்டிக்காட்டு ஊரிலே எதுக்கு லட்ச லட்சமா கொட்டறோம்... இன்னும் நிறைய வேலைகள் இருக்கு. மறுமுறை வரும்போது பாரேன்... அத்தையின் குரலில் இருந்த அங்கலாய்ப்பு கலந்த பெருமிதத்தை உணரமுடிந்தது.

எனக்குள் ஏதோ ஒன்று உடைந்து சிதறியது... நான் எதிர்பார்த்து வந்தது பழைய அத்தை வீடு. சாணம் மெழுகிய மண் நிழல் தரும் வேப்பமரம்... வைக்கோல் வாசம்வீசும் மாட்டுக் கொட்டகை... பனைமர ஊஞ்சல்.

மீண்டும் உள்ளே வந்தோம்...

கொஞ்சநேரம் படுத்து ரெஸ்ட் எடு முரளி... அதுக்குள்ள மதிய சமையலை முடிச்சிடறேன்...! எனக்கு பகலில் படுக்கும் பழக்கம் இல்லை... எனவே காலாற வயலுக்கு நடந்துபோய் வரலாம் என்றெண்ணி அத்தையிடம் சொன்னேன். வயலில் ஒண்ணும் இல்ல முரளி. இனி எதுக்கு விவசாயம் பார்க்கணும்னு மாமா தான் அதில ஏதோ... பெரிய பக்டரி இரண்டு கட்ட ஏற்பாடு பண்ணிக்கிட்டு இருக்காரு. நல்ல வருமானம் வருமாம்...

எனக்கு மனம் கனத்து வந்தது.... ஏதோ கனவுகலைந்த சோகம் இரண்டு... மூன்று நாட்கள் தங்கிப்போகும் ஆசையில் வந்திருந்த எனது எண்ணம் மாறிவிட்டது. மதிய சாப்பாடு முடிந்ததுமே கிளம்ப ஆயத்தமானேன்...

• இத்தனை வருஷங்கழிச்சி வந்திருக்கே வந்த கையோட கிளம்பறேங்கறியே. ரெண்டு நாளாவது இருந்துட்டுப் போகலாமில்ல...? என்றாள் அத்தை... உங்களை பார்க்கணும்னு... இருந்தது வந்தேன். பார்த்தேன்.. அவ்வளவுதான்... மாமா... வந்த பிறகாவது கிளம்பலாமே...

இப்பவே நேரம் ஐந்து மணியாகுது... எழு மணிக்கு பஸ் இருக்கு. மாமாகிட்டச் சொல்லிடுங்க. இன்னொரு தடவை சாவகாசமா வர்றேன்... எங்க... வரப் போறே...? வேலைக்குப் போனதுமே எங்களையெல்லாம் மறந்துட்டே...

மறந்திருந்தா இப்ப வந்திருப்பேனா அத்தை..? அதிகமா... லீவு கிடைக்கிறதில்ல.. அதான்.. உண்மையோ பொய்யோ... எல்லாரும் இதே பல்லவியைப் பாடுங்க... வாழ்க்கையிலேயும் அப்படித்தாண்டா.... முரளி மாறுதல்ங்கிறது ஒரு வழிப்பாதை... மாதிரி. நமக்குப் பிடிக்குமோ இல்லையோ... காலத்தோட கட்டாயத்தில அந்தப் பாதையிலே போகவேண்டிவரும். அதுக்குப் பிறகு... நாம விரும்பினாலும் அங்கயிருந்து பழையபடி திரும்பமுடியாது.

நாவின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு இதயத்திலிருந்து வெளிப்பட்ட அத்தையின் வார்த்தைகள் என்னை துளைத்தது... அவளின் முகத்தைப் பார்த்தேன்... அதில் மின்னிய புன்னகையைக் கடந்து வேறு ஏதோ... ஓர்... உணர்வும் பிரதிபலித்தது. என்ன அது...? சோகமா... ஏக்கமா... விரக்தியா...? இப்பொழுது... அத்தை.. என் கண்முன்னே... பழைய நூல் புடைவையில்... நிற்பது போலிருந்தது...

சட்டென்று எனது கை எள்ளுருண்டை இருக்கும்... பையை நோக்கிப் போனது....

ஊரோடி




# அமைச்சர் மேர்வினின் செயலாளர் கடத்தல்

## மர்மம் என்ன?

எப்பொழுதும் சர்ச்சைகளில் சிக்கிக் கொள்ளும் ஒரு அமைச்சரே மக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா. அவருடைய பேச்சு, செயற்பாடுகள் போன்றன அவருக்கே உரிய தனிக்கலை என்றே சொல்ல வேண்டும்.

சமுர்த்தி உத்தியோகஸ்தரை மரத்தில் கட்டியது முதல் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையைத் திருமணம் செய்துகொள்ளத் தயார் எனக் கூறியதுவரை அவரது சர்ச்சை தொடர்ந்துவந்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சிலசமயம் இவரது செயற்பாடுகளானது பெரும் தலையிடியாக இருந்துள்ளதை மறந்துவிட முடியாது. அதேபோன்று கட்சி அவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதுடன் களனி வலய அமைப்பாளர் பதவியும்கூட நீக்கப்பட்டது. ஆனால் அந்த பதவி அண்மையில் அவருக்கு மீண்டும் வழங்கப்பட்டது. ஆனாலும் அவரின் இவ்வாறான பல செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு அரசு ஏன் உரிய நடவடிக்கை எடுக்காது உள்ளது என்பது பலரது விடை காணப்படாத கேள்வியாகவே இருக்கின்றது.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் இவ்வாறான செயற்பாடுகளால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள சிலர் அவருடன் முரண்பட்டதும் உண்டு. குறிப்பாக களனி பிரதேச சபையின் தலைவர் உள்ளிட்ட சிலர் அவரால் தமது உயிருக்கே அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் ஜனாதிபதியே தமது பாதுகாப்பபை உறுதிப்படுத்தவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தனர். அந்தளவுக்கு அமைச்சர் மேர்வின் சில்வாவின் செயற்பாடுகள் இருந்துள்ளன.

மேர்வின் சில்வா இவ்வாறு அச்சமின்றி செயற்படுவதால் அவருடன் இருப்பவர்களும் அவ்வாறான செயற்பாடுகளில் இறங்குவதும் அல்லது அமைச்சரின் அவ்வாறான செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருப்பதும் யாவரும் அறிந்ததே. ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவங்களில் அதனை காணமுடிந்தது.

இப்படியான சந்தர்ப்பங்களில் இனந்தெரியாதோரால் மேர்வின் சில்வாவின் இணைப்பு செயலாளர்கள் மற்றும் அவருடன் இருக்கும் சிலருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு. அதுமாத்திரமல்லாமல் கொழும்பு மாநகர சபைக்கு முன்னால் உள்ள பிரபலமான ஆடையகமொன்றில் வைத்து மேர்வின் சில்வாவின் மகன் இனந்தெரியாத சிலரால் தாக்கப்பட்டதையும் யாவரும் அறிவர்.

மேர்வின் சில்வா இவ்வாறான சர்ச்சைக்குரிய விசயங்களில் தொடர்புபட்டிருந்தபோதும் அரசாங்கம் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதுள்ள போதும் இனந்தெரியாதோர் என்று சொல்லப்பட்டவர்களால் மேர்வினின் செயலாளர்கள் கடத்தப்படுவதும் எச்சரிக்கப்படுவதும் பல சந்தேகங்களை தோற்றுவித்துள்ளன.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் செயலாளர்களையோ அல்லது வேறு எவரையோ கடத்துதோ, தாக்குவதோ, மாறாக அச்சுறுத்தி எச்சரிப்பதோ சாதாரண ஒரு குழுவால் செய்ய முடியாது. எனவே அதற்குப் பின்னால் பலம்வாய்ந்த ஒரு பின்னணி இருக்க வேண்டும். அதுமாத்திரமல்லாமல் அதன்மூலம் ஏதாவதொன்றை அவர்கள் நிறைவேற்ற எதிர்பார்க்கிறார்கள் என்ற சந்தேகம் தோன்றுகின்றது.

மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வா கொழும்பு நகர மண்டபத்துக்கு முன்னால் உள்ள ஆடையகத்தில் வைத்து தாக்கப்பட்ட சம்பவத்தை வைத்துப் பார்த்தால் அந்த சந்தேகம் நன்றாக புரியும். அதாவது டிபெண்டர் ரக வாகனத்தில் வந்த சிலரே மாலக்க சில்வா மீது தாக்குதல் நடத்திவிட்டு சென்றனர். அந்தத் தாக்குதல் தொடர்பில் மேர்வின் ஆரம்பத்தில் சற்றுப்பேசினாலும் கூட பின்பு மௌனமாகினார் என்பது யாவரும் அறிந்ததே.

எனவே மேர்வின் சில்வாவின் ஆட்டத்தை அடக்குவதற்காக மறைமுகமாக இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. கடந்த 7ஆம் திகதியும்கூட மேர்வின் சில்வாவின் இணைப்புச் செயலாளர் ஒருவரும் அவரது தனிப்பட்ட பாதுகாவலரும் கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார்கள்.

மேர்வின் சில்வாவின் செயலாளர் கடத்தி எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டது முதலாவது தடவையல்ல. 2011 ஆம் ஆண்டு மேர்வினின் இணைப்புச் செயலாளரான அமல் ரொட்ரிக்கோ என்பவர் கடத்தப்பட்டு அச்சுறுத்தி எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார்.

அதாவது மேர்வின் சில்வாவுடனான தொடர்பினை கைவிடுமாறே அவரை எச்சரித்திருந்தனர்.

அதன்பின்னரே அமைச்சரின் மகன் மாலக்க சில்வா மீதான தாக்குதல் நடந்தது. இவ்வாறான நிலையிலேயே கடந்த 7ஆம் திகதி அதிகாலை அமைச்சரின் இணைப்புச் செயலாளரும் வர்த்தகருமான திலக்க சிறி என்பவரும் அவருடைய பாதுகாவலரும் கடத்தப்பட்டு பின்னர் அடுத்த நாள் விடுவிக்கப்பட்டிருந்தார்கள்.

மருதானை டி.ஆர்.விஜேவர்த்தன மாவத்தை பகுதியில் வைத்தே அவர்கள் கடத்தப்பட்டிருந்தார்கள். குறித்த இருவரும் கடத்தப்பட்ட விடயமானது அநேகமான ஊடகங்களில் செய்தியாக வெளிவந்தன.

அந்த சந்தர்ப்பத்தில் கடத்தப்பட்டது தனது இணைப்புச் செயலாளர் அல்ல என அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருந்தார். ஆனால் திலக்க சிறி என்பவர் மேர்வின் சில்வாவின் இணைப்புச் செயலாளர்தான் என்பதை பொலிஸார் உறுதிப்படுத்தி இருந்தனர். 2011ஆம் ஆண்டும் அவரின் செயலாளர் ஒருவர் கடத்தப்பட்டார். அப்போதும் மேர்வின் இதனையே கூறியிருந்தார்.

தன்னை கடத்தியவர்கள் கண், கை மற்றும் கால்களை கட்டி ஒரு வாகனத்தில் கொண்டு சென்றதாகவும் ஒரு வீட்டிற்குள் கொண்டு சென்று போதைப்பொருள் வர்த்தகம், மேலும் மேர்வின் பற்றி பல விடயங்களை விசாரித்ததுடன் தன்னையும் பாதுகாவலரையும் தாக்கி இனி மேர்வினுடனான தொடர்பை விடுமாறுகூறி கண்களை கட்டிய நிலையிலேயே ஓரிடத்தில் விட்டுவிட்டு சென்றதாக மருதானை பொலிஸில் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 29ஆம் திகதியே மேர்வின் சில்வாவின் மகனான மாலக்க சில்வா மற்றும் பிரத்தியேக செயலாளர் ஒருவரும் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்தார்கள். எனவே இவ்வாறு மேர்வினுடன் இருப்பவர்களை தாக்குவதும் எச்சரிக்கப்படுவதையும் பார்க்கின்ற போது மறைமுகமாக மேர்வினை வாயை மூடிக்கொண்டு இருக்குமாறு யாரோ சொல்ல வருவதைப் போலத்தான் இருக்கிறது.

மேர்வின் சில்வாவும் முன்னைய போல பெரிதாக வாலாட்டுதில்லை என்பதையும் அவதானிக்கமுடிகிறது. நம்பகமான தகவலொன்றின்படி ஐ.நா. ஆணையாளர் நாயகத்தை பற்றி அமைச்சர் கூறிய கருத்தையடுத்து அரசாங்கத்தின் உயர்பீடம் அவரை அழைத்துக் கடுமையாக எச்சரித்ததாகவும் சொல்லப்படுகிறது.

எப்படியோ அமைச்சர் மேர்வின் சில்வாவின் சில அத்துமீறிய செயற்பாடுகளானது இனியாவது குறையுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.


IDENTITY CARD

Name: K.G. Don Thilakasiri

Designation: Co-ordinating Secretary to the Hon. Minister

N.I.C. No.: 590050318 V

Holder's Signature

If found, please return to:

Ministry of Public Relations & Public Affairs
No. 296/7, Park Road, Colombo 05.
Sri Lanka.
Tel.: 011 2593897, Fax.: 011 2552594

Hon.Dr. Mervin Silva
Minister of Public Relations & Public Affairs

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான் முஸ்லிம்களுக்கு எதிரானவன் அல்ல. ஆனால் அவர்களது இந்த நடவடிக்கையினை பார்த்துக்கொண்டும் இருக்க முடியாது என்பது அனைவருடைய கருத்தாக இருந்தாலும் வன்முறைக்குள் சென்றுவிடாது இருக்கவே விரும்புகின்றன. இந்த இடத்தில்தான் மட்டக்களப்பில் இருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள். அதனை விடவும், ஆரையம்பதியைச் சேர்ந்த அரசியல்வாதி என்ன செய்கிறார். என்ற கேள்வி எல்லோருக்கும் எழுந்திருக்கிறது. இதனை எவ்வாறு அரசியல்வாதிகளும், பிரதேசத்தவர்களும் தீர்த்து வைக்கப் போகிறார்கள் என்பதே இப்போதைய கேள்வியாகவும் இருக்கிறது.

ஒட்டுமொத்தத்தில், ஜனாதிபதியுடன் கதைத்து அத்துமீறி காணியினை அடைத்துள்ளவர்களை வெளியேற்றுவதுடன் இந்து மயானத்துக்குரிய காணியினையும் மீட்டுத்தருவேன், என்று உறுதியளித்துள்ள அருண் தம்பிமுத்துவினால் முடியுமா, அல்லது ஆரையம்பதியிலுள்ள அரசியல்வாதியான இளைஞரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், முதலமைச்சரின் இணைப்பாளர்களில் ஒருவருமான பிரசாந்தன் என்ன செய்யப் போகிறார். தமிழ் பிரதியமைச்சர், முன்னாள் முதலமைச்சர் என்ன செய்வார், என்ற கேள்விகளே இப்போது இருக்கின்றன.

இப்பிரச்சினைக்கு தீர்வுகாண காணி ஆணையாளர், அரசாங்க அதிபர் மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் அடங்கிய விசேட குழு ஒன்று அமைக்கப்படுமா, இளைஞர்கள் ஆத்திரப்பட்டு ஏதாவது செய்யமுற்பட்டு விடுவார்களா என்றெல்லாம் தோன்றினாலும் தீர்வு என்னவாகும் என்பதே எதிர்பார்ப்பாக இருக்கிறது.

கிழக்கில் இருக்கும் விசித்திரமான காணிப்பிரச்சினைகளின் மற்றொரு வடிவமாகவே இந்த ஆரையம்பதி காணி விவகாரமும் இருக்கும் என்றே எண்ண வேண்டியநிலை ஏற்படுமா என்பது இந்த இடத்தில் கேள்வியாகவும் இருக்கிறது.



# புலன்களின் புகலிடம்



"நிகர் இல்லாதவை
எவை?"
காதலி கேட்டாள்.

காதலன்
விடை அடுக்கினான்

"பேராசைக்கு நிகரான
துன்பம் இல்லை!
பேராசைக்கு நிகரான
கொடுமை இல்லை!

பகைமைக்கு நிகரான
கலகம் இல்லை!
நட்புக்கு நிகரான
உறவும் இல்லை!

காதலுக்கு நிகரான
உணர்வும் இல்லை!
அன்புக்கு நிகரான
இன்பம் இல்லை!

காமத்துக்கு நிகரான
நெருப்பு இல்லை!
கோபத்துக்கு நிகரான
கெடுதி இல்லை!

நோய்க்கு நிகரான
எதிரி இல்லை!

வதந்திக்கு நிகரான
குழப்பம் இல்லை!

சாந்திக்கு நிகரான
தெளிவும் இல்லை!

காதலன் அடுக்கிக்
கொண்டே செல்ல
காதலி சிணுங்கினாள்.

"போதும் உங்கள்
விடைத் தொகுப்பு"
என்றாள் மோதும் பார்வையுடன்!

அவளைப் பற்றி
எதுவும் கூறவில்லை
என்ற பொறாமை!

புகழ்ச்சிக்கு
மயங்காத மனிதர் அரிது!
காதலர்களும்
புகழ்ச்சியின் அடிமைகள்!

முத்தம் மட்டுமல்ல
முகஸ்துதியும்
காதலில் இனிக்கும்!

காதலன்
சொல்லத் தொடங்கினான்!

"உன் விழிக்கு நிகரான
வேலும் இல்லை - வேறு
வாளும் இல்லை!

உன் மொழிக்கு நிகரான
இனிமை இல்லை!
உன் இதழுக்கு நிகரான
மென்மை இல்லை!

உன் முறுவலுக்கு நிகரான
வெள்ளை இல்லை!
உன் கழுத்துக்கு நிகரான
சங்கும் இல்லை!

உன் மார்புக்கு நிகரான
மொட்டும் இல்லை!

உன் இடைக்கு நிகரான
கொடியும் இல்லை!
உன் நடைக்கு நிகரான
அன்னம் இல்லை!

உன் அழகுப் படைக்கு நிகரான
படையும் இல்லை!

உன் அங்க எழிலுக்கு நிகரான
தங்கம் இல்லை!

உன் மூச்சுக்கு நிகரான
காற்றும் இல்லை!

உன் பேச்சுக்கு நிகரான
வேறு வார்த்தை இல்லை!

உன் மௌனத்தின் நிகரான
பேச்சு இல்லை!

உனக்கு நிகரான
உலகும் இல்லை!

உனக்கு நிகரான
ஒன்றும் இல்லை!

நீயின்றி நிகராக
எனக்கு ஏதுமில்லை!!!"

விருப்பம் இல்லாதது போல
செவியில் வாங்கினாள்.

இடையே தடுத்தாளில்லை
அவன் மூச்சுமுட்டும் வரை
கூறிமுடித்த பின்னர் தான்
"போதும் பொய்கள்!!"
என்றாள்.

அவன் உதடுகளை
தன் விரல்களால்
நோகாமல் பொத்தினாள்.

பொத்திய விரல்களை
மெல்லக் கடித்தான்
"அடடா இனிமை
அற்புத விரல்கள்!!"
என்றான்.

"இந்த விரலுக்கு நிகரான
கரும்பு இல்லை!"
என்றான் விரலை
கடித்தபடி...

"அது கரும்பு
இது அரும்பு
இரண்டையும் விரும்புது மனது!
பசிக்கு ஏற்ற அமுது!"
என்று அவன் கண்கள்
சென்ற இடத்திற்காக
பொய்யாக முறைத்தாள்.

"இந்த அமுதுக்கு நிகரான
அமுதும் இல்லை!
இந்த விருந்துக்கு நிகரான
விருந்தும் இல்லை!!"
என்றான் குறும்பாக.

கைகளால் வளைத்து
அவள் மேனியை
தன்னுடன் சாய்த்து
பொன்னுடல் மீதில்
புதையல் தேடினான்.

"உன் மேனிக்கு நிகரான
வீணை இல்லை!
உன் பொன்னுடலுக்கு நிகரான
புதிரும் இல்லை.

சிணுங்கினாள் வெட்கத்தில்
பொன்னுடல் சிவந்தது.

"கண்டதும் கவரும்
காரிகை நீ.

மொழி கேட்டதும் மயக்கும்
காரிகையும் நீ.

உண்டதும் கிறக்கும்
இதழும் உனதே!

முகர்ந்ததும் ஈர்க்கும்
வாசனை உனதே!

தொட்டதும் சிலிர்க்கும்
புதிரும் நீயே!

ஐம்புலன்களும்
உன்னிடம்
அடைக்கலமாகும்!

ஏழு உலகமும்
உன்னிடம் புகலிடம் தேடும்!

நிகரில்லா தேவதை
நீயில்லா நிம்மதி ஏது?

நிம்மதி தாராய்
நிம்மதி தாராய்!

முழுமதி முகத்தாளே
என் மதி கவர்ந்தாயே!

உன் மதி கொண்டு
உலகைக் காண்பேன்!
உன் உயிர் கொண்டு
உலகில் வாழ்வேன்!

ஐம்புலன் கவர்ந்த
அழகியே வாராய்!"

அணைத்தான், அணைத்தாள்
திரையைப் போட்டு விட்டு
திருவள்ளுவரிடம் செல்வோம்.

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும்
-ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள!!
அதிகாரம்:111 குறள்டு:1101

## சிந்தியா பதில்

**சிந்தியா! பொதுநலவாய நாடுகளுக்கு வரவுள்ள ஊடகவியலாளர்களின் பின்னணியெல்லாம் அலசி ஆராயப்படுமாமோ?**

**P.துவாரகன், வத்தளை.**

சனல் 4 தொலைக்காட்சி நிறுவத்தினர் இலங்கை அரசின் தூக்கத்தைக் கெடுத்தவர்கள் அல்லவா? ஆகையால் ஊடகவியலாளர்கள் விடயத்தில் விழிப்போடு இருக்கவேண்டுமென்று அரசு சிந்தித்தால் அது தவறு அல்ல. எது எப்படியாக இருந்தாலும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஊடகவியலாளர்களின் பாதுகாப்பும், சுதந்திரமும் எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதானே நமது வேண்டுகோள்.

**சிந்தியா! வட மாகாண சபையின் அசிங்கமான தொடக்கம் பற்றி உமது கருத்து என்ன?**

**த.கலையரசி, பூவரசங்குளம்.**

நீங்கள் தமிழ்த் தேசியத்துக்கு எதிராக கேள்வி கேட்கின்றீர்கள். கூட்டமைப்புக்குள் இருந்துகொண்டு எது செய்தாலும் அதை தன்மானத் தமிழர்கள் ஏற்றுக்கொள்வார்கள். அதை அசிங்கமாக நினைக்கமாட்டார்கள்.

**சிந்தியா! நான் ஒரு கனவு கண்டேன்; அடுத்த தேர்தலில் தமிழரசுக் கட்சி வீட்டுச் சின்னத்திலும், கூட்டமைப்பின் ஏனைய கட்சிகள் உதய சூரியனிலும் போட்டியிடுகின்றன. உமது கணிப்பில் முடிவு எப்படியிருக்கும்?**

**எம்.டினாத், மன்னார்.**

பாவம் ஆனந்தசங்கரி. ரோஷத்துக்காக தனது உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டுத் தோற்றுப்போவார். ஆனந்தசங்கரியின் நண்பர்களோ, அல்லது தற்போது கூட்டமைப்பில் இருந்துகொண்டு தமிழரசுக் கட்சி தனி முடிவு எடுக்கின்றது என்றும், கூட்டுக்கட்சி ஜனநாயகம் கூட்டமைப்பில் பின்பற்றப்படுவதில்லை என்றும் கூறுகின்றவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியேறப் போவதில்லை. வெளியேறி வெல்லப் போவதுமில்லை. இந்த அதிருப்திச் சகாக்களை எதிரிகளாக தேர்தலில் நிறுத்தி தமிழரசுக் கட்சியும் வெல்லப்போவதில்லை. கூட்டமைப்பை உடைத்துக்கொண்டால் இவர்களை தமிழ் மக்கள் குப்பையில் வீசிவிடுவார்கள் என்ற பயம் இவர்கள் அனைவருக்கும் உண்டு.

**சிந்தியா! பாகிஸ்தானில் புகுந்து பின்லேடனை அடித்தார்கள். சிரியாவில் புகுந்து அல்-லிபியைத் தூக்குகிறார்கள். இவையெல்லாம் இறைமை பற்றி பேசுபவர்களுக்குத் தெரிவதில்லையோ?**

**சௌ.கபிலா, பதுளை.**

தயவுசெய்து உங்கள் கேள்வியை தெளிவாகக் கேளுங்கள். நீங்களும் சுற்றி வளைத்துக் கேட்க, நானும் சுற்றிவளைத்து பதில் கூறினால் நாம் பேசுகின்ற விடயம் யாருக்குப்போய் சேர வேண்டுமோ அது நடைபெறாது.

**சிந்தியா! இலங்கைமீது சர்வதேச விசாரணை நடத்தும் நிலைமை உருவாகுமா?**

**ச.றுனித்தா, வலஸ்முல்ல.**

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எந்தவொரு தீர்வையும் வழங்காது என்று முள்ளிவாய்க்காலில் பதவி ஏற்றுக்கொண்ட சிவாஜிலிங்கம் கூறியிருக்கின்றாரே. இப்படிக் கூறுபவர் தீர்வைப் பெற்றுத்தர என்ன செய்யப் போகின்றார்? தீர்வு வராது. இடையில் மாறி மாறி வரும் பதவிகளை மட்டும் அனுபவித்துவிட்டுப் போவோம் என்று நினைக்கின்றாரா? என்றெல்லாம் கேட்பதை விட்டுவிட்டு என்ன கேள்வி கேட்கின்றீர்கள்.

**சிந்தியா! பருவ மழை காணாமல் பூமியெல்லாம் அழுகிறதே?**

**கே.றெனிஷா, பருத்தித்துறை.**

பருவ காலங்கள் மாற்றமடைந்து வருகின்றது. எது எப்போது வருகின்றதோ அதை அப்போது ஏற்றுக்கொள்வதுதான் இயற்கையுடனான மனிதனின் உடன்பாடு.



**சிந்தியா! தனுஷ் - ஐஸ்வர்யா பற்றிய உமது கருத்து ன்னன?**

**கு.காவியா, சுன்னாகம்.**

தனுஷின் குடும்ப விவகாரத்தைப் பற்றி ஏன் இவ்வளவு அக்கறை. அவரது குடும்பத்தில் கும்மியடித்துவிடக்கூடாது. அதுவும் தனிமனித உரிமை மீறல்தான்.

**சிந்தியா! இந்திய கிரிக்கெட் அணிக்கு யுவராஜ்ஜின் மீள்வருகை பிரமாதமாக இருக்கிறதே?**

**இ.பகீரதன், புலோலி.**

அப்படியா?


ஸ்ரீ ராம ஜெயம்

## மலையாள மாந்திரிக சக்தி



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக, குறிப்புகளுக்கு....

MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM
23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508



# காதிலை பூ

கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய்; பொய்யைத் தவிர வேறொன்றும் இல்லை."

**வ**ணக்கமுங்கோ. வடக்கில தமிழ் மக்கள் மெத்தச் சந்தோசமாக இருக்கினமாமுங்கோ. ஏன் எண்டு தெரியுமோ. மாகாண சபைத் தேர்தலில தமது சுவாமிகள் சொன்னமாதிரி வாக்களித்துப் போட்டம் எண்ட திருப்திதானாமுங்கோ.

தேர்தலில கூட்டமைப்புத்தான் வெற்றி பெறும் எண்டு நோர்வே தூதுவருடனான சந்திப்பின்போது ஆயர்கள் முடிந்த முடிவாக சொன்னதை பலபேர் தேர்தலுக்கு முன்னம் ஆயர்களின்ர கருத்து முடிவுகளில செல்வாக்குச் செலுத்தும் என்று கூறியிருந்திச்சினமுங்கோ.

அப்புடி கருத்துச் சொன்னவைக்கு ஒண்டு தெரியலலையுங்கோ. அதாகப்பட்டது ஆயர்கள் அரசியல் எதிர்வுகூறவில்லையுங்கோ. அவையே தேர்தல் பிரசாரங்களைச் செய்யினமெண்டது.

சில ஆயர்மார் தேர்தலில இன்ரெஸ்ட் காட்டிச் செயற்படுகினம் எண்டது எப்போது அம்பலமாகிச்சுது தெரியுமோ? செப்ரெம்பர் இருபத்து ஆறாம் திகதி நடைபெறவேண்டிய சாட்டித் திருவிழாவை தேர்தலுக்கு முன்னமே பதினைந்தாம் திகதி நடத்துவதென்று ஆயர் பெருமக்கள் முடிவு செய்திச்சினமே. அதுவும் அண்டைக்கு யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதிவருவதாக இருந்த நிகழ்ச்சி நிரலையும் பாதிக்கும் என்று திங் பண்ணிச்சினமே. அதுதானுங்கோ, திருப்பலிப் பூஜைகள் முடியும் போது தேர்தல் நேரத்தில அனேகமான சுவாமிமார் தேர்தலைப்பற்றியும் பேசியிருக்கினமுங்கோ. அதில பிரபலமான பிரசார வார்த்தை எது தெரியுமோ, "வீடு இருந்தால்தானே வெற்றிலை போடலாம், வெற்றிலை போட்டு துப்பலாம். வீடு இருந்தால்தான் வாழலாம்" என்பது தானுங்கோ. எப்புடி இருக்குது பாத்தியளோ, நம்ம தேவாலயப் பிரசாரங்கள்.

ஆயர்மார் அளவுக்கு இந்துமதக் குருக்கள்மார் அரசியலில இன்ரெஸ்ட் காட்டிறதில்லையே எண்டு கேட்டதுக்கு வாத்தி என்ன சொன்னார் தெரியுமோ. அவைக்கு வெளிநாட்டு நிதியோ, வேறு நிதியோ கிடைப்பதில்லையே. அவை பாவம் பொலிரிக்ஸ் பேசப்போய் துரோகி முத்திரை குத்திக்கொள்ள விரும்பவில்லையுங்கோ. அவை அப்ப தொடக்கம் இப்ப வரைக்கும் பூஜை புனஸ்காரங்களோடு இருந்துவிடுகினமுங்கோ.

உந்த ஆயர்களும் சில சுவாமிகளும், நாட்டுக்குள் நடமாடும் சில தொண்டு நிறுவனங்களும் டபுள் கேம் ஆடுகினமுங்கோ. இவை பொதுபல சேனாவை குற்றம் சொல்லினம்.

அதுதான் தேர்தலும் முடிஞ்சு அமைச்சுப் பொறுப்புக்களுக்காக முடிவுறாத பல கூட்டங்கள் நடந்து ஒரு தொங்கலுக்கும் வந்திட்டினமே. பதவிப்பிரமாணம் செய்து கொண்ட முதலமைச்சரும் ஒரு வாரமாக கொழும்பிலேயே தங்கியும் இருக்கிறாரே. இப்பிடித் தேர்தலில் நடந்ததைப் பற்றிப் பேசுவதால் என்ன பிரயோசனம் எண்டு வாத்தி கேக்கிறாருங்கோ.

இப்படி நடந்து நடந்திடுச்சு. அதைவிட்டுப் போட்டு நடக்கவேண்டியதைப் பாருங்கோ எண்டு இருந்து விடுவதாலைதானுங்கோ. பலபேர் வெள்ளைப் போர்வைக்குள்ளை ஒழிந்துகொண்டு கறுப்பு ஆடுகளாக விளையாடுகினமுங்கோ. மக்கள் எதையும் சடுதியில மறந்துபோயிடுவினம் எண்டதால தானுங்கோ காலத்துக்குக் காலம் ஒவ்வொரு கோஷங்களை தூக்கிக்கொண்டு மக்கள் முன்னால் வந்து பலபேர் பொலிரிக்ஸ் பண்ணிப் போட்டுப் போகினமுங்கோ.

சில விஷயங்களை சில காலத்துக்குப் பிறகும் சீர்தூக்கிப் பார்க்கவேணுமுங்கோ. அப்படிச் செய்யாததாலைதானுங்கோ தேர்தல் வரைக்கும் அண்ண, தம்பி எண்டு ஒற்றுமை பேசிப்போட்டு, பிறகு தேர்தல் முடிஞ்சதும் பதவிகளை பங்குபோடும்போது கோவணத்தை இறுக்கிக் கட்டிக்கொண்டு கோதாவில இறங்கினமுங்கோ.

பிறகு ஆயர்மார் சொல்லினம், ஆகக் கூடுதலாகப் படித்த இங்கிலிஸ் தெரிஞ்ச புத்திஜீவிகள் சொல்லினம் எண்டவுடன, தமிழ்த் தேசியம், ஒற்றுமை எண்டு கதை விட்டுக்கொண்டு எவ்வளவு அவமானம் வந்தாலும் வலிக்காத மாதிரியே ஊருக்குள்ள நடமாடுகினமுங்கோ.

வாய்கிழியப் பேசும் எந்த வீரப்பிரதாபங்களும் ஒரு மாசத்துக்குக்கூட நிண்டு பிடிக்காதவைதானுங்கோ. அது என்ன மாயமோ, என்ன நாசமறுப்போ எல்லாம் தமிழ்த் தேசியத்துக்கே வெளிச்சமுங்கோ.

அனந்தி சிஸ்டர் துப்பாக்கி மட்டும் தூக்கயில்லையுங்கோ. மத்தபடிக்கு எல்லா முயற்சியும்செய்து பார்த்திட்டா. ஆனால் உந்தக் கல்லுளி மங்கன்கள் கடைசிவரைக்கும் அமைச்சுப் பொறுப்பைக் கொடுக்கவே இல்லையுங்கோ. பாவம் சிஸ்டர் ரொம்பக் கடுப்பில இருக்கிறாவாமுங்கோ.

எழிலனின் மனைவி எண்டும், பாதிக்கப்பட்ட பெண் எண்ட செண்டிமெண்டும் சனங்களிட்டை எடுபட்டது. உந்த கூட்டமைப்புக் காரங்களிட்டை எடுபடவில்லையே எண்டும், தனக்கு அமைச்சுப் பொறுப்பு கிடைக்கவே கூடாது எண்டதில தன்ர பத்திரிகையைக் காட்டி கூட்டமைப்பை மிரட்டிய 'சரா' மேலையும் சிஸ்டர் ரொம்பக் கடுப்பாக இருக்காவாமுங்கோ. வரட்டும் பாராளுமன்றத் தேர்தல். சராவுக்கு ஒரு பாடம் படிப்பிக்கிறன் எண்டு சிஸ்டர் கருவிக் கொண்டு இருக்கிறாவாமுங்கோ.

# இலக்கிய இராட்சசன்



**த**லையை நிமிராமலே இடக்கையை நீட்டி, வந்தவரின் கையைப் பற்றிக் குலுக்குவார். அவ்வளவுதான். வலக்கை இயந்திரம்போல பேப்பரில் வரிந்து தள்ளிக்கொண்டிருக்கும்.

வந்தவர் பொறுமைசாலியாகவும் வேறு வேலையில்லாதவராகவும் இருந்தால் - மௌனமாக உட்கார்ந்திருப்பார். இல்லாவிட்டால் எழுந்து போய்விடுவார்.

எழுத்து என்றதும் இவரிடமிருந்த ஒரு விசேஷமான குணத்தைப் பற்றிச் சொல்லாமலிருக்க முடியவில்லை. இவர் சிறுகதை மன்னர், நாவல் சக்கரவர்த்தி, நாடக விற்பன்னர், கட்டுரை, கவிதை புனைவதிலோ புலி, சகலகலாவல்லவரான இவர், தான் எழுதும் ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொருவிதமான காகிதமும் பேனாவும் உபயோகிப்பார்.

நாவலா? நீல நிறத்தாளிலே அதற்கென்று உள்ள இறகு பேனாக்களினால்தான் எழுதுவார். கவிதையா? மஞ்சள் நிறக் கடதாசியிலே கவிதைப் பேனாவினால்தான் எழுதுவார். பத்திரிகைக்குக் கட்டுரையா? ரோஜா வர்ணத்தாளைத் தவிர வேறு எதிலும் எழுதமாட்டார். நீல நிற 'மை' யை மட்டும் எதற்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் உபயோகிக்கவேமாட்டார். காரணம், நீல நிற 'மை' அவருக்குக் குழப்பத்தை உண்டாக்குமாம். நாடகம் எழுதும்போது மேசை முன்னால் உட்கார்ந்து எழுதமாட்டார். முழங்கைகளுக்குக் கீழே மிருதுவான தலையணைகளை வைத்துக்கொண்டு சோபாவில் நீட்டிப் படுத்துக் கொண்டபடியேதான் நாடகத்தை உருவாக்குவார்.

'சுத்தப் பைத்தியக்காரத்தனம்' என்று தோன்றுகிறதல்லவா? அவருடைய இந்த பைத்தியக்காரத்தனமான கொள்கைகளையும் செய்கைகளையும் நம்பிக்கையையும் பார்த்து நீங்கள் சிரிக்குமுன், அவர் இப்படி உருவாக்கிய சிருஷ்டிகளின் எண்ணிக்கையைச் சொல்லிவிடுகிறேன். அதன்பிறகு சிரிப்புவருமானால், சிரிக்க முடியுமானால் - சிரியுங்கள். இவர் எழுதிய நாடகங்கள் மாத்திரம் நூறு. நவீனங்களும், சரித்திரச் சூழ்நிலையில் உருவான நாவல்களும் சிறுகதைகளும் - அடுக்கிக்கொண்டே போவானேன்?

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(17.10.2013 தொடக்கம் 23.10.2013 வரை)

## மேடம்

புதிய நண்பர்களின் சேர்க்கையால் மனமகிழ்ச்சி உண்டாகும். பங்குத்தொழிலில் ஓரளவு முன்னேற்றம் காணுவீர்கள். காதல் விசயத்தில் நல்ல தகவல்கள் வந்துசேரும். மஹான்களின் எதிர்பாராத தரிசனங்களால் மனம் நிம்மதி அடைவீர்கள். குலதெய்வ வழிபாடு செய்துவருவதற்கான முயற்சிகள் தடையின்றி நிறைவேறும். பிறர் நடத்திக்கொண்டிருக்கும் தொழில் ஸ்தாபனங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் நண்பர்களின் ஆதரவுகள்மூலம் நிறைவேறும். உடல்நிலையில் கண், காதுகளில் கவனமுடன் இருக்கவும். நீண்டகாலமாக வராத கடன்கொடுத்த பணம் திரும்பிக் கைவந்து சேரும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்வதில் சற்று பின்னடைவுகள் வந்துசேரும்.

## துலாம்

தனப்புழக்கம் நன்றாக இருக்கும். காதல் சம்பந்தமான விசயங்களில் சற்று எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும். நீண்டகாலமாக வங்கிகளில் இருந்து எதிர்பார்த்த பணம் கிடைக்கும். கண் மற்றும் காதுகளில் கவனம் தேவை. புதிய ஆடை அணிகலன்களை வாங்குவதற்கு முயற்சிப்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவிகளும் மற்றும் நற்பெயர் புகழும் உண்டாகும் காலமாகும். பிள்ளைகளுக்கு இதுவரையில் தடைப்பட்டுவந்த திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிறைவேறும். நண்பர்களால் சிற்சில பிரச்சினைகள் வந்துவிலகும். புதிய கடன்வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். உத்தியோகம் பார்ப்பவர்கள் மேலதிகாரிகளிடம் முன்கோபத்தை தவிர்த்து மிகவும் எச்சரிக்கையுடன் பணியாற்றுதல் நல்லது.

## இடபம்

பொருளாதாரத்தில் இன்னும் சில நெருக்கடிகள் உண்டாகும். உடம்பில் வாயு மற்றும் வயிறு சம்பந்தமான உபாதைகள் வந்து நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பணப்புழக்கம் நன்றாக இருக்கும். பிள்ளைகளின் உடல் நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு பொருட்செலவுகள் உண்டு. காதல் சம்பந்தமான பெண்கள் விசயத்தில் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவும். காணாமற்போன பொருட்கள் திரும்பக் கிடைக்கக்கூடிய காலமாகும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்வதற்கான முயற்சிகளைச் சிறிதுகாலம் தள்ளிப் போடுதல் நல்லது. கொடுக்கல், வாங்கலில் நாணயம் காப்பாற்ற இயலாதநிலை இருப்பதால் புதிய கடன்வாங்குவதைத் தவிர்க்கவும்.

## விருச்சிகம்

உறவினர்கள் மற்றும் நண்பர்களின் திடீர் வரவுகளால் பொருட் செலவுகள் வந்து சேரும். நண்பர்களிடம் காரணமற்ற மனக்கசப்புகள் ஏற்பட்டு பிரச்சினைகள் உருவாகலாம். உத்தியோகம் செய்பவர்களுக்கு இடையூறுகள் வந்துபோகும். வெளிநாட்டில் இருப்பவர்கள் தாய்நாடு சென்றுவருவீர்கள். திரவ சம்பந்தமான பொருட்களை விற்பனை செய்வோர்கள், பூஜை பொருள் வியாபாரிகள், நீர்வளத் துறை சார்ந்தவர்கள், படம் மற்றும் கண்ணாடி போன்ற பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்வோர்கள், மருத்துவத் துறைகளை சார்ந்தவர்கள் ஆகியோர்கள் நற்பலன் அடைவார்கள். வெகுகாலமாக வராத கடன்கொடுத்து இருந்த பணம் கை வந்துசேருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. பொதுவாக இது ஒரு நற்பலன் தராத வாரமாகும்.

## மிதுனம்

பெண்களால் தூரத்தில் நற்செய்திகளைக் கேட்பீர்கள். மூத்த சகோதரர்களால் குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகளைச் சந்தித்து மனநிம்மதி குறையலாம். பூமி, நிலம் வாங்குதல் போன்ற நீண்டகால முயற்சிகளில் தற்போது வெற்றி அடைவீர்கள். கார், லொறி போன்ற வாகனத் தொழில்கள் செய்வோர்கள், ஆடம்பர அலங்காரப் பொருட்கள், பொருள்களின் வியாபாரிகள், நறுமணப் பொருள் வியாபாரிகள், சிற்றுண்டி வியாபாரிகள் ஆகிய இவர்களுக்கு நற்பலன் உண்டாகும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் பொருள் இழப்பும், வீண் பிரச்சினைகளும் ஏற்படும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## தனுசு

திருமணம் ஆகாதவர்களுக்கு மணம் ஆகும் காலமாகும். வெளிநாடு சென்று வருதல் போன்ற புதிய முயற்சிகளில் மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். வராத கடன் கொடுத்து உள்ள பணம் திரும்பக் கை வந்துசேரும். இரசாயனம், அணு ஆராய்ச்சி போன்ற துறை சார்ந்தவர்கள், பழைய பொருட்கள், மீன், முட்டை, மாமிசம் போன்ற உணவுப் பொருட்களின் வியாபாரிகள் ஆகியோர்கள் நல்ல இலாபம் பெறவாய்ப்பு உள்ளது. ஒரு சிலருக்கு சொத்துக்களை விற்பதில் பணம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் குறைந்து மனஅமைதி ஏற்படும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரக்கூடிய வாரமாகும்.

## கடகம்

ஆலய வழிபாடுகளால் மனநிம்மதி அடைவீர்கள். செய்தொழிலில் புதிய பிரச்சினைகள் ஏற்பட்டு சமாளித்துக்கொள்ளுவீர்கள். பிறருக்காக ஜாமீன் போடுவதால் வீண் பிரச்சனைக்கு ஆளாக நேரிடும். உடல்நிலையில் வாய், பற்கள், முகம் சம்பந்தமாகிய உபாதைகள் வந்து போகும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களை கடன்கொடுப்பதை தவிர்த்தல் நல்லதாகும். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். தந்தை - மகன் உறவுகள் சுமாராகக் காணப்படும். பக்கத்து வீடுகளில் பக்குவமாகப் பேசிப் பழகுவதால் பிரச்சினைகள் குறையும்.

## மகரம்

உத்தியோகத் துறையினர்களுக்கு பதவி உயர்வுகளுடன் கூடிய பணி இடமாற்றம் ஏற்படக்கூடும். தீராத பிரச்சினைகளுக்கு பெரிய மனிதர்கள் உதவியால் தீர்வுகள் கிடைக்கும். முன்கோபம் தவிர்த்தல் உகந்ததாகும். எதிர்பாராத விருந்தினர்கள் வரவால் சில ஆதாயங்களை அடையலாம். குலதெய்வ வழிபாடு செய்துவருவது நல்லது. தாய், தந்தையர்கள் உறவுகளில் வந்துள்ள பிரச்சினைகள் தீரும். வெளிநாடு செல்வதற்கான முயற்சிகளில் நல்ல தகவல்கள் வந்துசேரும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்ய முயற்சிகள் செய்வீர்கள். தென்திசையில் இருந்து பெண்களால் ஆதாயம் உண்டாகும். உறவினர்களின் எதிர்பாராத வரவுகளால் பொருட்செலவுகள் வந்துசேரும்.

## சிங்கம்

காரணமற்ற சிறிய விசயங்களுக்காக குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகள் வந்து விலகும். வராத கடன்கொடுத்து இருந்த பணம் திரும்பக் கைக்கு வந்துசேரும் காலமாகும். ஆடம்பர அலங்காரப் பொருட்கள், கட்டில் மெத்தை போன்ற பொருட்கள், இரசாயனம், கமிசன் தரகுத் தொழில் செய்வோர்கள், மரம், காய்கறிகள் வியாபாரிகள், தபால்தந்தித் துறையினர்கள், பத்திரிகை துறை சார்ந்தவர்கள் ஆகியோர்கள் இலாபம் அடைவார்கள். குடும்பத்தில் இதுநாள் வரையில் தடைப்பட்டுவந்த திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## கும்பம்

தந்தை, மகன் உறவில் பிரச்சினைகள் வரவாய்ப்பு உள்ளதால் கவனமுடன் இருக்கவும். உடம்பில் முதுகு மற்றும் கால்களில் நோய்கள் வந்துவிலகும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகவும் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது. நண்பர்கள் மற்றும் உரவுகளின் மூலமாக எதிர்பாராத பொருட்செலவுகள் வரக்கூடும். வீடுகளில் கவனமுடன் இருந்தால் திருட்டுப்போவதை தடுக்கலாம். செய்தொழிலில் இருந்துவந்த பிரச்சினைகளில் மேலும் சற்றுப் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக வெளியூர் பிரயாணங்களை மேற்கொள்ள நேரிடும். மீன், முட்டை, மாமிசம் போன்ற உணவுப் பொருட்களின் வியாபாரிகள் நற்பலன்களை அடைவார்கள்.

## கன்னி

வெகுகாலமாக மறைமுகமாக இருந்து வந்துள்ள எதிரிகளின் தொல்லைகள் தீரும். வராத கடன்கொடுத்து இருந்த பணம் திரும்பக்கிடைக்க வாய்ப்பு உள்ளது. செய்தொழிலில் பங்காளிகளுடன் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவும். காதல் விசயங்களில் வெற்றி தேடித்தரக் கூடிய காலமாகும். இரும்பு இயந்திரம், இரசாயன சம்பந்தமான தொழில்கள், எண்ணெய் வியாபாரம் செய்வோர்கள், பலசரக்கு தொழில் வியாபாரம் செய்வோர்கள், பழைய இரும்புப் பொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்வோர்கள் ஆகியோர்கள் நல்ல இலாபம் அடைவார்கள். இதுநாள் வரையில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் தீர்ந்து கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும்.

## மீனம்

எழுத்துப்பணி செய்வோர்கள், வங்கிப் பணியாளார்கள், காய்கறிகள், இலை கீரை போன்ற உணவுப் பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்யும் வியாபாரிகள், தபால்தந்தித் துறையை சார்ந்தவர்கள், அச்சுத் தொழில் செய்வோர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர்கள் நல்ல இலாபம் அடைவார்கள். நண்பர்களால் வீண் பொருட்செலவுகளும் மனநிம்மதிக் குறைவும் ஏற்படலாம். திருமணம் போன்ற சுபகாரிய விசயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவும். பிள்ளைகளால் எதிர்பாராத தனவரவுகள் உண்டாகுவதோடு அவர்களால் பொருட்செலவும் உண்டாகும். உத்தியோகத் துறையினர்களுக்குப் பணி இடமாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. வேலையில்லாத படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் தேடிவரும் காலமாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)



## மரண கைக்கடிகாரம்

ஒருவர் எப்போது மரணமடைவார் என்பதை அவர் மரணமடையும் நேரத்திற்கு நெருங்கிய செக்கன்வரை எதிர்வு கூறக்கூடிய கைக்கடிகாரமொன்றை சுவீடன் நாட்டு கண்டுபிடிப்பாளர் ஒருவர் உருவாக்கியுள்ளார். பிரெடிக் கொல்டிங் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த கைக்கடிகாரம் 'மரண கைக்கடிகாரம்' என அழைக்கப்படுகின்றது.

இந்தக் கைக்கடிகாரம் மரணமடையப் போகும் நேரத்தை கணித்துக்கூறுவது மட்டுமல்லாது மரணமாகும் கணத்தை எண்ணவும் ஆரம்பிக்கிறது.

மேற்படி கைக்கடிகாரம் அதனை அணிந்துள்ளவரின் வயது, மருத்துவப் பிரச்சினைகள் மற்றும் புகைப்பிடித்தல் பழக்கங்கள் என்பன தொடர்பான ஒரு தொகை கேள்விகளை உள்ளடக்கியுள்ளது. அந்தக் கேள்விகள் அனைத்துக்கும் பயன்பாட்டாளர் பதிலளித்ததும் அது அத்தகவல்களை பகுப்பாய்வுசெய்து அவர் மரணமடையும் தருணத்தை கணக்கிட்டு எண்ண ஆரம்பிக்கிறது.

இந்த ரிக்கர் கைக்கடிகாரத்தின் விலை 59 அமெரிக்க டொலராகும். இந்த கைக்கடிகாரமானது எஞ்சியுள்ள வாழ்வின் அளவை அறிந்து அதனை பயனுள்ளதாக வாழ பயன்பாட்டாளர்களுக்கு உதவும் என பிரெடிக் கூறுகிறார்.

## சுத்திகரிப்பு மீன்கள்

கடலுக்கு முத்துக்குளிக்க போவதுண்டு என்று கேள்விப்பட்டிருப்போம். ஆனால் இங்கே பற்களைச் சுத்தம் செய்ய ஆழ்கடலுக்குச் செல்கிறார்களாம். குறிப்பிட்ட தொகைப் பணத்தைச் செலுத்தித்தான் ஆழ்கடலுக்குச் சொல்லவேண்டுமாம். பற்களைச் சுத்தம் செய்ய ஆர்வம் காட்டி வருகின்றார்களாம் மக்கள்.

அங்கே கடலில் SHRIMP என்ற வகை மீன்கள் மனிதர்களின் பற்களை சுத்தம் செய்யுமாம். அவ்வாறு சுத்தம் செய்யும் புகைப்படத்தையே நீங்கள் காண்கிறீர்கள்.







## விழிகளால் ஓவியம்...

தூரிகையால் ஓவியம் வரையலாம். விரல்களால் கைகளால் ஏன் கால்களால்கூட வரைந்துவிடலாம். ஆனால் கண்களால் ஒருவர் ஓவியம் வரைகிறார் என்றால் நம்பமுடிகிறதா உங்களால்? அதெப்படி சாத்தியம் என கேட்கத்தோன்றுகிறது அல்லவா. கண்களால் பால்சொரியும் முறையைத்தான் இவரும் பின்பற்றுகிறார். ஆனால் இவர் கண்களில் பால் சுரக்கவில்லை வர்ணங்கள் சுரக்கிறது. ஆம், இது ஒன்றும் சாதாரண விடயம் அல்ல. அதனால் இவர்கள் அசாதாரணமானவர்கள் எனச் சொல்ல முடியும். இது எப்படி சாத்தியம்? மூக்கின்மூலம் வர்ண சாயத்தை உறிஞ்சி அதனை கண்கள் வழியாக பீய்ச்சியடித்து ஓவியமாக படைக்கிறார் இந்த கலைஞர். இவ்வாறான திறமை எல்லோராலும் முடியாத ஒன்று. அதைவிட ஆபத்தானதும்கூட. ஆனால் சாதாரணமாக தமது கண்கள்மூலம் ஆப்த்தான அந்த காரியத்தை செய்து அழகான வண்ண ஓவியம் ஒன்றை தரும் கலைஞனின் திறமையை கண்கள் நம்பத்தான் மறுக்கிறது.



## செல்லப்பிராணி

பிரேசிலிய குடும்பம் ஒன்று தமது வீட்டில் புலிகளை பிள்ளைகளாக வளர்த்து ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளார்கள். பொதுவாக புலிகளிடம் மனிதர்கள் நெருங்கிப்பழகுவதை ஆபத்தான விடயமாக கருதுகிறார்கள். ஆனால், இவர்களோ ஒன்றல்ல இரண்டல்ல மொத்தம் 6 புலிகளை தமது செல்லப்பிராணியாக பிள்ளையாக வளர்த்து பராமரித்து வருகிறார்கள். புலிகளுடன் சேர்ந்து உணவருந்துதல் நீச்சல் அடித்தல் உறங்குதல் என தமது அன்றாட வேலைகளை பிள்ளையுடன் சேர்ந்து பணியாற்றுவது போன்று பாசமாக வளர்த்துவருகிறார்கள்.

---

5 வயதே நிரம்பிய சீனாவைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் உலகின் மிக இளம் வயதில் விமான ஓட்டுநராக (pilot) விமானத்தைச் செலுத்தி கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளான். டுவோடுவோ என்று செல்லப் பெயரால் அழைக்கப்படும் ஹேயிடே எனும் இச்சிறுவன் ஆகஸ்ட் 31ஆம் திகதி பீஜிங் உயிரியல் பூங்காவிற்கு மேலாக அல்ட்ராலைட் விமானம் ஒன்றை 35 நிமிடம் ஓட்டி கின்னஸ் சாதனை புரிந்ததாக செவ்வாய்க்கிழமை சீன மீடியா அறிவித்துள்ளது. டுவோடுவோ விமானம் ஓட்டுவதைக் கற்றுக்கொண்ட ஏவியேஷன் கிளப்பின் இயக்குனரான ஷாங்க் யொங்குயி இது பற்றிக் கூறுகையில், இச்சிறுவன் 30 Km தூரத்துக்கு விமானத்தை ஓட்டியிருந்ததாகக் கூறியுள்ளார்.

மேலும் குளோபல் டைம்ஸ் பத்திரிகைக்கு இச்சிறுவனின் தந்தையான ஹே லியெஷெங் பேட்டியளிக்கையில், தனது மகன் வருங்காலத்தில் மிக வீரமும் திறமையும்மிக்க பைலட்டாக வர விரும்புவதாகவும் கூறியுள்ளார்.



## கின்னஸ் சாதனை





## சாதிக்கப் பிறந்தவன்

பிரித்தானியாவிலுள்ள 4 வயதான நாயொன்று கயிற்றின் மீது வேகமாக நடந்து உலக சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளது. பிரித்தானியாவின் நோவிச் எனுமிடத்தில் வசிக்கும் ஜோன்ஸன் வளர்க்கும் ஒஷி என அழைக்கப்படும் 4 வயதான் நாயே உலக சாதனை படைத்தது.

நோபோல்க் நகரிலுள்ள விலங்கு பாதுகாப்பு நிலையத்தில் வைத்து ஒஷி 3.5 மீற்றர் (11.6அடி) நீளமான கயிற்றை 18.22 செக்கன்களில் எதுவித பாதுகாப்பு உபகரணங்களுமின்றி கடந்துள்ளது. நாயொன்றினால் மிகவேகமாக கயிற்றில் கடந்த சந்தர்ப்பம் இதுவே ஆகும்.

கயிற்றின்மீது வேகமாக நடந்து உலக சாதனை படைத்த நாய் கயிற்றின்மீது வேகமாக நடந்து உலக சாதனை படைத்த நாய் இது குறித்து தச்சு வேலைசெய்யும் 51 வயதான நாயின் உரிமையாளர் ஜோன்ஸன் கூறுகையில், ஒஷிக்கு முறையான பயிற்சிகள் எதுவும் வழங்கவில்லை. இணையத்தளத்தில் பார்வையிட்டே நுட்பங்கள் பழக்கப்பட்டன. பயிற்சிகளில் ஒஷி மகிழ்ச்சியுடன் விளையாடுவதுபோல செயற்பட்டது. தற்போது ஒஷி என்ன பெருமைப்படுத்தியுள்ளது.